# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—பண்டிதர் பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச] பிரமோதூத வருஷம் ஆடி மாதம் [பகுதி—எ


## பத்திரிகாசிரியர் முன்னுரை

இம்மாதமுதல் சீர்திருத்தப் பகுதியென்னும் ஒரு புதுப் பகுதியினை நமது மித்திரனில் சேர்த்துள்ளோம். இனி அதில் நம்மரபினர்க் கிடையே பழக்க வழக்க சம்பந்தமாகவும், கைத்தொழில் வியாபார சம்பந்தமாகவும் உள்ள குறைபாடுகளையும் அவற்றை விலக்கவேண்டிய சீர்திருத்த முறைகளையும் குறித்து எழுதப்பெறுங் கட்டுரைகள் பிரசுரிக்கப்பெறும்.

இம்மாதத்திய சீர்திருத்தப் பகுதியில் அன்பர் திரு. பெருமாள்சாமி முதலியார் அவர்கள் ஒற்றுமை மணத்தின் உயர்வைப்பற்றிக் கூறுகின்றார். ஒற்றுமை மணத்தினை நாம் என்றும் ஆதரித்து வருகிறோமென்பது மித்திரன் வாசகர்களுக்கும் எமது சொற்பொழிவுகளைக் கேட்டவர்களுக்கும் தெரிந்த விஷயமே. எனினும், ஒற்றுமை மணங்களின் உயர்வைப் புகழ்ந்துரைக்கும்போது, அவற்றை நடத்தும் கனவான்களுடைய அனுபவக் குறைவாலோ அவசரத்தினாலோ ஏற்படக் கூடிய சில விபத்துக்களையும் கூறுதல் எமது கடமையாகும். சாதி வித்தியாச மென்பதைக் கனவிலும் கருத முடியாத மக்கட் கூட்டத்தினரிடையே இவ் விபத்துக்கள் என்றும் நேரா. ஆனால் சாதிப்பேய் பிடித்தாடும் நமது இந்திய மக்களிடையே நடைபெறும் ஒற்றுமை மணங்களால் நாம் முன்னே குறித்த விபத்துக்கள் நேருவது அதி சகசமாக இருக்கின்றது.

ஒற்றுமை மணஞ்செய்ய விரும்புவோர் தமது முயற்சியால் தம்மோடு நெருங்கிய உறவினையுடைய பலரைப்பகைத்துக் கொள்ளநேரிடுகின்றது. இவ்விதம் அதிருப்தி யடைந்துள்ளோர் குற்றங் கண்டு தூற்ற எப்பொழுது எப்பொழுதுஎன்று காத்துக்கொண்டிருப்பார்கள். அனுபவக் குறைவாலோ அவசரத்தாலோ அல்லது பணத்தின் மீதுள்ள பெருவிருப்பாலோ ஒற்றுமை மணஞ்செய்துகொள்வோர் சிறிது சரக்கி விழநேர்ந்தால் அவரைத் தம் நெருங்கிய சுற்றத்தவரே உடனே தூற்றிநடுத்தெருவில் வைத்து விடுவர். ஆகவே ஒற்றுமை மணத்தினால் அக்குடும்பத்திற்குப் பெருமையும் உயர்வும் ஏற்படுவதற்குப் பதில், அளவிட முடியாத அவமானமும் பழிச் சொல்லும் தோன்றி, அதின் பின்சந்ததியார்களையும் தாக்கிப்பல இன்னல்களில் அமிழ்த்தும். ஒற்றுமை மணத்தால் அந்தஸ்தையும் ஆதரவையும் செல்வத்தையும் நாடப்போய், மயிர் வினைஞர் மக்களையோ ஒழுக்கந் தப்பியோர் மக்களையோ, பிணியுண்ட மக்களையோ வதுவை செய்துகொண்டு யாவராலும் ஒதுக்கி வைக்கப்பட்டு மனமுடைந்து 'ஏன் இச்சாதியில் பிறந்தோ'மென வருத்தமுறும் அன்பர்கள் பலரது அனுபவத்தினை யாம் அறிவோம். ஆகவே, ஒற்றுமை மணம்செய்யப் புகுவோர்க்கு யாம் கூற நினைக்கும் எச்சரிக்கை ஒன்றுண்டு, அதாவது: ஒரே ஜில்லாவுக்குள்ளுள்ள உட்பிரிவுகளை ஒன்றாக்கவேண்டி செய்யும் ஒற்றுமை மணங்களே தற்காலம் நம்மரபினர் இருக்கும் நிலைக்குத் தக்கதாகும். தமது ஜில்வை விட்டு வெளியே செல்ல முற்படுவோர் வெகு ஜாக்கிரதையாக செல்லுதல் வேண்டும். அவர்கள் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்துகொண்டு போவார்களானால் ஒற்றுமைமண முயற்சியே பலராலும் அதரவடையாது. ஏதோ சாதியைக் கெடுக்கவந்த ஒரு போலிச் சீர்திருத்தமாக நினைத்து இதைப் பலர் பழிப்பர். ஆகவே, ஒற்றுமை மணங்கள் ஓங்கிப் பரவவேண்டுமானால், அவற்றைச்செய்ய விரும்புவோர் வெகு நிதானமாகக் காரியத்தைத் தீர ஆலோசித்துச் செய்யவேண்டும் என்பதே யாம் இச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புவது.

ம. ச.

# சீர்திருத்தப் பகுதி

## ஒற்றுமை மணத்தினுயர்வும் செங்குந்த மணங்களிற் சில சீர்திருத்தங்களும்.

[திரு. ஐ. க. பெருமாள்சாமி முதலியார் செங்குந்த சங்கக் காரியதரிசி, பவானி]

செங்குந்த குலச் செல்வர்களே!

கொல்லங்கோட்டில் வசிக்கும் செங்குந்த குடும்பப் பெரிய விட்டார் ஒற்றுமை மணம் புரிந்து நமது மகாநாட்டுத் தீர்மானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டினை மேற்கொண்டதற்கும், அம்மணத்திற்குப் பெரு முயற்சி செய்த திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களின் முன்னேற்ற அறிவுக்கும் அதனை எடுத்துரைத்து நம்மவர்க்கு உற்சாகத்தை யூட்டிய பத்திரிகாசிரியர் முன்னுரைக்கும் நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத்தகைய மணங்கள் நடைபெற்று என்று நமது சமூகம் முன்னேற்ற மடையுமென நாம் பல நாள் எண்ணியிருந்த எண்ணம் முடிவடைந்தது. இவ்வெண்ணம் முடிவடையக் காரணமாயிருந்த தலைச் சங்கத்தின் ஆற்றலைப் பெரிதும் வியக்கிறோம். ஒற்றுமை மணங்களால் ஏற்படும் உயர்வு எண்ணிலடங்காது. நெருங்கிய உறவினர்களுக்குள் நடைபெறு மணங்கள் அடிக்கடி சச்சரவையே கொடுக்கக் கூடியதாயிருக்கின்றன. இது யாவருமறிந்த விஷயமே. ஒற்றுமை மணங்களால் அவை (சச்சரவுகள்) பெரும்பாலும் இராவென்றே உத்தேசிக்கிறோம். “ஒன்று பட்டாலுண்டு வாழ்வு”. என்பதும் ஒற்றுமையின் உயர்வை விளக்கும். அன்றியும ஒற்றுமையானது சமூக நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் முதற்படியாகு மென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

இவ்வொற்றுமை மணங்களிலும் தற்காலத்திற் கொத்தபடியும், முன்னேற்றங் காரணமாகவும் சில சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டியது முக்கியமாகும். சிற்சில ஊர்களில் பெண்ணுக்குத் தாலி கட்டுதலை உரிமைக்காரிகளாகிய பெண்களே நடத்தி வருகின்றார்கள். இது சரியான முறையா? இவ்வித மணங்களில் பிளவு ஏற்பட்ட காலத்து, மணமகன் “நான் தாலிகட்டவில்லையாதலின் நீ எனது மனைவியல்ல” எனக் கூறுகின்றனன். இதனை நாமும் கேட்டிருக்கின்றனம். இவ்வழக்கம் எமக்குத் தெரிய பவானியைச் சேர்ந்த சுற்றுப்புற ஊர்களில் சிற்சில குடும்பங்களில் இன்னும் நடந்து வருகிறது. இச்செய்கை பிற சமூகத்தினருக்கு நகைப்பை விளைவிக்குமல்லவா? இது என்ன நியதி? முன்னோர்கள் வழக்கமென்றால், தொல்காப்பியர் காலத்தில் அவ்வாறு நடக்கவில்லையே. இன்னும் பல அர்த்தமற்ற சடங்குகளும் நடைபெறுகின்றன. ஒரு சேலைகட்டி இருவருக்கும் நீர் வார்த்தல், அருகம் பொன் எடுத்தல்,; வெள்ளியும் பொன்னும் எடுத்தல் உரலின்மேல் ஆயிரப்பெருந் திரிவிளக்கு வைத்தல், முகூர்த்தப் பாலை வைத்தல், நாவிதன் மங்கலமோதல் முதலியன. இச்சடங்குகள் அவசியம் வேண்டியனவா எனக் காண்போமானால் அத்தகைய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

அன்றியும் மணம் நடைபெறும்போது யாக முதலியசெய்யப் பிராமணன் அழைக்கப்படுகின்றான். அவன் மணமகன் வாயால்மந்திர மொழிகளை யுரைக்கவும் இடங்கொடாமல் தானே யுரைத்து விடுகின்றான். அதன் பொருளை அப்பார்ப்பனனாவது உணர்வானோ அறிகிலோம். ஏழைகள் பார்ப்பனர் காணிக்கைகட்கும் அஞ்சுகின்றனர். இவர்களையொதுக்கி நமது பெரியார்களைக் கொண்டே தமிழ் மொழியில் மணமக்களால் வாக்குத் தத்தம்பெற்று மணத்தை முடிப்பது சாலவுஞ் சிறந்ததாகும். ஒற்றுமை மணத்திலும், பவானியில் க. செ. வீரப்ப முதலியார் குமாரத்தி சௌ இராமுவுக்கும், சித்தோடு செ. பெருமாள் முதலியார் குமாரன் சிரஞ்சீவி சென்னியப்பனுக்கும்சுமார் 8 மாதமுன் நடந்த மணத்திலும் பிராமணர்கள் நீக்கப்பட்டுத் தமிழ்மொழியிலே காரியங்களை நடத்தியிருப்பது இனி வரும் மணங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்குமென நம்புகிறோம். இனியேனும், நமது குலமக்கள் அர்த்தமற்ற சடங்குகளை நீக்கி, பிராமணரை ஒதுக்கி முன்னேற்ற வழியில் மணங்களை நடத்துவார்களென எதிர் பார்க்கிறோம். சித்தோட்டிலும் இம்மாதிரி சில மணங்கள் நடைபெற்றிருப்பதும் பாராட்டத் தக்கதேயாம்.

---

# சமயப் பகுதி

## வரகுண தேவரின் அன்பு

திருவாளர்-வை-சு-இராமலிங்க முதலியார், கண்டாச்சிபுரம்.

தெண்ணீர்க்கடல் சூழ்ந்திலகு மிந்நிலவுலகில், அத்திமுதலெறும்பீறாய வுயிர்க ளனைத்தினுக்கும், மேன்மையுற்றுச் சிறந்து விளங்குவது நம் மானுடப்பிறப்பேயாம். எய்துதற்கரிய விம்மானிடப் பிறப்பை யடைந்த நாம் அடையவேண்டிய புருஷார்த்தங்கள் நான்கு. அவையாவன, அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இதனை “தர்மார்த்த காம மோக்ஷ” மென்பர் வடநூலார். இந்நான்கனுள் வீடுபேறாகிய மோக்ஷவின்பமே மிக மேலானது. இதுவே யுயிர்களுக் கோய்வைத் தந்து நிரதிசயானந்த இன்பத்தை யளிக்க வல்லது. இதனை யடைய ஒவ்வொரு பெரியார்களும் பட்டபாடோ அளவிடற்கரியன. இறைவன்பா லிரண்டறக் கலக்கும் இவ்வகை யுயரிய வின்ப நிலையை யடைதற்கு எல்லாம் வல்ல இறைவனை முழுமுதற் கடவுளிடத்தே மாறாப்பேரன்பு வேண்டும். வணக்கத்தோடு கூடிய மாறாப் பேரன்பே பக்தியெனப் படும். அன்பு என்பது தெய்வீகம் பொருந்திய ஓர் அரிய குணமாகும். அன்பிற்கு யாருங் கட்டுப்படுவார்கள். கடவுளே அந்த அன்பிற்குக் கட்டுப்படுகிறார். நாம் கடவுளிடத்தும், பெற்றோர்களிடத்தும், குருவினிடத்தும், ஆன்றோர்களிடத்தும் வைக்கும் அன்பே பக்தியெனப்படும். “பக்திவலையிற் படுவோன்காண்க” என்று திருவாசக முடையார் கூறியிருத்தல் காண்க. இவ்வகையுயரிய அன்பை இறைவன்பாற் செலுத்தி மோக்ஷமடைந்த பெரியார்கள் பலர். இவ்வன்பும், தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும். இதிற் றலையன்பே சிறப்புடைத்து. இவ்வகைத் தலையன்பின்பாற் பட்டவர்கள் கண்ணப்ப நாயனார், வரகுணதேவர் முதலிய பல பெரியோராவர். கண்ணப்பரின் அன்பின் பெருமையை மணிவாசகப் பெருந்தகையார் “கண்ணப்பனொப்பதோ ரன்பின்மை கண்டபின்” என்று வியந்து கூறுகிறார். இவரது அன்பு பக்தி வைராக்கிய முதலியன பெரியபுராணம், சீகாளத்தி புராணம் முதலிய பலவகைப்பட்ட நூல்களிலுங் காணக்கிடக்கின்றன. ஆகையின் ஈண்டு நாம் எடுத்துக்கொண்டது “வரகுணதேவரின் அன்பு” என்பது பற்றியேயாம். இவர் கண்ணப்பரைப் போலவே தலையன்பின்பாற்பட்டவரெனினும், அவரைக் காட்டிலும் இவர் சிறந்தவரென்று கூறலாம். கண்ணப்பர் ஈசுர பக்தியொன்றே வாய்க்கப் பெற்றவர். இவரோ குருலிங்க சங்கமமென்னும் மூவகை பக்தியும் ஒருங்கே யமையப் பெற்றவர். வரகுணன் என்பதற்கு மேன்மையாகிய குணத்தையுடையவன் என்பது பொருள். தேவர் என்பதற்கு உயர்ந்தோர் என்பது கருத்து; பாண்டியர்களுக்குள்ள பட்டப் பெயரினொன்று. இவர் சேரமான் பெருமாணாயனார் காலத்து மதுரையிலரசாண்ட மன்னர். இனி இவ்வரகுணதேவர் என்பவர் யார்? எவ்வகையி லிறைவனுக்கு அன்பு செய்து முத்தியடைந்தார்? இவரது அன்பின் பெருமை யாது? என்பன வாதிகளைப் பற்றி யாராய்ச்சி செய்தலே நம் வியாசத்தின் முக்கிய நோக்கம். எனவே இப்பெரியாரின் ஜீவிய சரித்திர சங்கிரகத்தையும், இவர் செய்த அன்பு நெறியின் பக்திகளையும் ஆராய்வாம்.

“சந்தனப்பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தரபாண்டிய னெனுந் தமிழ் நாடனுஞ்
சங்கப் பலகையுந் தழைத்தினி தோங்கு
மங்கலப் பாண்டி வளநா டென்ப”

என்று புலவர்களா லணிபெறப் புகழ்ந்து பாடப்பெற்றதாகிய பாண்டிவள நாட்டிலே மிக்க பழமையும், மிக்க செல்வமும், மிக்க கீர்த்தியும், மிக்க தெய்வத்தன்மையும், மிக்க அலங்காரமு முடையதாய், அந்நாடெனுமங்கையின் முகத்திற்றீட்டிய திலகமதொத்து விளங்குவது நந்துவாத சாந்தத் தலமாகிய மதுராபுரியேயாகும். இந்நகர் பாண்டிய அரசர்களுக்கெல்லாம் இராஜதானியாகி நெடுங்காலம் விளங்கியது. உமாதேவியாரது அவதாரமாகிய தடாதகைப் பிராட்டியாரும், திருவாலவாயுடையாராகிய சோமசுந்தரப் பெருமானும், உக்கிரப் பெருவழுதியாகிய குமாரக்கடவுளும் உண்மையாய்த் திருமுடிசூட்டி யரசாண்ட பெருமையினையுடைத்து: பல்லாயிரம் வருஷங்களாய்ப் பல்லாயிரம் புலவர் சிகாமணிகளிருந்து, தலை, இடை, கடையெனு முச்சங்களிலும் பல்லாயிரம் நூல்களை இயற்றியும் ஆராய்ந்தும் தமிழை வளர்த்ததுமான திவ்ய திருநகர மிதுவேயாம். இது வைகைக் கரையிலுள்ளது. இது முன் கடம்பவனமாயிருந்தது. அதனை நகரமாக்கிச் சிவபெருமானைக்கொண்டு அவர் சடைக் கங்கை நீரால் சுத்தி செய்வித்தபோது அந்நீர்த் திவலைகள் அதிமதுரமா யிருந்தபடியால் அந்நகரம் “மதுரை” எனப்பெயர் பெற்றது. இத்தகைத் தெய்வீகஞ் சிறந்து நனிவிளங்கும் நமது மதுராபுரியின்கண்,

“விரும்பின கொடுக்கைப் பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரும்”

என்று பட்டினத் தடிகளால் சிறப்பித்துப் பாடப் பெற்றவரும், மேற்கூறிய தலையன்பின்பாற்

பட்டு அன்பேயுருவாய்த் திகழ்ந்தவரும், பாண்டிய நாட்டரசரேறாய் விளங்கியவரும், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளாஞ் சிவபெருமான்மீது மாறாப் பேரன்பும் சிறந்த பக்தியும் ஒருங்கே யமையப் பெற்றுச் சிறந்து விளங்கியவரும் வரகுணபாண்டிய னென்னுந் தூயோர். இவர் சந்திரகுலத்துத் தென்னவர் வம்ச பரம்பரையில் "சுந்திரேசபாதசேகர பாண்டியன்" என்னு மரசர்பெருமானின் அருமைத் திருக்குமாரர். பாண்டியகுலத் துதித்தோர் செய்த புண்ணியமே திரண்டொரு வடிவாயுதிக்கப் பெற்றவர். இவர் ஒருகால் பயிர்களை நாசஞ் செய்யும் மிருகவேட்டையின்மேற் சென்று மீளுகையில் வழியில் மெய்ம் மறந்து நித்திரை செய்யும் பிராமணனொருவன் மேல் இவருக்குத் தெரியாமலே இவர் ஏறிச்சென்ற புரவியானது மிகுந்த வேகத்திற்போகும்போது மிதித்துச்சென்றது. அதனா லவ்வந்தண னாவிதுறந்திறந்தானாக, அவனுக்குரிய சுற்றத்தினரெல்லா மொருங்குகூடி, இச்செய்தியை யரசனுக் குணர்த்த, வேந்தன் விதிவழி வந்த விக்கொலைப்பாதகத்துக்கஞ்சி மெய்விதிர் விதிர்த்து மிக்க ஆரஞரெய்தி, இறந்தானுக்குரிய ஈம விதிக்கடன்களியாவுமியற்றி, அவன் சுற்றத்தினர்க்கு வேண்டிய அளவில் செம்பொன் வாரிக் கொடுத்து, அவர்களை மகிழ்வித்துச் செலவிடுத்தனன். எனினும் அப்பார்ப்பனக் கொலையாலேற்பட்ட பிரமஹத்தியானது நம் அரசனைச் சாயைபோல் விடாது பற்றித் தொடர்ந்து அச்சுறுத்தி மனத்தின்கண் பீதியை விளைவித்து வந்தது. அதனால் சித்தப்பிரமைகொண்டு வருந்திய அரசன் அந்தணாளர்க்கு வேண்டிய ஈந்தும், திரிமூர்த்தியின் வடிவமான அரசமரத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தும், பசுக்களுக்குப் புல்முதலாயின தருத்தியும், உண்டவர்க்கு முறையே செல்வம், நோய் நீக்கம், சத்துருநாசம், புத்திரப்பேறு, யாவராலும் பூசிக்கும் மேன்மை என்னு மிவைகளைக் கொடுக்கின்ற கோசலம், கோமயம், பால், தயிர், நெய் என்னும் பஞ்சகவ்யாதிகளை யுண்டும் பசுவின் கொம்புகளைத் தோய்த்த குளிர்ந்த நீரைப் பருகியும், அகமருடண மந்திரத்தா லோமமாற்றியும், பின்னரும் பற்பல புண்ணியங்களைச் செய்தும், அப்பழி நீங்கப் பெறுமை கண்டு, நன்னெறிக்கலை வல்லோர்கள் நரபதியை நோக்கிக் கூடல் நாயகனாகிய சோமசுந்தரப் பெருமான் றிருவாலயத்தை தினம் ஆயிரத்தெட்டு தரம் வலம் வந்து வணங்கி வழிபாடியற்றின் இப் பழி நீங்கப்பெறுமென்றனர். அவ்வாறே பக்தி சிரத்தை வைராக்கியத்தோடு வேந்தன் விதிமுறையாலயப் பிரதக்கிணம் செய்து கழிபேரன்புடன் தோத்திரஞ் செய்து குறையிரந்து நிற்கையில் சர்வஜீவதயாபர மூர்த்தியாகிய சோமசுந்தரப் பெருமான் மன்னனை நோக்கி, அசரீரியாக "வளவ! நின்னன்பிற் குகந்தோம். சின்னாள் கழித்துப் பொன்னிநாடன் நின்னோடமராற்ற நினைந்தெழும். அப்போது நீயும் அவனுடன் நேர்வாய். அன்னோன் வலியிழந்து நிற்குப் புறமுது கிட்டோடும் அக்காலை நீயவனைத் துரத்திச்செல்லு மெல்லை காவிரியின் தென்சார், எண்மையா மருச்சிக்குந் தலத்தில் (இடைமருது) இப்பழியை யகற்றி யருள்வோம் கவலை யொழிவாயாக" என்று திருவாய் மலர்ந் தருளினார். அவ்வாறே பின்பொரு பகல் சோழர் கோவுடன் பொருது வென்று அவனைத் துரத்திச் செல்லுமளவில் பொன்னி நதியின் பாங்கர் பூசத் துறையடைந்து நீராடி நித்யகரும அனுஷ்டானாதிகள் முடித்து, மத்யார்ச்சுனமெனவழங்கும் திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் "ஜோதிர்மயமகாலிங்கேசுர"ரைத்தொழுவான் கீழ்க்கோபுரவாயிலைக் கடந்து உட்செல்லுகையில் பிரமசாயையும் கொடிய வன்பழியும் அரசனை விட்டு விலகியது. மாசிற்கழிந்தமணிபோல் அரசன் ஆனந்த பரவசமுற்று மருதவாணரையும் பெருநலமுலை நாயகியம்மையாரையும் மிகவும் வணங்கித் துதிக்க, நமது பெருமான் மகிழ்ந்து "தென்னவர் குலாதிப! நின்னைப் பிடித்தப் பிரமஹத்தி குணதிசை வாயிலின் பால் நின்றது. நீ யந்நெறியிற் செல்லற்க, மேலைக் கோபுர வாயில் வழியாகச் செல்வாயாக" என்றசரீரியாகப் புகன்றனர். இதனை

> என்றெதிர் நின்று போற்று மிலங்கிலை வேலினானைக்
> குன்றினை வளைத்தோன் மன்னா குணதிசை வாயிலின்பால்
> நின்றது பிரமகத்தி நீயந்த நெறியி னேகல்
> சென்றிடு மேலை வாயிற் சிறந்திடு நெறியா லென்றான்"

எனவரும் மருதவனப்புராணச் செய்யுளானறிக. இவ்வமுதமொழியைச் செவியேற்றமன்னன் பெரிது மகிழ்ந்து தரிசன முடித்து மேலைக்கோபுர வாயிலால் வெளிச்செல்லப் பிரமகத்தி தன்னைத் தொடராதது கண்டு சிவபெருமான் தன் முறையீட்டுக்கிரங்கியருள்புரிந்தனனெனத் தேர்ந்து திருவருளை வியந்து துதித்து, அப்பெருமான் மீது எல்லையிலன்பும் மிகுந்த பக்தி விசுவாசமுங்கொண்டு அத்தலத்தை விட்டு நீங்கற்கு மனமிசையாது அதிலே சில நாள் வசித்தற் கெண்ணி, தனக்கொரு வசதி (விடுதி-மாளிகை) ஏற்படுத்திக் கொண்டு அதில் வசித்து வந்தனன். இதனை யறிந்த வளவர் கோன் வெற்றிப்பாட்டினையுடைய அவ்வரகுண பாண்டியதேவருக்குத் தன் புதல்வியாகிய காந்திமதியை வதுவைமுடித்து நல்லுறவு கொண்டனன். பின்னர் வரகுணன் மருதவாணனாலயத் திருப்பணிசெய்து, குடதிசைக் கோபுரம் புதுக்கி, கூடல் நாயகனாகிய சோமசுந்தரப் பெருமானுக்கு வடதுதிசைவயினோ ராலயம் புதுக்கிப் பெருமானைப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிடேக முதலியன முற்றுவித்துத் தமது நெறியிற்றவறாது தினம் ஒன்றுக்குச் சதம் வலம் வந்து சிவாலய தரிசனம் செய்து வருவாராயினர். இங்ஙன நிகழு நாட்களிலோர்நாள் மிக்க மெலிவுடன் வலம்வரு மமையத்து மருதவாணன் மன்னனை நோக்கி, "வரகுணா வருக" வென்றது கேட்டுப் பரவசமுற்றுத் துதிக்கப் பெருமான் அவ்வன்பரை நோக்கி, "அன்பனே! நமது கயிலையின் மணிதிகழ் கொடிமுடி யொப்ப

இவனோர் சித்திரமதில் புதுப்பித்தெடுத்து அதில் நீயொருதரம் வலம் செயின், அஃதோராயிரம் வலஞ்செய்ததை யொக்கும்'' என்றனர். அவ்வாறே வரகுணன் ஓர் மதிலெடுத்து (இப்போது இது திருவிடைமருதூரில் சித்திரப் பிரகாரம்எனவழங்குகின்றது) அதில் தினம் ஒரு வலம் வந்து இறைவனை வணங்கித்துதித்து வழிபாடு செய்து வருவாராயினர். இவர் இங்ஙனம் திருவிடைமருதூரில் சிவதரிசனார்த்தம் வதிந்திருந்த நாட்களில் இவர் செய்த அன்பின் பெருமையையும், பக்தி வைராக்கியத்தையும், குருலிங்கசங்கம பக்தியையும், அளவுபடுத்திக் கூற யாவராலும் முடியாது. எனினும் இத்தகைய பெரியாரின் அளவு கடந்த அன்பின் பெருமையை விளக்கும் சில அற்புத நிகழ்ச்சிகள் ஈண்டொரு சிறி துரைப்பாம்.

(1)............அன்பே வடிவாய்த்திகழ்ந்த நம் வரகுண தேவர் ஓர் தினம் திருவிடைமருதூர் சிவாலய சந்நிதியினுள்ளே தலையோடொன் றிருக்கக் கண்டு அதனைத் தங்கையாலெடுத்துத் தம் திருகண்களிலொற்றி "உம்மைப்போல அடியனேன் தலையும்இறந்திடிலிப்பதியிற்கிடந்திடப் பெறுமோ'' என்று செப்பி மனமுருகிச் சோகத்தாழ்ந்தனர். இதனை

" மருதவட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத் தடுத்திரந்தும்''

என்று பட்டினத்தடிகள் வியந்து கூறியிருத்தலினாலுணர்க.

(2).........பின்னொருநாள் பகலில் நமது அன்பர் மருதவாணனாலயத்தில் வலஞ் செய்து கொண்டிருக்கையில் நாய்மலங் கிடத்தலைக் கண்டு, அதை முதலாம்ஆவரணத்தில் எடுப்பார்க்குத் தன் தேசத்திற் காற்கூறும் ,இரண்டாம் ஆவர்ணத்தில் எடுத்தவர்க்கு அரைக் கூறும், மூன்றா மாவர்ணத்திலெடுப்பார்க்கு முக்காற்கூறும் நான்காமாவரணத்திலெடுப்பார்க்குத் தன்தேசம் முழுமையும் கொடுப்பதாக வாக்குப் பண்ணியும், ஒருவரும் எடுக்காமையால் தேசம் தமக்கேயுடையது என வெளிப்படக்கூறி அம்மலத்தைத் தாமே தமது அருமைத் திருக்கரத்தாலெடுத் தப்புறத்தேயெறிந் தகமகிழ்ந்தனர். இதனை

" கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்று நாய்க்கட்டமெடுத்தும்''

என்னும் பதினோராந்திருமுறை வாக்கானும்

" பாலுறச்சிலர்கள் கருணையந்தடத்திற்படிந்து
போய் வலம்வரு போழ்தி
லாலயமுன்றிற் கிடந்த நாய்மலங் கண்டகற்றி
னோர்க்கிதனை நம்முலகி
னாவிலொன்றிரண்டு மூன்றொடுமுழுது நல்குவ
மெனமுறை குறித்தாங்
கேலு நால்வலங்கா றெடுத்திடக் காணானெனது
, நாடெனக் கொணவெடுத்தான்''

எனவரும் மருதவனப் புராணச் செய்யுளானுமறிக.

(3).........கோடை வெயில் மிகுத்திருந்தவோர் சமையம் ஆலய வீதியினின்ற வேப்பமரங்கள் பழுத்து வெயிலில் நிற்றலைப் பார்த்து 'ஐயோ இம்மரங்கள் சிவலிங்கப்பெருமானை யொத்ததிருவுருவங்கள் பலவற்றையுஞ்சுமந்து வெதும்புகின்றனவே' என்று மனம் பதை பதைத்து அங்ஙனின்ற மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி (விதானம்-பந்தல்) கட்டுவித்தனர். இதனை

" காம்பவிழ்த் துதிர்ந்தகனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்''

என்று சிவஞானச் செல்வராகிய திருவெண்காடநாயனார் கூறியிருத்தலினாலுணர்க. (4) மற்றொருபோழ்தில் மன்னன் நறுமணங் கமழுங் குளிர்ந்த நீரினையுடைய தடாகத்தையடைய,ஆங்குத்தவளைகளாற்று மோதையைக் கேட்டு அவைகளெல்லாம் அரனை யரகரவென் றேத்தின வென்றகமழ்ச்சி கொண்டு அவைகளுக்குப் பரிசிலாக அக்குளத்திற் கனகமுமணியுங் காசும் கலந்து களிப்புடன் வாரிச் சிந்தினான். இதனை

" குவளைப் புனலிற் றவளை யரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்''

என்று பதினோராந் திருமுறை பகருவது காண்க. மற்றுமோர்வைகலில்(5)குற்றஞ்செய்தகள்வனொருவனை நீதிபதியினுக்ஞைப்படி சிரச்சேதஞ் செய்வான் நகர்க்காவலர்கள் விலங்கிட்டுக் கொணருகையில், நமது வரகுணர் அக்கள்வனைப் பார்த்து அவனது நெற்றியிலுந் திருமேனியிலும் திருவெண்ணீறு மிளிர்தல் கண்டு அவனைக் சிவபெருமானது அடியவரென்றுன்னிக் கட்டவிழ்த்துச் சில நிதிகள் கொடுத்துமரியாதையுடன்செலவிடுத்தனர்.(6)பின்னுமோரிரவில் நரிகள் ஊளையிடுவது கேட்டவைகள் அங்கயற்கண்ணியம்மைபாகனைப் பாடிக் கூவினவென்று சிந்தித்து, அவைகளைத் தேடிக் கொணருவித்து, அவற்றினுக் கழகு பொருந்திய ஆடைகள் பலவற்றை நல்கினர். இதனை

" வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப்பித்தும்
ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடினவென்று படாம்பல வளித்தும்''

என்று வெகு அழகாகத் திருவெண்காடர் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் கூறியிருப்பது காண்க. (7) மற்றுமோருகால் நமது பெரியார் வழிபடு மொருவன் திருமஞ்சனத்துக்காக வுலரும் வளப்பம் பொருந்திய எள்ளினைத்தின்னுவது கண்டு அவனை நோக்கி, "சிவசொத்தாகிய விவ் வெள்ளினை நீ நுகர்வதென்?'' என்று கேட்க அவன், " மீண்டும மீண்டும் மருதீசனுக் கடிமையாய் வந்து இப்புவிற் பல்கால் பிறத்தலுக்காக'' வென்றனன். அதுகேட்ட நமது அன்பர் " ஐய !

அத்தகைய சிவபுண்ணியம் வாய்க்கப்பட்ட நுமக்கடிமையாய் யான் பிறந்தற்கு நீ நுகருமவ்வெள்ளிற்கொஞ்சமெனக் கீவீராக" என்று கூறி அவனெச்சில்நுகர்ந்தனர். இதனை

"வழிபடு மொருவன் மஞ்சனக்குலரு மணிவிரையெள்ளினை நுகர வழிதனிற் கண்டு பிடித்திதே தென்னவினவிமற்றவனிடைமருதின் மழுவலான்றனக்யேடிமையாய்ப் பின்னும் வந்துதித்திட வெனப்புகலத் தழுவிநின் னாளாய்ப் பிறந்திடற் கெளியேன்றருகென்றேற்றவ னெச்சினுகார்தான்"

(8) எனவரு மருத வனப் புராணத்தானுணர்க. பின்னொருதினத்திரவில் தனக்கு வேத விதிப்படி மணஞ் செய்விக்கப்பெற்ற பாரியாளாகிய காந்திமதியென்னுங் கவின்கொள் கோமளப் புதுமலர்ப் பூங்கொடியை, சிற்றிடை நெடுங்கட்சேடியர்கள் ஆடை யாபரணதிகளால் அலங்காரஞ் செய்வித்து நன்முகூர்த்தநாழிகையில் முதலாக சாந்திகல்யாணஞ் செய்வித்தற் பொருட்டு அரசன்பக்கல் விடுத்தேகினர். அப்பெண்ணமுதின் பேரெழில் உறுப்பு நலங் கண்ட மன்னன் இவள் நம்மருதவாணனுக்கே கொடுத்திடத் தகுவளென்றெண்ணிச் வார்ப்பணஞ் செய்விக்கக்கருதியவளை யவ்விரவிற்றானே பிறரறியாது மருதவாணனாலயத்திற்சென்று திருகாப்பிட்டிருக்குங் கதவருகில் நின்று கொண்டு "மருதவாணா!" என்றன்போடழைத்தனர். உடனே அம்மணிவாயில் தானே திறக்கப்பட்டு 'வரகுணா வருதி" என்னுமிறைவன் திருவாக்கெழுந்தது. அரசன் மருதரை வணங்கித்துதித்து "எங்குலப்பெருங்கடவுளே! அழகின்மிக்க யிம்மெல்லி நல்லாள் நினக்கே தகுவளென்றெண்ணி யவளை நின்வயிற் றந்தனன். அவளையேற் றங்கீகாரஞ் செய்தருளுவீராக" என்றிரந்தனர். அவரதன்புக்கிரங்கிய பெருமான் அப்பெண்மணியைவிழுங்கியுட்கொண்டுதொடியணிந்த அவள் கரமொன்றினைமட்டும் விழுங்காமல் வெளித்தோன்ற வைத்திருந்தார். மன்னன் றன் கோயில்புக் குறங்கினன். பொழுதும் புலர்ந்தது. வழக்கப்படி அர்ச்சகன் கோயிற் கதவைத்திறந்து உட்செல்லுகையில் மூலட்டானத்தில் மூர்த்தியின் றிருமுடிமேல் அழகிய பெண்கொடியின் கரமொன்றிருக்கக் கண்டு, இறும்பூ தெய்தி வியக்க விச்செய்தி யூரெங்கும் பரவிற்று. பல்லாயிரக்கணக்கான ஜனங்களும் அன்பர்களும் இதனைப் பார்க்க வந்து குழுமினர். அன்பின் வடிவமாய் நம்மரசனும், அங்கணுற்று மருதவாணனைப் பணிந்து போற்றித் துதித்து "பரமநாயகனே பாவியேன் தொட்ட கையென்றுன்னியோ தேவரீர் கையை மட்டில் விழுங்காமல் விட்டது" என்று வாய்விட்டலறினன். இறைவன் "மன்னா! நின்மனங்கவலற்க! நின்னன்பையுலகினர்க் குணர்த்துவான் விரும்பியே இவ்வாறு செய்தேம். நீ பண்டு போல் மதுரை யெய்தி அரசுபுரிந் தினிதிருத்தி. ஆங்கு யாம் யாவரும் அடைதற்கரிய பதத்தையுமக்கருளிச் செய்கின்றோம். மகிழ்வாயாக" என்று திருவாய்மொழிந்தருளினார். உடனே அத்திருக்கரமும் சிவலிங்கப் பெருமானில் மறைந்தது. ஆங்கு குழுமியிருந்தோரெல்லாம்மிக்க ஆச்சரியமும் அச்சமுங்கொண்டவராய்ச் சிவபெருமான் றிருவருளின்றன்மையை நோக்கி வியந்து நின்றனர். தேவ துந்துபியொலிக்கப் புவியோர் போற்ற விண்ணோர் மலரின் மாரி தூவினர். இஃதிங்ஙனமாக, பின்னர்மதுரையடைந்த மன்னன் சில நாட்சென்று சிவலோகத்தைக்காண அவாக்கொண்டனர். இஃதுணர்ந்த கூடல்நாயகன் திருநந்திதேவரையழைத்து நம்மன்பருக்குச் சிவலோகத்தைக் காண்பிக்குமாறு கட்டளையிட்டனர். அதுபடியே சிவலோக தரிசனஞ் செய்து ஈற்றில் நமது வரகுணர் பொன்றாப் பெருவாழ்வாகிய நிரதிசயானந்த இன்பமுத்தியையடைந்தனர் என்பது சரித்திரம். விரிக்கிற் பெருகும்.

ஆகையால், சகோதர! சகோதரிகளே! சிவத்தோடிரண்டறக்கலக்கு மின்பமுத்தியை ஈயவல்லது இத்தகையுயரிய அன்புநெறியேயாம் "அன்பே சிவமாயமர்ந்திருப்ப ரே" என்ற வாக்கு மிங்கு நோக்கத்தக்கது. ஆதலின் அன்பு நெறியின் பெருமையை யுலகினர்க்குவெளிப்பட நடத்திக்காட்டிய இவ்வரகுணப் பெரியாரைப் பின்பற்றி நீங்களெல்லோரும், எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாஞ் சிவபெருமானிடத்து (உங்கள் வழிபடு கடவுளிடத்து) மாறாப் பேரன்புபூண்டு பக்தி நெறி வழாது மிக்க சிரத்தையுடன் வைராக்கிய குணசீலராய் வழிபாடாற்றி இறைவன் றிருவடிப்பேற்றையடைமுன்வருவீர்களாக. இதற்கு நம்வடிவேலிறை மனமகிழ்ந் தருள்புரிவானாக. சுபம். சுபம்.

## திருமண நன்கொடை

1

சென்னை புதுப்பேட்டை திரு. சேஷாசல முதலியார் அவர்களது திருமகள் கலியாணத்தின் போது (3—7—30) நமது மித்திரனுக்கு நன்கொடையாக இரண்டு ரூபாய்கள் அளிக்கப் பெற்றன.

2

பிரமோதூதஸு ஆனிமீ 18உ திருச்செம்பொன்பள்ளிநாடு ஜவுளிவியாபாரம் திருவாளர் இ. அ. அண்ணாமலை முதலியாரவர்களின் கிரஹத்தில் தனது சிரேஷ்ட குமாரத்தி திருநிறைச் செல்வி விசாலாக்ஷி யம்மாளுக்கும், சீர்காழிநாடு தலைக்கிராமம் திருநாங்கூர் திரு. குருசாமி முதலியாரவர்களின் குமாரர் சுயம்புலிங்க முதலியாருக்கும் நடந்தேறிய திருமணத்தில் அங்கு விஜயஞ்செய்திருந்த கீழையூர் அ. சொக்கலிங்க முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்க நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பெற்றது ரூபா 2—0—0 (இரண்டு)

இவர்களின் குலாபிமானம் பாராட்டத் தக்கதோடும் மணமக்கள் நீடூழி வாழ்ந்திருப்ப ளாக. சுபம்.

# அறிவியல் பகுதி

## பூமியியற் சாத்திரம் (Geology)

திரு. மு. த. வேலாயுதம், புதுவை.

பூமியியற் சாத்திர மென்னும் இத் தொடர் மொழி பூமி, இயல், சாஸ்திரம் என மும்மொழிக ளாகப் பிரிக்கப்படும். அதாவது பூமியினது தன் மையைப் பற்றிப் புகலும் சாஸ்திரம் என விரியும்.

### பூமியின் தோற்றம்.

நாம் உலாவும் பொழுதோ அல்லது யாத் திரை செய்யும் பொழுதோ பூமியைக் கவனிப் போமாயின் அது சமபாகமாய் இல்லாது பலவிதத் தோற்றமாய்க் காணப்படுகின்றது. ஓரிடத்தில் சம பூமியாய்க் காணப்படுகின்றது. மற்றொரு விடத் தில் மேட்டுத் தாக்காய்த் தெரியக் கிடக்கின்றது. சில விடத்தில் குறுகிய ஓடைகளும் பெரும் ஓடை களும் பாதாளத்திற்கு வழியீதெனக் காட்டுவது போல் காணப்படுகின்றன. ஒரு பக்கல் நன்மை பணிப்பவர் வானுல கேகுவர் தீமை பணிப்பவர் கீழுலகெய்துவர் என்னும் மொழியை முற்றிலும் மாந்தர்க் கறிவிப்பனபோல் உயர்ந்த சிகரங்களு டைய மலைகளும் மிகவும் ஆழமுடைய கணவாய் களும் அமையப்பட்டிருக்கின்றன. இத்தகைய அமைப்பின் தன்மையை, ஆகாய விமானத்தின் மீதோ அல்லது உயர்ந்த மலையின் சிகரத்தினின் றோ கவனிப்போமாயின், பரந்த பூமியில் இறை வனது மாட்சியும் இயற்கையின் காட்சியும் தெற் றென விளங்கும். உண்மையாகவே. நாம் ஆச்சரி யப் படுவதுந் தவிர, பாதாளம் வரையிற் செல்லும் பள்ளமும் வானளாவும் சிகரத்தையுடைய மலையும் ஏதோ ஒரு தேவதையினால் ஆக்கப்பட்டவெதனக் கருத நேருமென்பது திண்ணம்.

இவ்வித அமைப்பையுடைய பூமி பல கண்டங் களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கண்ட மும் சமுத்திரங்களாலும் கடல்களாலும் சூழப் பட் டிருக்கின்றன. கடல் யாத்திரை செய்த அறிஞர் பலர், இவ்வுலகிலுள்ள கடல்களின் விஸ்தாரம் நூற்றுக்கு எழுபத்துமூன்று பங்கென்பதும், மற் றைய இருபத்தேழுபங்கு நிலத்தின் விஸ்தார மென்றும் கணக்கிட்டிருக்கின்றனர்.

மற்றும் உலகத்தைச் சுற்றிப் பார்த்த சில சாஸ் திரிகள் பூமி ஒரு பெருத்த கோளமென்று திறம் படக் கூறியிருக்கின்றனர். பூமிக்கு இரண்டு துரு வங்களும் (Poles) மத்திய ரேகை (equautor) ஒன்றும் இருக்கின்றன. துருவங்களினிடையே பூமி யிற் குறுக்களவு (diameter) 6356 கிலோ மீட்டர் அதாவது ஏறக்குறைய 3160-மைல் என்றும், மத் திய ரேகையின் மீது பூமியில் குறுக்களவு 6378 கிலோ மீட்டர் 3200 மைல் என்றும் கணக்கிடப் பட்டிருக்கின்றன.

இக்கோளம், வட அர்த்த கோளமென்றும் தென்னர்த்த கோளமென்றும் பிரிக்கப் பட்டிருக் கின்றது. வடார்த்த கோளத்தில் தான் மிகுதி யான கண்டங்கள் காணப்படுகின்றன.

ஆசியா, ஐரோப்பா, (புதிதாய்க் கண்டுபிடிக்கப் பட்ட) அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா என்னும் இவ்வைம்பெருங் கண்டங்களில் பற்பல மலைகள் உண்டு. எனினும் ஆசியாக்கண்டத்தின் ஒரு பாகமாகிய இவ்விந்தியாவின் வடக்கிலிருக்கும் எவரெஸ்ட் (Everest) என்னும் இமயமலையின் சிகரமே உலகத்தில் உள்ள மற்றெல்லாப் பர்வதங் களினும் பெரியது. அதன் சிகரத்தின் உயரம் 27,002 அடி.

சமுத்திரத்தில் அநேக ஆழமான பள்ளங்கள் உண்டு. கரோலைன்ஸ் (Corolines)என்னும் தீவின் பள்ளம் 9600 கெஜம் ஆழமுள்ளது. அதிக ஆழ மான பள்ளத்தாக்குகள் சமுத்திரங்களின் நடுவில் இல்லை. முற்றிலும் கரைகளின் கெடுகே தான் காணப் படுகின்றன.

இப்பொழுது சமுத்திரத்தை விட்டுப் பூமியை நோக்குவாம். திரளான ஆகாயம் பூமியைச் சுற்றிச் சூழ்ந்திருக்கின்றது. அந்த ஆகாயத்தில் பற் பல வாயுக்கள் இருக்கின்றன. நூற்றுக்கு இருபத் தொரு மடங்கு பிராணவாயுவும், 78 பங்கு சுவாசிக் கக் கூடாத (Azote)எஜவுட் என்னும் வாயுவும் அர் கான் (Argon) என்னும் வாயுவும் நீராவியும் கலந் திருக்கின்றன. பூமியின் மீது வியாபித்துள்ள ஆகாயத்தின் கனம் அவ்வளவு தெளிவாய்க் கணக் கெடுக்கப் படவில்லை. எனினும் ஏறக்குறைய 60 மைல் என்று யூகிக்கப் படுகின்றது.

பூமியானது பலவிதகற்களினாலும், சமுத்திரம், எரிகுளம் முதலிய நீர் நிலைகளினாலும் சூழப்பட் டுள்ளது. மற்றும் பூமியின் கீழ் செல்லச்செல்ல உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஆனால் தரை மட்டத்திற்கு 10 கெஜம் ஆழத்தில் பூமியின் உஷ்ணம் மாறாதிருக்கும். அப்பொழுது உஷ்ணம் 10 டிக்ரி 8 மினிட் ஆகும். பிறகு கீழே செல்லச்செல்ல உஷ்ணம் பெருகிக்கொண்டே வருகிறது. ஆகையினாலேதான், ஆழமான இடங் களிலிருந்துவரும் ஜலம் மிகவும் சூடாய் இருக்கின் றது. கிரெனெல்லி (Grenelle) என்னும் ஊரில்

548 கெஜம் ஆழமுள்ள கிணற்றின் ஜலம் 27 டிக்ரி 7 மினிட் என்றும், ராஜ்போர்ட் (Rochefort) என்னும் நாட்டில் 816 கெஜம் ஆழமுள்ள குழாய் கிணத்தின் ஜலம் 41 டிக்ரி உஷ்ணம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு ஜலம் ஆழத்திலிருந்து வருகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஜலம் சூடாயிருக்கின்றது. இவற்றால் பூமியின் உஷ்ணம் எங்கும் ஒருபடித்தில்லை யென விளங்குகின்றது.

சுரங்கங்களிலும் இவ்விதமாகவே தான் உஷ்ணத்தின் அளவை கணக்கெடுத்திருக்கின்றனர். 554 கெஜம் ஆழமுள்ள டர்சி (Torcy) என்னும் ஊரில் உள்ள சுரங்கம் 28 டிக்ரியும், சேந்த் காதர்ட் (Saint-Gothard) என்னும் இடத்தில் உள்ள சுரங்கத்தின் உஷ்ணம் 35 டிக்ரி யெனவும் யூகிக்கின்றனர். ஒத்சிலேஜி (Haute Silesia) னும் நாட்டில் பருஷோவித்ஸ் (Paruschowitz) என்னும் ஊரில் 2000 கெஜம் ஆழமுள்ள இடத்தில் 69 டிக்ரி 3 மினிட்டாம்.

இவ்வாறு பலவிதத்தானும் கவனிக்கும்பொழுது சுமார் முப்பது கெஜம் ஆழத்திற்கு 1 டிக்ரி ஏறுகின்றதென யூகிக்கக் கிடக்கின்றது. இந்த முப்பது கெஜ உயரத்திற்கே ஜாமெட்ரிக் டிக்ரி (Geometric degree) என்று பெயர். இக்கணக்குப்படி 30 மைல் ஆழத்தில் 2000 டிக்ரி உஷ்ணமாகின்றது. இதனாற்றானே ஒரு பொருளும் அத்தகைய ஆழத்தில் உருகாமலிருக்காது எனத் தெரிகின்றது.

இதனால் பூமியில் காணப்படும் சமுத்திரம், மலை, கற்கள் முதலிய பொருட்கள் 30 மைலுக்குள்ளாகவே தான் வியாபித்திருக்கின்றனவென விளங்குகின்றது. இஃதையே பூமியின் மேற்போர்வை 30 மைல் எனப் புகல்வர்.

இவ் வெல்லைக்குக் கீழாக, அக்கினிஆறு என்ன அவ்வளவு உஷ்ணத்தினால் குழம்பி ஜலபதார்த்தமாய்க் காணப்படுகின்றது.

இஃதையே பலவாற்றானும் சிறந்து விளங்கின நம் பண்டையர், எமலோகத்தில் எமனின் சிங்காதனத்திற்குமேல் ஒரு மயிரினால் தொங்கப்பட்ட ஒரு பர்வதம் உண்டென்றும், கீழே பாதாளத்தில் அக்கினி ஆறு உண்டென்பதும், இயமன் சிறிது பிறழ்வானானால், முன் கூறப்பட்ட மயிர் அறுந்து இயமன் தலையில் பர்வதம் விழுந்து, பின் அவன் அக்கினி யாற்றில் விழுவான் எனக் கூறினர் போலும். இஃதை நன்றாகக் கவனிப்போமாயின் அவர்கள் பாதாளத்தில் உண்டென்று கூறிய ஆற்றை இற்றை நாள் ஒரு சிலர் ஏதேது, பாதாளத்தில் அக்கினி யாறேது, கிக்கினியாறேது என வசை மொழிவர். நிற்க முன் கூறியவற்றை யோசிக்குமிடத்து அக்கினி ஆறுகள் உண்டெனத் தெரிகின்றோம். மேலும் நம் முன்னோர்கள் அக்கினியாறு உண்டென்று கூறியவற்றால், அவர்கள் எத்தகைய ஆராய்ச்சிக்காரர்களாயிருக்கவேண்டும் என்பதைப் பற்றி, நவீன ஆராய்ச்சிக் காரர்களின்உண்மையைக் கொண்டு உணர்வோமாக.

(தொடரும்)


# மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா **8** தபாற் செலவு அணா **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
சென்னை.




## மாணவர் துயரமும் பிரமுகர் கடமையும்

[ஒரு துயருறும் செந்தந்த மாணவர் எழுதியது.]

அன்பார்ந்த ஆசிரியரே,

நமது மித்திரனின் வருகிற மாதத்திய அதாவது ஆடிமாதத்திய மலரில் இச்சிறு வியாசத்தைப் பிரசுரிக்கும்படி வேண்டிக்கொள்கின்றேன். மேற்படிக்க ஆசையிருந்தும் படிக்க முடியாமல் வேலையில் புகுந்து ஏதோ ஜீவனம் செய்யும் எனக்கு இந்த ஜூன், ஜூலை மாதங்களில் இம்மாதிரி ஒரு மன வருத்தமும் ஆவேசமும் வருவது வழக்கம். மாணவரிடையே யுள்ள கஷ்டத்தை நிவர்த்திக்க வழி செய்யலவசியம் ஆதலின், இவ்வியாசம் நமது மித்திரனில் வெளிவருவதால் ஏதோ சிறிது விமோசனம் ஏற்படும் என்று நம்பி வரையலானேன்.

### மாணவர் நிலை

மாணவரின் வாழ்க்கையில் அதிக முக்கியமான நாட்கள் நெருங்குகின்றன. ஒரே வழக்கமாய் காலை முதல் மாலை வரை யந்திரங்களைப்போல காரியங்களைச்செய்யும் காலம் கடுகிவந்துவிட்டது. மனம்போனபடி மதோனமத்தமாய்த் திரிந்த சில வாரங்கள் முடிந்துவிட்டன. புது வருடம், புது வழக்க ஒழுக்கங்களும், புது நெறிகளும், புதுத்தீர்மானங்களும் நூதன இலட்சியங்களும் மனத்தகத்திலே பொங்கி நிற்கும் காலம் சமீபித்து விட்டது. தங்கள் நாட்களை வீணே கழித்த மாணவர் மனத்தில் திகிரெனும்படியும், தங்கள் கடமையைச் செவ்வனே செய்து வந்தவருள்ளத்தில் கலகலவென்று சந்தோஷமுண்டாகும்படியும், சந்தேகப்பேர்வழிகளின் சந்தேக சங்கோஜங்களைச் சடுதியில் சங்கரிக்கும்படியும் ஜூன்மாதம் சுறுசுறுப்பாய் வந்துவிட்டது. பள்ளிக்கூடங்களும், பாடகூடங்களும் கலாசாலைகளும் திறக்கும் காலம் வந்துவிட்டது. இச்சமயத்தில் தங்கள் வேலைகளைச் செவ்வையுறச் செய்தவர் யாவரும் எதிர்கால வாழ்வை எதிர் நோக்கி நிற்பர்.

சில மாணவர் சாஸ்திரக் கல்லூரியிலிருந்து தொழிற் கலாசாலைகளுக்கும், வேறு சிலர் உயர்தர பாடசாலைகளிலிருந்து கல்லூரிகளுக்கும் செல்ல முற்படுவர். மற்றுஞ்சிலர் மத்தியமத்திருந்து உயர்தரத்திற்கும், கீழ் தரத்திலிருந்து மத்தியம பாடசாலைக்குமாகச் செல்வாராவர். சில சிறார்கள் புதிதாகப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவரப்படுவர். இத்தகையோரில் மேற்கல்வி விரும்பிக் குதித்தெழும் மனம் உடையோர் சிலரும், ஏதோ படிக்கலாம் என்ற அசட்டையர் சிலரும், படிக்க நம்மால் ஆகாது என்ற சோம்பேறி அவநம்பகர் சிலரும், மேல் படிக்க நம் குடும்ப நிலைமை விடாதே என வருந்தும் பலருமாக இருப்பர். இவர்களில் பலருள்ளங்களும் பலவித யோஜனைகளில் ஆழ்ந்துவிடுகின்றன. எவ்வகை மேற்படிப்பை மேற்கொள்ளலாம் எனச் சிலரும், எத்துறையில் செலவு குறைவெனத் தேடும் சிலரும், படித்த பின் உத்தியோகம் வழங்கும் கல்வித்துறை எதுவென்று பலரும் சிந்திப்பர். நிலைமைத் தாழ்வையுணர்ந்த சிலர் இனி படிக்கவியலாது எனக் கண்டதும், எவ்வேலைக்கென்றும். எங்கென்றும் கவலையுடன் தேடி அடிப்போடுவர்.

### இம்மாணவர் பெற்றோர் மனோநிலை

இந்நிலையில் மாணவர்களின் பெற்றோர் மனோநிலை மிகவும் முக்கியமாய்க் கவனிக்கற்பாலது. செல்வவந்தரான சிலர் தம்மக்கள் தேறுவர்; அவர்களை மேற்படிப்புக் கனுப்பலாம்; இக்கால நாகரீகமும், நடையுடை பாவனைகளும் பட்டங்களும் பெற்று வரட்டும் என்று எண்ணுவர். இக்கல்வி சாலச் சிறந்தது என்று கூற வியலாதேனும் ஒன்றுமில்லாமல்

வீணே மூடத்தனமும் அற்ப ஆடம்பரமும் தவிர்ந்து சிறிதாவது விசாலமான நோக்கங்களும், நல்லொழுக்கமும் ஏற்படும் என்று நம்பியே இம்மேற்படிப்பைச் சிலாகிக்கிறோம். கல்வியின் போக்கைக் குறை கூறுவதினும் கற்போரின் மனப்போக்கைத் திருத்துவது சாலச்சிறக்கும். எப்படி காற்றானது பூந்தோட்டத்தினூடே சென்று வெளிவருமாயின் நறுமணங் கமழ்ந்தும், கக்கூஸ்ஸில் நுழைந்து வரும்போது துற்நாற்றங்கொண்டுமிருக்குமோ, அத்தகைமைத்து கல்வியின் போக்கும் மற்றெவ்விதப் பயிற்சியும். வேறு சிலர், ஏதோ மகன் படிக்கிறான்; அவன் சக்திவரை அவனைப் படிக்கவைப்பது என்றிருப்பார். வேறு சிலர் நமது பூரண சக்திகொண்டு

“ தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் ”

என்ற பொய்யாமொழியைப் பின்பற்றுவர். மற்றுஞ் சிலர், அநேகர் படித்துப் படித்து வேலையில்லாமல் கையிலுள்ளதைச் செலவிட்டுவிட்டுத் திண்டாடுவது போதாதா? நம் மகனும் படித்து என் துன்புறவேண்டும்? நம் தொழிலையாவது வியாபாரத்தையாவது கவனித்து வந்தால் போதும் என்று பொருளீட்டலில் புகுத்துவர். வேறுபலர் பணத்திற்குங்கேடாய் படிப்பானேன்? ஏதாவதோரு உத்தியோகத்திலோ தொழிலிலோ பணம் சம்பாதிக்கட்டும் என்று மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மக்களைக் கண்டித்துவிடுவர். மேற்படிப்பை ஆவலுடன் எதிர்பார்க்கும் மாணவற்கு இத்தகைய பெற்றோர் வாய்க்கின் எங்ஙனமிருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்வார்களாக. இவ்வித சந்தர்ப்பங்களில் ஏற்படும் துன்பங்களைப்பற்றி நமது நண்பர் திருவாளர் ஜெ. தங்கவேலவர்களின் கட்டுரைகளாலுணர்க.

பிறஜாதி மாணவர்களில் சில பகுதியோர் ஏழைகளாயிருப்பினும் (முக்கியமாய்ப் பிராமணரில்) செல்வவந்தரான புத்திரிகளுள்ள சிலர், படித்த, படிக்கும் வரன்களைத் தேடி மணஞ் செய்துவைத்து அன்னாரைத் தமது புத்திரிகளின் பிற்காலச் சுகத்திற்காகத் தமது சொந்தச் செலவில் மேற்கல்விக்கனுப்புகின்றனர். மற்றுஞ் சில மாணவர், மாமா, அம்மான்சேய், சிற்றப்பா, பெரியப்பா, அண்ணாருடைய மக்கள் என்றவித முறை கொண்டாடிக் கெஞ்சிக்கூத்தாடி அவர்கள் செலவில் படிப்பர். மற்றுஞ்சிலர் ஏழெட்டுப் பெரிய பணம் படைத்த மனிதர்களிடம் இரந்துண்டு, நாளைக்கொருவர் வீடாய்ச் சாப்பிட்டு உண்டி உடுக்கை ஏற்றுத் தெரு விளக்கில் படித்து முன்னேறுவர். இத்தகைய தீவிர அவாவும், முன்னேறு முயற்சியும், உயர்ந்த ஸ்தானத்தை அடைய ஊக்கமும் நம் நாட்டில் பிராமணரிடம்போல் மற்றெவரிடமும் காண்டலரிது.

நம் செங்குந்த மாணவருள்ளோ படிப்பவர் தொகை மிகவும் அவமானம் தரக்கூடியது. ஆறு லட்சம் பேருடைய ஜன சமுதாயத்தில் இருகை விரல்களாலும் எண்ணி விடக்கூடிய தொகையினர் படிக்கின்றனர் என்று எழுதவும் கைகூசுகின்றது. இத்தொகையோரில் செல்வவந்தரா யுள்ளோர் மேற்படிப்புக்கு வருவதே அபூர்வம். அவ்வளவிற்கு வருவதற்குள் மூன்று நான்கு வகுப்புக்கள் வந்ததும், கையெழுத்து நன்றாகப் போடத்தெரிந்தால் போதுமென்றும், மற்றவையெல்லாம் குமாஸ்தா எழுதிவிடுவானென்றும், தம்பிப் படித்தது போதுமென்று நிறுத்திவிடுகின்றனர். அதற்கேற்றவாறு ஒரு டாம்பிக திண்ணைத் தூங்கித் தம்பியாயிருந்தால் அவன் மேற்படிப்பு அதோகதிதான். இவ்வகையினர்களுக்குக் கல்வியென்றால் உத்தியோகத்திற்கும் செல்வத்திற்கு உபகரணம் என்றும், தங்களுக்குச் செல்வமும் சௌக்கியமும் கல்வியின்றியிருத்தலால் அது அநாவசியம் என்றும் தோன்றுகிறது. தங்கள் செல்வம் சுகம் என்பதைத் தவிர உலகில் இவர்களுக்கு வேறு இலட்சியமேயில்லை. தம்மவர், பந்துக்கள், ஊரார், சமூகத்தார், நாட்டார், வர்க்கத்தார் என்னும் பல்லோரும் படுந் துன்பங்களை நிவர்த்தித்தல் தமது கடமையென்பது கனவிலும் அத்தகையோர்க்குத் தோன்றுவதில்லை. கல்வியறிவு தம்மக்களுக்கு பொதுத்தொண்டாற்றுவதற்கு இன்றியமையாதது; பணம் சம்பாதிப்பது ஒன்றுமட்டுந் தான் படிப்பின் நோக்கமல்லவென்பது அவர்கள் மனதிற்கு எட்டுவதேயில்லை. ஆகையால் இத்தகையோருக்கும் மற்றையோருக்கும் தம் மக்களை மேற்படிப்புக்கு அனுப்புவது தேச சமூக நலங்களுக்கு அவசியம் என்று அறிவித்து அனுப்பச் செய்தல்வேண்டும். செல்வவந்தரானவர் தம்மக்களையும் மற்றும் பலரையும் தம் சக்திக்கேற்றவாறு உதவிசெய்து அனுப்பல் கடமையாகக் கொள்ளல்வேண்டும்.

.பல மாணவர்கள் தங்கள் குடும்பக் கவலைகளால் துன்புறுத்தப்படுகின்றனர். வீட்டில் செலவதிகரிக்கவும், வருவாய் சுருங்கவும் குடும்ப நிர்வாகப்பொறுப்பு தங்கள் தலையின் மேல் விழவும், சுயமாக ஏதாவது ஒரு காரியத்தையோ தொழிலையோ செய்ய முதலில்லாமலும், உத்தியோக மேற்கொள்ள சிபார்சுகளும் தகுந்த படிப்பும் இல்லாமலும் அவர்கள் மனதில் எழும் கவலையும் கவிழும் மனோவியாகூலமும் செப்பத்தரமானதன்று.

படிக்கவோ ஆசை; குடும்பத்திலோ கவலை; நிலைமையோ ஏழ்மை; பணம் தேடவோ வழியில்லை யென்றவாறு நிற்கின்றனர். சிறிது சிறிது கஷ்டப்பட்டு அன்னார் முன்னுக்கு வருவதற்குள் அவர்கள் வயோதிகர்களாய்விடுகின்றனர்.

இவ்விதமாகப் பற்பல நிலைமைகளிலுள்ள பலபல மாணவர்களின் கதிகளை யோசித்துப் பாருங்கள். நம் சமூகத்தில் இவ்விதம் துன்புறும் மாணவர்களே பெரும்பான்மையோர் என்று நான் திட்டமாய்க் கூறுவேன். நமது கிராமங்களிலோ நான்கு வீட்டார் இருந்தால் அதில் மூன்று கக்ஷிகளிருக்கும். சுகாதாரத்திற்கும், ஒற்றுமையான கூட்டுறவுள்ள வாழ்க்கைக்கும் வேண்டிய பொது அறிவு கூட இல்லாமல் இருக்கின்றனர். இதற்கெல்லாம் சிறு வயதிலிருந்தே நம் சிறார் மாணவர்களிடையே நற்குணங்களும் சேர்ந்து வாழும் வழக்கங்களையும் பழக்கிவிடல் அவசியம். ஏனெனில் இன்றைய சிறுவர்களே எதிர்காலப் பெரியோரும், பிரமுகரும், தலைவருமாவார். ஆதலால் இவர்களுக்கு மேலான நோக்கங்களையும் பழக்க வழக்கங்களையும் புகட்டி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால்தான் பின் வரும் உலகம் சந்தோஷம், ஒற்றுமை, செல்வாக்கு முதலிய நலன்களைப் பெற்றிருக்கும்.

ஆதலால் விரிந்த பரந்த நோக்கங்களும், நல்ல மனப்போக்கும், அருங்குணமும் பெறும்படியாக நமது செங்குந்த மாணவர்க்கு கல்வியறிவூட்டல் வேண்டும். மகம்மதியர் மகாஜன சபையில் அவைத்தலைவர் ஆரம்ப மொழியில் கூறிய அருள்வாக்குப் பின்வருமாறு:—

“நம்மவரிடையே ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் எல்லோரும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கல்வி கற்க வேண்டும். இது ஒன்றுதான் நமது பெருங்குறை. இக்குறை தவிர்ப்பின் நம்மவரிடையேயுள்ள சகல துர்ப்பழக்க வழக்கங்களும் தப்பிதமான குழப்பங்களும், இன்னல்களும், மற்றெல்லாக்குறைகளும் சூரியனைக்கண்ட பனி போல இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிடும்.”

ஆதலின் நம்குல சிகாமணிகளே, செல்வந்தர்களே, பிரமுகர்களே, வர்த்தகப் பிரபுக்களே, உத்தியோகத்திலுள்ள பெரிய மனிதர்களே, பெருங்குணம் படைத்தவர்களே, நீங்கள் எவ்வளவோ பொருளைச்செலவிட்டுச்சத்திரங்களும், கோவில்களும், சாப்பாட்டுச் சாலைகளும், குளங்களும், வேல்களும், தேர்களும் செய்துவருங் காரியங்களைவிட ஒருசில மாணவர்களையாவது நம்மவர் குலத்தாரை முற்போக்கான கல்வித்துறையிலே மேல் பயில உதவி நம்மவரை முன்னணிக்குக் கொண்டு வருவது ஆயிரமடங்கு சிறந்ததாகும்.

ஆதலால் நம்மாணவர்களுக்கு உண்டி, இருக்கை, உடுக்கை யளித்து அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு புத்தக, பள்ளிக்கூடச் செலவுகளுக்கு உதவி, அன்னாரை முன்னேற்றுவீராயின் நம் சமூகமும் நம் நாடும் செழிப்புறும் என்பது திண்ணம்.

செல்வம் ‘செல்வோம் செல்வோம்’ என்று கூறி, “ஆறிடுமேடு மடுவும் போலாம் செல்வம்” என்றபடி ஒருவரிடத்தும் நிலைத்தங்காமையால், இருக்கும்போதே அதையுள்ளார் பலருக்கு உதவி பிறவிப் பெரும்பயனை'யெய்துவாராக.

ஒரு அறிஞர் “நாம் அறிவையும் ஆற்றலையும் பெருக்கும்போது என்றென்றும் நிரந்தரமான வாழ்க்கை யுடையோம் என்று எண்ணியும் பிறருக்குச் சகாயம் செய்வதிலும் தம் குணங்களைச் சீர்படுத்திப். பலருக்கு உதவுவதிலும் ‘இன்றைக்கிருப்பாரை நாளைக் கிருப்பாரென்று எண்ணவோ திடமில்லை’ என்றபடி காரியங்களை இன்றே அதுவும் இன்னே செய்தலவசியம்” என்ற தீர்க்க மொழியின்படி நடத்தல் வேண்டும். இதையனுசரித்து நிதிபடைத்தோர் தமக்குப் பொருள் படைத்த கடமை மற்றவர்க்குதவவே என்று அறிந்து நடப்பர் என்று நாம் நம்புகின்றோம்.

## செல்வமுள்ள மாணவர்கள்

நமது செல்வவந்தரின் வாலிபர் பலரும் பெரும்பான்மையோர் அமிதமாகச் செலவிட்டு மன உடல் நலன்களைக் கெடுத்துக் கொள்கின்றதை யாம் கண்டுள்ளோம். இப்பொழுது அவர்களுக்கும் உள்ள சில கடன்களை அறிவிக்க விரும்புகின்றோம். வீட்டிலிருந்து கேட்ட தொகை வந்துவிடுகின்றது. அதை நமக்காக அனுப்புகின்றார்கள். ஆதலால் நாம் அந்தத்தொகை முழுவதும் ஆனந்தமாய்ச்செலவிட்டுச்செல்வப் பெருமிதமாயும் தோரணையாயும் நாள் கடாத்தி வாசிக்கலாம் என்று அவர்கள் எண்ணுதல் கூடாது. எப்படிச் செல்வவந்தரின் கடமை ஏழைகளுக்கு மேனிலையை யடைய உதவுவதோ அதே போல் செல்வமிருந்த மாணவருக்கும தங்கள் ஏழைச் சகோதரரான மாணவர்களுக்கு உண்டி, உடுக்கை, புஸ்தகங்கள் முதலியன உதவி கஷ்ட நிவர்த்தி செய்து 'என் கடன் பணிசெய்து கிடத்தலே' என்றபடி யிருப்பது முக்கிய கடமையாகும். ஆதலின் நம் செல்வமுள்ள மாணவர்களே ! நீங்கள் ஏராளமாய் வீணாக அவசியமில்லாத வகைகளிலும் அமிதமான தேக மனோ சுக போகங்களுக்கென்று செலவிடும் தொகையைச் சுருக்கி உதவிபுரியின் நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பெருந் தொண் டாற்றினவராவீர்கள். இஃது காகிதவரையிலும் வாய்வார்த்தை வரையிலும் பிரசங்கமேடையோடும் நில்லாமல் காரியத்தில் செய்யப்படவேண்டும். வேலையற்றுப்போய் எழுதினதாய்க் கருதல் வேண்டாம். சுவானுபவபூர்வமாய் மேற்படிப்புக்குள்ள ஆசையெனும் தீயை குடும்பத் தொல்லையென்னும் மண்ணும் ஏழ்மையெனும் நீரும் அவிக்கப் பார்த்து மனங்கசிந்து நின்ற காலையில் நம்மினும் பெரிதுங் கடிது வருந்துவோர் நிலை எங்ஙனமிருக்கும் என்று சிந்தித்த போது உண்டான எண்ணங்களிவை. நிற்க இந்த கஷ்டமான நெருக்கடியான நிலையிலிருந்து நம்மாணவர்களை அதாவது நம்மவர் பிற்கால சமூகத்தை முன்னேற்றுவது உங்கள் கடமையாகும். இப்படிச் செய்வீராயின் பிற்காலத்தாழ்மைக்கு நீங்கள் தான் உத்தரவாதியாகவேண்டும். இது திண்ணம். முக்காலும் உண்மை. அமரிக்க நாட்டு எமர்சன் (Emerson) என்னும் அறிஞர் கூறியபடி "இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருவர் செய்யும் நன்மை தீமைகளின் பலன்கள் பாரிலுள்ள அனைவரையும் தாக்கும்." ஆதலால் உலக நன்மை, தேச நன்மை, சமூக நன்மை, குடும்ப நன்மைகளைக் கருதியாவது உதவி செய்ய முன்னிடுவீர். நீங்கள் விரயமாகச் சொந்த சந்தோடத்திற்கென்று அடிக்கடி நாடகம் படக்காட்சி முதலியவைகளுக்கு ஏராளமாய்ச் செலவிட்டு வருவதில் ஒருசிறு பாகத்தையேனும் மற்றவர்க்குதவி உங்களுக்கும் மற்றையோருக்கும் நலந்தேடுவீர். செல்வவந்தராயுள்ளோரனைவருக்கும் இம்மாதிரியான ஜனசேவை செய்யும் சந்தர்ப்பம் வாய்த்தலரிது. ஒரு பெரிய தீர்க்கதரிசி கூறியபடி "உலகில் நாம் மற்றோருக்கு என்று செய்ததவையே நமக்கென்று செய்தவையாகும். நமக்கு என்று செய்து கொண்டவையாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும்" என்பதுவும், இயேசுநாதரும் மற்றும் பல மகாத்மாக்களும் கூறியபடி "எவனொருவன் பிறற்கெனத் தன்னுயிரை வழங்குகின்றானோ அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுகிறான். ஆனால் தன்னுயிரைத் தனக்கென காத்துக்கொள்பவன் அதைத் தனக்குமின்றி யிழக்கிறான்" என்பதும உலக அனுபவ பூர்வமானவை. இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை நம்குல வர்த்தகப்பெரியாரும் உத்தியோகப் பிரமுகர்களும் உபயோகித்துத் தங்களுக்கென உண்மையான நன்மையைச் சேமித்து வைக்கும்படியான எண்ணம் உண்டாகும்படி இறைவனை இறைஞ்சுகின்றோம். நிற்க

## ஏழை மாணவருக்கு ஒரு வார்த்தை.

நம் ஏழை மாணவர்களுக்குச் சில வார்த்தைகள். அவர்கள் நிலைமை கொடிது, பரிதாபகரமானது என்று அனைவரும் சொல்லுகிறார்கள் என்று ஏழை மாணவர்களாகிய நீங்கள் கை, மெய் சோர்ந்து விடாதீர்கள். இந்நிலைமையில்தான் பெருமுயற்சி, ஊக்கம், சுறுசுறுப்பு, பொறுமை, ஆண்தன்மை, தன்னம்பகம் முதலிய மனிதற் கணிகலன்களான பெருங்குணங்களனைத்தும் பெருகி உறமடையும். உலகிலே மகாத்மாக்கள், பெரும் ஸ்தானத்தை வகித்தவர்கள், உயர்ந்தோரென்று கூறப்பட்டவர், புதுபுது இயற்கைச் சக்திகளையும், விதிகளையும், நூதன விசேடங்களையும் உலகத்தாருக்கு அறிந்து அளித்தவர் யாவரிலும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதும் தசாம்சத்தில் ஒன்பதின்மரும் ஏழை மாண

(247-ம் பக்கம் பார்க்க)

# குலதிலகர் பகுதி

## சதாசிவானந்த சுவாமிகள் ஜீவிய சரித்திரம்

### முன்னோர் சரிதம்

காவிரி சூழ்ந்த சோழ நாட்டகத்தே திருநாகேஸ்வரம் என வழங்கும் ஒரு புண்ணிய க்ஷேத்திரமுண்டு. இத்தலத்திற்குச் செண்பகாரண்யம் என்னும் வேறொரு பெயருமுண்டு. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் மேன்மை யுற்றது. சைவ சமயாச்சாரியர் மூவராலும் மூவிரு தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்றது. மன்றவாணரால் 'உலகெலாம்' என அடியெடுத்துத் தரப்பெற்றுத் திருத்தொண்ட புராணம் இயற்றியருளிய சேக்கிழார் சுவாமிகள் சிலகாலம் விரும்பித் தங்கியிருந்து திருப்பணியாற்றப் பெற்றது. மற்றும் பல சிறப்புக்களும் வாய்க்கப் பெற்றது. இத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் அழகப்ப முதலியார் என்னும் ஒரு செங்குந்தப் பெரியார் இருந்தார். இவர் மணிமந்திர ஔஷதங்களில் கைதேர்ந்தவர்; அநேக அற்புதங்கள் செய்தவர். ஒருநாள் விரக்தியினால் குடும்பத்தை விட்டு வெளிப்போந்து பழநியம்பதியை யடைந்து அங்குச் சந்நியாசம் பெற்றுப் பல தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று மணிமந்திர ஔஷதங்களால் பலருக்குற்ற துன்பங்களை நீக்கி வந்தனர். தமது சீடர்களுடன் எட்டுக்குடிக்கு வந்துகொண்டிருந்த அழகப்ப சுவாமிகள் மாவூர் புன்னைவாசல் என்னும் ஊரில் தங்கினர். சுவாமிகளது வரவைக் கேள்வியுற்ற தனவந்தராகிய ஒரு நாடார் சுவாமிகளிடம் வந்து வணங்கித் தம்மை நெடுங்காலமாகத் துன்புறுத்தி வரும் குன்ம நோயைத் தீர்த்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். உடனே சுவாமிகள் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரச் சொல்லித் தமது இஷ்ட தேவதையாகிய மீனாம்பிகையைத் தியானித்து அறுகம்புல்லினால் மந்திரித்து உட்கொள்ளும்படிக் கட்டளையிட்டனர். அந்நீரை உட்கொண்ட நாடார் தம்மைப் பல்லாண்டுகளாக வருத்திவந்த குன்மநோய் திடீரென நீங்கியதைக் கண்டு ஆச்சரியமுற்று அடிபணிந்து சுவாமிகளை அவ்வூரிலேயே தங்கியிருக்கும்படிக் கேட்டுக்கொண்டு "பழநி ஐயா மடம்" என ஒரு மடம் கட்டிச் சுவாமிகளை அதில் இருக்கச் செய்து வேண்டிய உபசாரங்கள் செய்து வந்தார். பின்னர்ச் சில காலம் சென்றதும் சுவாமிகள் பரிபூரண மடையவும் அம்மடத்தினடுவே சமாதி செய்து பூசை முதலியவற்றை நடத்திவந்தார். உடல் பிணியேயன்றி ஆன்மப் பிணியும் சுவாமிகள் கடாக்ஷத்தால் நீங்கப்பெற்ற சீடராகிய நாடார் காலஞ்சென்றபோது நமது சுவாமிகளின் சமாதியின் அருகிலேயே சமாதி செய்யப் பெற்றனர்.

சுவாமிகள் பரிபூரண மடைந்ததைக் கேள்வியுற்ற அவரது ஜேஷ்ட குமாரராகிய பொன்னம்பல முதலியார் தமது தந்தையார் சமாதியைக் காண மாவூர் புன்னைவாயிலுக்கு வந்தனர். அங்குற்று நாடார் குமாரரைக் கண்டு தம்மை இன்னாரெனத் தெரிவித்துத் தமது தந்தையார் சமாதியைக் காட்ட வேண்டுமெனக் கேட்டனர். அச்சமயம் மது வியாபாரத்திலிருந்த நாடார் குமாரர் முதலியார் அவர்களை அவமதித்துத் தக்க பதிலுரையாது கடிந்து பேசினர். அதனால் மனம் நொந்த முதலியார் 'மீனாக்ஷி' என்று சொல்லிக்கொண்டே திரும்பினர். உடனே மது நிறைந்திருந்த சால் படீரென உடைந்து மது எங்கும் பரவிற்று. இதைக் கண்ட நாடார் பயந்து முதலியாரிடம் ஓடி வந்து

---

(246-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களாயிருந்து இன்னலுற்று ஊக்கம், விடா முயற்சியென்னும் ஊன்றுகோல்களைப் பற்றினோரே. ஆதலால் நீங்களெல்லோரும் இத்தகைய கிடைத்தற்கரிய உலகுய்க்கும் உயரிய நிலைமை யாங்களடைந்துளோம் என மகிழ்ந்து உங்கள் அதிதீவிர முயற்சியால் முன்னோக்கி எழுங்கள். மன உற்சாகம் குன்றாமல் விடாமுயற்சி, 'முயற்சி திருவினையாக்கும்' 'வறுமையிற்செம்மை' என்ற பெருங்குணங்கள் கொண்டு உண்மை கடைப்பிடித்துச் சுறுசுறுப்பெனும் படைகொண்டு ஊக்கம், தன்னம்பகம் எனும் துடுப்புகளால் வலித்து நல்குரவெனும் நதியைக்கடந்து முன்னேற்றம் எனும் பாதையில் முந்துவீர்களாக. இவ்வேழ்மையான நிலையின் அருமையைப்பற்றி எமர்சன் என்னும் அறிஞர் 'நான் இளமையில் தரித்திரத்தால துன்பறுத்தப்பட்டிராவிடில் இப்போழ்தடைந்துள்ள மேனிலையை அடைந்திருக்கமாட்டேன். அத்தகைய அரிய வறுமை எனது மக்களுக்கு வாய்க்காமல் போகின்றதே என்ற வருத்தம் என்னெஞ்சைத் தாக்குகிறது' என்று கூறியதை உங்கள் மனதில் பசுமரத் தாணிபோல் பதித்து முன்னேற முயல்வீர்களாக.

நயவார்த்தைகள் பேசித் தாம் அறியாது செய்த குற்றத்திற்காக மன்னிக்குமாறு வேண்டி அவர் விரும்பியபடி மடாலயத்தைத் திறந்து காட்டியதன்றி, அங்குச் சில நாள் தங்கியிருக்கும்படியும் கேட்டுக் கொண்டனர். முதலியாரும் அவ்வாறே மூன்று நாள் தங்கியிருந்து தம்மூர் வந்து சேர்ந்து வருஷந்தோறும் சித்திரை கிருஷ்ணபக்ஷம் திருதிகை யன்று தம் தந்தையாருக்குக் குருபூஜை நடத்தி வருவாராயினர். உண்மையான பக்தியும், பரோபகார சிந்தையுமுள்ள முதலியார், ஐந்து வயதில் காலஞ்சென்ற தமது பேரனை அடக்கம் செய்யச் சென்றபோது குழியைப் பிரதக்ஷணம் வந்து இன்று நாற்பத்தெட்டா நாள் யானும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்து ஊரார் அனைவரும் ஆச்சரியமுறுமாறு அதே 48 ஆம் நாள் 'மீனாக்ஷி பரதேவா!' என்று சொல்லிக் கொண்டே பரிபூரணமடைந்தார்.

சுவாமிகள் சரிதம்.

இத்தகையோரது மூன்று புதல்வருள் ஒருவராகிய வீரப்ப முதலியார் என்பவரே தற்போது ஸ்ரீலஸ்ரீ சதாசிவானந்த சுவாமிகள் என்னும் தீக்ஷா நாமத்தோடு விளங்குபவர்கள். இப்பெரியாரது சனனகாலம் சுபானுஸு மாசிமீ 7உ ஞாயிற்றுக் கிழமையாகும். இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர் சந்ததியில்லாதிருந்த இவரது சிறிய தந்தையாலும், அவர் காலஞ்சென்ற பிறகு தமையனாராலும் போஷிக்கப் பெற்று வந்தார். சில வாண்டுகள் பள்ளியில் கல்வி பயின்று பிறகு நெசவுத் தொழிலை மேற்கொண்டார். கல்வியில் ஊக்கமும் சைவத்தில் மிகுந்த பற்றும் உள்ள இவர் சமயாச்சாரியர் அருட்செயல்களாகிய தேவார திருவாசகங்களை ஓதுவதிலும், பட்டினத்தார் தாயுமானார் முதலிய பெரியோரது பாடல்களைப் படித்துணர்வதிலும் பெரும்பாலும் காலங்கழித்து வந்தார். ஏனையோரைப்போல் வாய்ப்பேச்சோடு நில்லாது ஞான நூல்களைக் கற்றுணர்ந்து அவற்றிற் கூறியுள்ள சன்மார்க்க நெறியினின்று பிறழாது நடக்கவும் முயன்று வந்தார். 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக' என்னும் திருக்குறளுக்கு இவர் இலக்கியமாவர்.

25-ஆம் வயதில் கவித்தலம் மாதவ முதலியார் புதல்வி காவேரி என்னும் மாதரசை மணந்து இல்லறம் நடாத்தி வருநாளில் ஒருநாள் திருவண்ணாமலையிலிருந்து வந்த இரண்டு சாதுக்கள் தெருவே போகக் கண்டு அவர்களை உபசரித்துத் தமதில்லத்தில் உணவு கொள்ளுமாறு வேண்டிக்கொள்ள, அதற்கவரும் இசைந்தனர். ஆயினும் முன்னதாக எச்சரிக்கை செய்தும் தம்மில்லத்தில் காலத்தில் சமையல் ஆகாமையால் வருந்தி, சிவனடியார்களுக்கிழைத்த அபராதத்திற்கு அஞ்சி அன்னவரை வேறு வகையில் திருப்தி செய்து விட்டுத் தாம் புரியாது அவ்வூர் அண்ணாமலையார் மடத்திலிருந்த ஈரோடு மாரிமுத்து சுவாமிகளிடம் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்துவிட்டுச் சிவஸ்தல யாத்திரையாகச்சென்று பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு வருங்கால் காஞ்சிபுரத்தில் காளத்திதேசிக முதலியவர்களிடத்துச் சில காலமும், திருவண்ணாமலை பவழக் குன்று மடம், ஸ்ரீ காளத்தி இராஜா அரண்மனை முதலிய இடங்களில் சிலகாலமும் தங்கியிருந்து, திருப்பதியில் வேங்கடாசலபதியை முருகனெனவே தரிசித்து வருவாராயினர். இவ்வியாத்திரையில் திரு. வீரப்ப முதலியார் அநேக சாதுக்களைக் கண்டு தரிசித்து அரிய உபதேசங்கள் பெற்றனர். பாஸ்கரப் பேட்டையில் சந்தித்த மலையாள ஸ்வாமிகள் நமது சுவாமிகளை நோக்கி, 'நீர் உமதூருக்குச் சென்று இன்னும் சில காலம் இல்லறத்தில் இருக்க நேரிடும்' என அறிவித்தபடி, இவர் திருவூறல், காஞ்சீபுரம், திருவோத்தூர்முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வருங்கால், பாற்காவடி அரங்கசாமி முதலியார் முதலிய நண்பர்களால் வற்புறுத்தித் திருநாகேஸ்வரம் அனுப்பப் பெற்றனர். அது முதல் பழயபடி இல்லறத்திலிருந்து பொது விஷயங்களில் விடா முயற்சியுடையவராய் உழைத்து வந்தனர். அச்சமயம் இவர் 'செங்குந்தர் ஜீர்ணோத்தாரண சங்கம்' என ஒரு சங்கம் நிறுவி அதன் மூலம் அநேக வித்வான்களைக் கொண்டு 'வீரநாராயணர் விஜயம்' 'கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் சரித்திரம்' முதலிய அநேக உபந்யாசங்கள் செய்வித்தனர்.

இது சம்பந்தமாகத் திருநாகேஸ்வரம் வந்திருந்த காஞ்சி ஐயங்கார்குளம் திரு. அ. க. பொன்னுசாமி முதலியார் அவர்களிடம் செங்குந்தர் புராணம் அச்சிடுவதற்கென 250 ரூபாய் வரையில் பல கிராமங்களில் வசூலித்துக் கொடுத்தனர். இவை 1917ஸு முற்பகுதியில் நடந்தவை. பிற்பாகத்தில் சென்னை கவர்ன்மெண்டு ரிக்கார்டு ஆபீஸ் சீனிவாச ஐயங்கார் அவர்கள் M. A. எழுதிய 'தமிழாராய்ச்சி' என்னும் நூலில் செங்குந்தர்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளதைக் கண்டு அவர் மீது வழக்குத் தொடுக்க முயன்ற பொள்ளாச்சி வி. பி. டி. மலையப்ப பண்டிதரை திருநாகேஸ்வரத்திற்கு வரவழைத்து விஷயத்தைப் பலருக்கும் பிரஸ்தாபப்படுத்தித் தஞ்சைஜில்லாக் கிராமங்களில் பணம் வசூலித்துக்கொடுத்து ஐயங்கார்மீது வழக்குத் தொடுக்குமாறு ஏற்பாடு செய்தனர். பின்னர் திருச்செந்தூர், திருநெல்வேலி, மதுரை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு பொள்ளாச்சிக்குச் சென்று பண்டிதருக்கு உதவியாயிருந்து கோவை ஜில்லாவிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று இரவு பகலாகத் தேக சிரமம் சிறிதும் பாராது அரும் பாடுபட்டனர். விசாரணை நடந்துகொண்டிருக்கும் காலத்தில் பண்டிதர் காலஞ் சென்றமையால் தொடுக்கப்பட்ட வியாச்சியம் மேல் விசாரணையின்றி நின்றுபோயிற்று.

துன்மதிஸு மாசிமீ கும்பகோணம் மகாமகத்திற்குத் தேவகோட்டையிலிருந்து வந்திருந்த சாதுக்களுள் ஒருவர் நலியுற்றது கண்டு நமது வீரப்ப முதலியார் தம்மில்லத்திலேயே அவருக்கு

வேண்டிய உபசாரம் செய்தது மன்றிப் பரிபூரண மடைந்த பிறகு தாமே சமாதிக்கிரியை முதலிய வற்றையும் சிறப்புற நடத்தி வைத்தார். சிவனடியாரிடத்து இவர் வைத்துள்ள அன்பின் மேலீட்டைக் கண்டு வியப்புற்ற சாதுக்கள் முதலியார் அவர்களை வற்புறுத்தித் தேவிகோட்டைக்குத் தம்முடன் அழைத்துச் சென்றனர். அங்குச் சில நாள் தங்கியிருந்த பிறகு அகஸ்தியர் தேவாரத் திரட்டை ஓதிக்கொண்டே திருவீழிமிழலை திருவாரூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு அரிமழம் வந்து சேர்ந்தார். அங்கு ஒரு செட்டியாரால் பெரும்பொருள் செலவிட்டுப் புதுப்பிக்கப் பெற்றுள்ள ஸ்ரீ சுந்தர சுவாமிகள் மாணாக்கராகிய சாத்தப்ப சுவாமிகள் மடத்தில் செட்டியார் வேண்டுகோளுக்கிணங்கித் தங்கி விட்டனர். முதலியார் அவர்களுக்கு அப்போது சந்நியாசம் பெற விருப்பமில்லையேனும், ஸ்ரீ சுந்தர சுவாமிகள் சமாதியைத் தரிசிக்க வந்த விலஞானந்த சுவாமிகள் இவருக்குச் சந்நியாசம் தர விரும்பியதாகத் தெரிவிக்க, அதை மறுக்க இயலாதவராய் ஷை சுவாமிகளிடத்துச் சந்நியாசமும் சதாசிவானந்த சுவாமிகள் என்ற தீக்ஷாநாமமும் பெற்றனர்.

பிறகு சதாசிவானந்த சுவாமிகள் அம்மடத்திலேயே தங்கியிருந்து பல வருஷங்கள் உட்கார்ந்த வண்ணம் உறக்கமின்றியும், சில நாட்கள் உணவின்றியும், நிஷ்டையில் இருந்து வந்தார்கள். அச்சமயம் திருநாகேஸ்வரம் சிவாலயத் திருப்பணியை முன்னிட்டு அரிமழம் திரு. அ. அரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களைக்காண வந்திருந்த திரு. செ. சோமசுந்தர முதலியார், முதலியாரவர்களுக்கு உதவியாயிருந்து விஷயத்தைப் பூர்த்தி செய்து வைத்தனர். சுவாமிகள் சாத்திரப் பயிற்சியும், சொல்வன்மையும் ஒருங்கே பெற்றவர் என்பது, சைவ சாத்திரங்களின் உண்மைக் கருத்துக்களைப் பற்றி அபிப்பிராய பேதங் கொண்டிருந்த சிலரோடு இவர் செய்த வாதங்களால் நன்கு விளங்கும். சுக்கில புரட்டாசி சிவநேசனில் ‘சங்கிலி நாச்சியார் திருமண விவாதம்’ வெளிவந்ததன் காரணம் நமது சுவாமிகளுக்கும் சிதம்பரம் மெய்கண்டார் வித்தியாசாலை சொக்கலிங்கையருக்கும் உண்டான அபிப்பிராய வித்தியாசமேயாகும். அரிமழத்தில் சுவாமிகளுக்கு மிகுந்த செல்வாக்குண்டு. மனைவியார் ஜீவனார்த்தத்திற்குத் தகுந்த ஏற்பாடு செய்து சந்நியாசம் பூண்ட நமது சதாசிவானந்த சுவாமிகள் தற்போது திருநாகேஸ்வரத்திலிருந்து வருகிறார்கள். இச்சுவாமிகள் சந்நியாசம் பூண்டும் குல முன்னேற்ற விஷயமாய்த் தாம் செய்யவேண்டிய கடமையை மறந்தாரில்லை. நம்குல முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் பெரியோர்களுள் நமது சுவாமிகளும் * ஒருவர் என்பதை ஒருவரும் மறுக்க இயலாது என்பதை நேயர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்.

சோதிடம் ப. சிதம்பரநாத முதலியார்.
ஐவர்பாடி.

* இப்பெரியாரை யாம் பல நண்பர்கள் மூலமாகவும் நிருபங்கள் மூலமாகவும் மாத்திரம் அறிவோமே யன்றி இதுகாறும் நேரிற் காணப்பெற்றோமில்லை. ஆயினும் துறவியா யிருந்தும் இச்சுவாமிகளுக்குள்ள குலாபிமானத்தைப் பெரிதும் பாராட்டுகின்றோம். நங்குல முன்னேற்றத்திற்காக இடைவிடாது சென்ற விடமெங்கும் கைம்மாறு கருதாதும் பிறர் தூண்டுதலின்றியும் இவர்கள் செய்து வரும் குலத்தொண்டை என்றும் மறக்க இயலாது. நண்பர் திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் சுவாமிகளைச் சைவாபிமானி யென்றும் குலாபிமானி யென்றும் கூறுகின்றனர். இவர்களுக்குள்ள சைவாபிமானத்தைக் காட்டிலும் குலாபிமானமே பெரிதெனக் கூறலாம். எமக்கும் சுவாமிகளுக்கும் அடிக்கடி கடிதப்போக்கு வரவுண்டு. அநேகரை நமது மித்திரன் சந்தாநேயர்களாகச் (சில சமயங்களில் தாமே சந்தா தொகையை அனுப்பியும்) சேர்த்துள்ளார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் பணத்தை அப்போதைக் கப்போது நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அனுப்பிவிடுவது வழக்கம். இத்தகையோர் ஒரு பெருங் குலாபிமானி யென்பதிற் சந்தேகமு முண்டோ? [ப - ர்]

---

## சென்னிமலை.

### ஈரோடு தாலுக்கா போர்டு மெம்பர் நியமனம்.

நம்து செங்குந்தர் முதல்மகாநாட்டு வரவேற்புத் தலைவராகிய சென்னிமலை திரு. V.S. செங்கோட்
டையா முதலியார் அவர்களின் தமையனாரும் சென்னைத் தென்னிந்திய செங்குந்தமஹாஜன சங்கத்தின்
நிர்வாக சபை மெம்பருமாகிய திரு. வா. செ. முருகேச முதலியார் அவர்கள் சென்ற 14-6-30-தேதி
கூடிய ஈரோடு தாலுக்தா போர்டு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். ஈரோடு தாலுக்கா
போர்டுக்கு முதன் முதலாக நியமிக்கப்பெற்ற செங்குந்தர் மெம்பர் இவரேயாகும். இவரை மெம்ப
ராகத் தேர்ந்தெடுத்ததைப்பற்றி கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ராவ்பஹதூர் C. S. இரத்
தின சபாபதி முதலியார் M. L. C. அவர்களுக்கும், ஈரோடு தாலுக்கா போர்டு பிரசிடெண்டு பழைய
கோட்டைப் பட்டகார் ராவ்பஹதூர் நல்லதம்பிச் சக்கரைமன்றாடியார் அவர்களுக்கும் நன்றி பாராட்
டக் கடமைப் பட்டுள்ளோம்.

இங்ஙனம்,
R. P. நாச்சிமுத்து முதலியார்,
சென்னிமலை.




## ஆரோக்கிய (முற்கால, தற்கால) நிலைமைகள்.

திருவாளர் மா. பரமகுருநாத முதலியார், திருமயிலை

மேற் குறிப்பிட்ட இரண்டில் நாம் அனுபவரூபமாய் ஆலோசித்து தள்ளுவதைத் தள்ளி, கொள்ளுவதைக் கொண்டு, அனுசரித்தல் அத்தியாவசியமாகும்.

இவற்றிலும் நம் தேகாரோக்கியத்திற்கு அனுகுணமாகும் புறத்திலுள்ள இல்லம், இடம், ஆகாராதிகள், நடை, உடை, முதலியவற்றின் தன்மைகளைக் கவனிப்பதுடன், ஆன்ம சுகத்திற்கு அனுகுணமாகும் மனோ நிலைமையையும் கவனித்தல் சாலவும் நன்மையைப் பயக்கும்.

எனெனில் மனோ வியாதியஸ்தன் ஒருவன் வெளிக்கு, மற்றெவ்வித சுகாதார நிலைகளிலிருந்த போதிலும், அவன் தேகாரோக்கியனாக யிரான். தன்னுடைய மனதின் தன்மையால், தன்னுடைய இருப்பிடம், வாழ்க்கை முதலியவைகளைச் சுவர்க்கமாகவோ அல்லது நரகமாகவோ செய்து கொள்ளலாம். சகலத்திற்கும் மனந்தான் காரணம்.

ஒருவன் தன்னுடைய மனதைக் கோபம், குரோதம், பொறாமை, முதலிய தீயகுணமின்றி, கடவுள் பக்தியில் ஈடுபட்டு, மனதைப் பரிசுத்த நிலையில் வைத்திருப்பின், அவனைவிடச் சுகபுருஷன் உலகத்தில் இல்லை என்று உறுதியாகக் கூறலாகும். அவனை வெல்லவும் எவரும் வல்லவர் அல்லர். எழுத விரியும் ஆகையால் ஒருதிருஷ்டாந்தத்துடன் நிறுத்துகிறேன்.

ஒருவனுக்குக் கோபாக்கினி மூண்டுழி, அவனுடைய உடல், புத்தி முதலியன இருந்த வழி அவனுக்கே பிறகு தெரிகிறது. பின்பு விசனப்படுகிறான். அதனால் விளையும் கேடோ கொஞ்சமல்ல, "அரியதவம் கோபத்தால் அழிந்து போமே", "கோபத்தால் அழிந்தவர்கள் கோடா கோடி". மற்ற குரோதம், முதலாய தீயகுணங்களோவெனில் அதன் சகோதரர்களேயாவார்.

ஆகையால் தான் மானிடர்கள் எல்லோரும், அகம், புறம், இரண்டின் ஆரோக்கியங்களையும் ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டி இருக்கிறது.

இவ்விதம் கவனிக்கப்புகு முன்கேள்விகள் பல கீழ் வருமாறு தானே பிறக்கின்றன. என்ன வெனில் எண்ணிக்கொள்ளுங்கள்.

இக்கால் அநேகர் முன்னோர்களை விட அதிகமாகப் பன்முறைகளிலும் கற்றுணர்ந்து தேர்ந்திருக்கின்றனர். அவர்களை விட இவர்கள் நாகரீகத்திலோ அதிகமாக மிஞ்சி விட்டனர். அக்காலத்தை விட இக்காலத்தில் மிகவும் தேர்ச்சி அடைந்த அனேக ஆங்கில டாக்டர்கள் என்ன, யுனானி டாக்டர்கள் என்ன, ஆயுர்வேதிக் டாக்டர்கள் என்ன, இவ்விதமாகப் பல பட்டப்பெயர்கள் பெற்ற பெரிய டாக்டர்கள் பரவி இருக்கிறார்கள். இன்னும் பெண் பாலர்களுக்கு உதவி புரிய நர்ஸுகள், லேடி டாக்டர்கள் அனேகர் ஏற்பட்டு விட்டனர். ஆஸ்பத்ரிகளோ ஒவ்வொரு வியாதிக்கும் வெவ்வேறு ஆஸ்பத்ரிகள் எற்பட்டிருக்கின்றன. அனேகர் மஹா பெரிய பட்டண வாசிகள் தான். இருப்பிடமோ மாட மாளிகைகள் தான். ஆகாராதிகளோ மிகவும்சிறந்தவைகள்தான். அதிலும் சிறு குழவிகள் முதல் வயோதிகர் வரையிலும் உட்கொள்வதோ, சிறந்த டாக்டர்களால் பரிசோதனைசெய்து அனுப்பப்பட்ட விலை உயர்ந்த குழவிகளுக்கு வேண்டிய பலவிதமான உயர்ந்த ஆகாராதிகள், (Food) மிருதுவான பிஸ்கட்கள் தான். பாலியர்களுக்கும், கிழவர்களைக் குமாராக்கும் அனேக வித பேடென்டு (Patent) மருந்துகளும், டானிக்களும் (tonic) மென்மேலும் வந்து வந்து செலவாகிக் கொண்டேதானிருக்கின்றன. இவர்கள் நடவடிக்கைகளோ சொற்றி மற்ற உன்னதமான நடவடிக்கைகள் தான். உடைகளோ அதிலும் உயர்வும் ஒழுங்குதான். எப்படி எனில், தேகத்தோடு தேகமாக ஒட்டிக்கொண்டிருக்கும் படியாக உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையிலும் வெளிக்குக்காட்டாமல் வெகு பத்திரமாக உடலைக் கெட்டியாக மூடி இருக்க விலையுயர்ந்த கம்பளம், பட்டு பட்டாடை முதலிய சிறந்த ஆடைகள் தான். எல்லாவற்றைவிட மற்றோர் சிறந்த குணமும் பரவி விட்டது. அதாவது, இக்காலத்திய சிலர் எல்லா வகையிலும் நன்கு ஆராய்ந்து பார்த்ததில், சகலமும்

தம்முடைய வல்லமையாலும், புத்திநுட்பத்தினாலும், மனிதர்களுடைய சகாயத்தினாலும் நடக்கிறதே யொழிய, கடவுள் ஒருவர் இருக்கிறார், அவரால் உலகம் நடந்தேறி வருகிறதென்ற நம்பிக்கையற்று, காலை, மாலை, கடவுளைத் தியானஞ் செய்வதைவிட்ட சிலரும் இருக்கிறார்கள். இன்னும் எழுத விரியும்.

இங்ஙனமாக, மனிதவர்க்கத்தவர்கள் முன்னவர்களை விட இக்காலத்தியவர்கள் மேன்மையான தேகாரோக்கிய ஸ்திதியிலிருக்க வேண்டுமே, இன்னும் முன்னிருந்த நோய்கள் முற்றும் அற்றுப்போயிருக்கவேண்டுமே, அன்றேல் முன்னிலும் வியாதிகள் குறைந்தாவது இருக்க வேண்டுமே, அப்படிக்கின்றி முற்றும் முறணாக முன்னிலும் கணக்கற்ற நவீன நவீனமான தேக அவையவங்களுக்கேற்ற சொல்லற்கரிய நோய்களே அதிகரித்து விட்டன. நாகரீகப் பெண்களோ வெனில், ஒவ்வோர் முறைகளிலும் குழவியை ஈன்று சுகமாக வெளிவருமுன் லேடி டாக்டர் நர்ஸ் முதலானவர்களுக்குச் செலவழித்தலோ கணக்கில்லை. ஆனால் அனேக வழிகளில் பலவித பெயரை வகித்த டாக்டர்கள் பலராயினர். நவீன நாகரீகத்தில் முற்றும் முதிர்ந்த ஒவ்வோர் குடும்பத்திலும் டாக்டர் செலவோ ஒவ்வோர் மாதங்களிலும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தற்கால மிருக்கும் ஆஸ்பத்ரிகள் கொஞ்சமன்று மூலைக்கு மூலை பலவித ஆஸ்பத்ரிகளைக் கட்டிக்கொண்டேதானிருக்கிறார்கள். இன்னும் முன்னோர்கள் மனுஷருக்குச் சராசரி வயது நூறு என்று அளவிட்டிருக்க, அதில் பாதி வயதாவது, நோயற்ற வாழ்வுற்று வயோதிக தசை யடைதல் அருமையாகவே இருக்கிறதே. பால்யர்களுடைய பெரியவர்கள் சீக்கிரத்தில் உனக்கோ எனக்கோ வென்று முன்னிட்டாலன்றி, பால்யர்கள் தங்கள் பெரியவர்களுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடனாதிகளைச் செய்ய எங்களால் ஏலாது, எங்கள் மேல் குற்றமுமில்லை, செய்யக்கூடாதென்ற எண்ணமுமில்லை; ஆனால் நாங்கள் நவீன நாகரீகத்தில் மிகவும் பழகிவிட்டோமாகையால் பெரியவர்களுக்கு முந்தி சிறியவர்கள் இறத்தல், நவீன ஏற்பாடாயிருக்க நீங்கள் அதை மறந்து எங்களுக்கு முந்திக்கொள்ளாமல் ஏமாறித் தாமதித்த தோஷமென்று பழிபோட்டு விட்டு காலனைக் காண்கின்றார். இன்னும் விரிக்க விரியும்.

இவைகளுக்கெல்லாம் என்ன காரணமென்ற வினாவிற்கு விடை வேண்டி இருக்கின்றது. இதற்கு நேர் வழியில் சற்று உற்று நோக்கின் முற்றும் விளங்குமென்பதில் ஐயமென்ன ?

எங்ஙனமெனின், முன்னோர்கள் அனுசரித்து அநுபவரூபமாய் ஆசாரத்திற்குக் கொண்டு வந்த விஷயங்களையும், இன்னோர்கள் அனுசரிக்கும் விஷயங்களையும் ஒத்திட்டுப் பார்க்கின் தானே விளங்கும்.

முன்னோர்கள் பள்ளியில் கற்குங்கால் முதல் இயற்கையில் கடவுளால் இலவசமாய்க் கொடுக்கப்பட்ட பிருதிவி, அப்பு, தேயு, வாய்வு, ஆகாயாதிகளாகிய பஞ்சபூதங்களின் தன்மைகளையும், அவைகளால் நம் சுகாதாரத்திற்கும், தேகவன்மைக்கும், புத்திகூர்மைக்கும் அனுசரணையாகிய நித்திய கர்மானுஷ்டானங்களையும் முற்றுங்கற்பதோடு; இல்லற வாழ்க்கையிலும் அனுசரித்து அனுபோகத்திலும் கொண்டு வந்தனர். அங்ஙனம் அனுசரிக்காது மீறினவர்களை ஜாதிபிரஷ்டன் என்று வேறுத்துத் தள்ளி விடுவார்கள். அவ்விதம் அனுசரித்தவர்களோ தேக சுகத்தோடு ஆன்ம லாபமடைந்ததுமன்றி, தங்களைச் சார்ந்த பந்துமித்திரர்களுடன் சுகமாக நீடேழி வாழ்ந்து வந்தார்கள்.

இன்னோர்களோ பள்ளியில் அனுசரிக்க வேண்டி மேற்கூறிய கர்மானுஷ்டானாதிகளைக் கற்பதே இல்லை. மற்றென்ன வென்றால் மார்க்கு வாங்கி, பாஸ்செய்து பல பட்டப்பெயர்களைப்பெற்றால் மட்டும் போது மென்பது தான். தேக ஆன்ம சுகாதார ஒழுக்கங்களையோ கனவிலும் நினைப்பதே இல்லை. நோய்வரின் டாக்டர்களிடம் ஓடுவது தான் வழக்கம்.

ஆனால் சில வருஷங்களாக ஏதோ கொஞ்சமேனும் சில இடங்களில் அனுசரிக்கிறார்கள் என்பதைக் கேட்கச் சந்தோஷந்தான்.

முன்னோர்கள் அனேகமாகக் குக்கிராமங்களில், சாமான்ய இல்லங்களில் வசித்தார்களேனும், தம்மைச் சுற்றிலும் தூநறுங்காற்றும், சூரிய கிரணங்களும் நன்கு பரவ வசித்து வந்தனர்.

இக்காலத்தவர்களில் அனேகர் கட்டுவது சிறந்த சாஸ்திரிகளால் அமைக்கப்பெற்ற மாளிகைகளாயினும்; அதிகமாக அறைகளை அமைத்தும்; அதிக வாடகை வருவாயை அனுசரித்தும்; அதிக காற்றும், சூரிய கிரணைங்கள் வீச இடமில்லா வகையில், அதிலும் ஜன அடர்த்தியான பெரிய பட்டணங்களில் கட்டி விடுகிறார்கள். என்னே பணத்தின் ஆசை, டாக்டர் பில்.

முன்னோர்கள் தாங்களுண்ணும் போஜனாதிகளைத் தங்கள் தங்கள் வீட்டில், தங்கள் தங்களுடைய அன்பார்ந்த தாயார், மனைவி, சகோதரிகள் இவர்களால் வெகு ஜாக்கிரதையாகவும், சுத்தமாகவும், பிரியமாகவும் தயாரிக்க உண்பர். அவ்வித போஜனமும் சொல்பமாகவும், மிதமாகவும், அதிக காரம் புளிப்பின்றி அவ்வவ்வமைய தேக ஸ்திதிக்குத் தக்க உணவாதிகளை உட்கொள்வர்.

இக்காலத்தவர்களோவெனில் (அதிலும் முழுமோசம் மகாபெரிய பட்டணவாசிகள்) நாளடைவில் ஹோட்டல்களிலும், கிளப்புகளிலும், டீஷாப்புகளிலும் உண்ணப் பழக்கிக் கொள்ளுகிறார்கள். அங்கு சமையல் செய்பவர்கள் வேலைக்காரர்கள் தானே. அவர்களுக்கு உண்பவர்களுக்குத் தக்கவாறு செய்ய வேண்டுமென்கிற சிரத்தை என்ன இருக்கும்? ஒருக்கால் சிலர்மேல் சிரத்தை இருப்பினும் அவ்விதம் செய்ய முடியுமா? முடியவே முடியாது. ஆனால்

முதலாளிக்குச் சாப்பிடுகிறவர்கள் சரியாகச் சாப்பிடாவிட்டால் செலவு அதிகமாகாதே என்ற கோரிக்கை மட்டும் அதிகமிருக்கும். இவ்வித போஜனாதிகளை விரும்புகிறவர்களுடைய பெருந்தன்மையைக் கவனியுங்கள். இக்கொற்றவர்கள் டாக்டர்களைப் பணக்காரராக்க தீஜங்கட்டிக் கொண்டவர்போலும். சில நவீன நாகரீகத்தில் மிகுந்தவர்கள் தங்கள் வீட்டில் உண்கிறார்கள். அவர்களும் வீட்டு வேலைக்காரர்களுடைய தயவைத்தான் எதிர் பார்க்கிறார்கள். இன்னும் இவர்களுடைய போஜனாதிகளோ விலையுயர்ந்த அதிக சத்துள்ள பதார்த்தாதிகளாகும். அதனோடு மச்ச, மாம்சாதிகளே இடைவிடாதன. அதில் சேரும் காரசாராதிகளுக்கோ அளவில்லை. இவர்களும் மருந்தை விருந்தாகக் கொள்பவர்களே.

முன்னோர்கள் பருகினதோ சாதாரண குளிர்ந்த ஜலம். இக்காலத்தவர்கள் அது கெடுதி என்றும் அதற்குப்பதிலாக சோடா, லெம்னெட், லைம்ஜூஸ் முதலியனவும், சில மேதாவிகள் பீர், ஒயின் முதலிய லாகிரி சரக்குகளும் உபயோகிக்கிறார்கள். காபி, டீ, கொக்கோவோ தள்ளற்கரிய ஆகாராதிகளாய் விட்டன.

முன்னோர்கள் சுத்தமாகவும், இலேசானதாகவும் தொய்த்த முக்கியமான ஆடையாதிகளைச் சாதாரணமாக உபயோகப் படுத்துவார்கள். குளிர்காலங்களில் ஏகதேசமாகக் கம்பள உடைகளை அணிவார்கள். தங்கள் தேகத்தில் காற்று, ஜலம், சூரிய வெளிச்சம் நன்றாகப் படும்படியாகக்காட்டிக்கொண்டிருந்தனர். அதனால் உடல் தோல்களும் நன்றாகத் தங்கள் தொழில்களைச் செய்து தேகத்தில் சேரும் அழுக்காதிகளைத் தோலின் துவாரங்கள் மூலமாய் வெளியில் தள்ளிக்கொண்டிருந்தன. அதனால் தேகம் ஆரோக்கியமாய் நோயற்றிருந்தது.

இக்காலத்தவர்களுக்கோ உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையில்சட்டையின்மேற்சட்டைகள்தான். அதிலும் அனேகமாக உயர்ந்த கம்பளச் சட்டைகள்தான். இன்னும் பூட்ஸ், ஸாக்ஸ், காலர், டை, ஸூட், முதலிய இக்காலத்திய நாகரீகஉடைகளாய் விட்டன. ஆயினும் "காலத்திற் கேற்ற கோலமென" அவை வேண்டியதாய் தானிருக்கிறது. இதனால் தோல் தன்னுடைய செயலைச்செய்ய இயலாமலிருக்கிறபடியால் தேக அழுக்குகள் உள் தங்கி நலிக்கு ஆளுக்கி விடுகிறது.

முற்காலத்தில் பால்யர்களுக்கு சுருட்டுபிடித்தலே தெரியாது. ஏகதேசமாக யாதாமொரு வயோதிகர் சுருட்டு உபயோகப் படுத்துவார்.

தற்காலத்தில் பால்யர்களுக்கோ சுருட்டு, பீடி, சிகரட்டுகள் முதலானவை இன்றி அமையாதனவாய் விட்டன. நவநவமான சிகரட்டு டப்பி, மாச்பெட்டி சதா கோட் பாக்கெட்டில் இருந்தபடியே இருக்கவேண்டியதாய் இருக்கிறது.

முன்னோர்கள் வேலையற்றில்லை. ஆனால் அதிகம் வீணாக உழையார்கள். இடை இடையே விராமைக்கு இடந்தேடிக் கொள்வர்.

இக்காலத்தவர்களுக்கோ "நேரமில்லை" என்ற சொல்லே எப்பொழுதும் சொல்லவேண்டி இருக்கிறது. இவர்களுக்கு வேண்டியவை அளவின்மையின் சதா வேலையிலேயே மூழ்கி இருப்பார்கள். ஆனால் இக்கொற்றவர்கள் சிலர் தான்.

முற்காலத்தியவர்களோ தங்களுக்கு நேர்ந்த வேலைகளை முடித்துக்கொண்டு முன்னிரவில் நித்திரை செய்வர். சூரியன் உதிக்குமுன் விழித்துக் கொள்வர்.

தற்காலத்தியவரோ வீணே நித்திரையில் பொழுது போக்கார். டிராமா (drama) சினிமா (cinema) முதலான விடங்களுக்கு நித்திய நைமித்திய கட்டளையாகச் சென்று நடுநிசிவரையில் விழித்திருந்து பிறகு நித்திரை செய்து காலையில் சூரியன் அதட்டி எழுப்ப எழுவர். முன்னிரவில் தூங்கி வெள்ளி முளைக்க விழிக்க வேண்டிய தென்பதை முற்றும் மறந்தனர்.

முன்னோர்கள் காலைமாலை காலங்களில் கடவுள் தியானமின்றி இரார். அதனால் அவர்கள் ஆசாராதிகளைக் கைவிட்டார்கள் இல்லை. தங்கள் இல்லம் உடைமுதலியனவற்றைப்பரிசுத்த நிலைகளில் வைத்திருக்கவேண்டிஇருந்தது. கடவுள் பயம் பக்தியால் துற்குணாதிகளும் தலை எடுக்கவில்லை. அவர்களிடம் பரோபகார சிந்தை நிறைந்து, சத்காரிய சீலராய், சத்சங்கத்தராய், பெரியவர்களுடைய ஆசிபெற்று புத்திர மித்திர களத்திராதிகளுடன் நீடூழியாழ்திருந்து தேகவியோக மாயினர்.

இக்காலத்தவர்களுக்கு அவைகள் மிகவும் கஷ்டந்தான். அதன் பலாபலனும் அநுபவ திருஷ்டாந்தந்தான்.

முன்னோர்களுடைய பழக்க வழக்கங்களாவன. சூரியோதயத்திற்கு முன் நித்திரை விட்டெழல் வெட்டவெளியில் கொஞ்சதூரம் நடந்து மலஜலங் கழித்தல், பற்குச்சி அல்லது சாதாரணகளிமண்ணினால் பல்துலக்கல், குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்தல், காலைஜெபம் செய்தல், தேகப்பயிற்சியில் பழகல், தம்மில்லத்திற்குரிய கைத்தொழில் வேலைகளைத்தாராளமாகச்செயல் (இதில் தோட்டவேலை முதலியன அடங்கும்), சொல்ப சுசிகரமான ஆகாராதிகளை உண்ணல், மாலை ஜெபதபங்களைச் செய்தல், இரவில் மிதபோஜனம் உண்டு உலாவி முன்னிரவில் சயனித்தல் முதலியன.

இக்காலத்தவர் பலருடையபழக்கமோ சூரியகிரணாதிகள் அதட்ட நித்திரை விட்டெழல், நடையோ தடை, வீட்டின் ஓர் பாகத்தில் மலஜலங்கழித்தல், பல்தூள் பல் ப்ரஷ் (tooth-brush) இவற்றால் பல் துலக்கல், குளியலுக்கோ வெந்நீர் சோப் இன்றி முடியாது, காலைமாலை கடவுளைத்தொழுதலுக்கோ

நேரமில்லை, தேகப் பயிற்சியோ கஷ்டம், நடத்தல் இயலாதவேலை, தோட்டவேலைகளைச் செய்தால் தம்முடைய கௌரவத்திற்குக் குறைவு, நாகரீகத்தில் முதிர்ந்த சிலருடைய கால்களோ தங்களுடைய தேகத்தையும் சுமந்து நடவேனென்று மோட்டார் வண்டியில் ஏறிக்கொள்கின்றன, ஆகாராதிகளோ உயர்ந்த வஸ்துக்களும், மது மாம்சாதிகளின்றி உட்புகா, நித்திரையோ நடுநிசிக்குப் பின்தான்.

முற்காலத்திய பெண்மக்களுடைய பழக்கங்களையும் சற்றுக் கவனிப்போம். பொழுது விடியுமுன் எழுந்து வீட்டைச் சுத்தஞ் செய்தல், ஆறு, குளம், கிணறுகளினின்று ஜலங் கொண்டுவரல், வீட்டுப் பாத்திரங்களைச் சுத்தஞ் செய்தல், தான்யாதிகளைத் தீட்டல், பிறகு வீட்டின் சம்பந்தமான சில தேக பயிற்சியில் பழகல், குழவிகளுக்குத் தாங்களே பால் கொடுத்தல், கற்பகால முதல் குழவி பால் உண்ணலை விடும்வரை குழவிகளுக்குத் தகுதியான ஆகாராதிகளை உட்கொள்ளல், சாதாரண இயற்கை உடையில் திருப்தியடைதல், வயது முதிர்ந்த சில பெரிய பெண்கள் வீட்டின் வேலை யாதிகளின்மேல் தணிக்கைச் செயல் வீட்டுள்ளவர்களுடைய தேக ஆரோக்கிய ஸ்திதியைக் கவனித்து அவ்வவ்வமையத்திற்கேற்ற சிகிச்சை செய்தல் முதலாய காரியங்களைச் செய்து வந்தார்கள்.

இக்காலத்திய நவீன நாகரீகப் பெண்களோ அதிகாலையில் விழித்து எழமுடிகிறதில்லை. வீடும் இவர் விழித்தெழுமுன் சுத்தமாய் விடுகிறது. இவர்கள் ஜலந்திரட்டிக் கொண்டுவரவேண்டிய அவசியமில்லை, தான்யாதிகளைத் தீட்டவோ அனேக மில்கள் இருக்கின்றன. சமையல் வேலைகளையோ வீட்டு வேலைக்காரர்கள் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அதிக நாகரீக மிஞ்சியவர்கள் வீட்டில் குழவிகளுக்குப் பால்கொடுக்கத் தாதிகளிருக்கிறார்கள். கெற்பமுதல் ஆகாராதிகளோ தங்கள் மனம் போன போக்குதான். நர்சுகளும் லேடி டாக்டர்களிருக்க நமக்கேன் அந்தக் கவலை என்கிறார்கள். தாங்கள் கற்றுக்கொண்ட உயர்தரக் கல்வியால் உயர்ந்த ஆடையாதிகளைத் தரிக்கவேண்டியது அத்யந்த அவசியமாய் விடுகிறது. குடும்ப விஷயங்களைக் கவனிக்கவும் மேல் தணிக்கைகளைச் செய்யவும் நேரமில்லை. ஏனெனில் நவீன நாகரீகத்திற் கேற்ற நவீன உடைகளை விதம் விதமாக மாற்றிமாற்றி உடுக்கவும், மயிர்களை விதவிதமாகக் கோதிச் சீவித்தள்ளி அலங்கரிக்கவும், சினிமா முதலானவைகளுக்குப் போகவும், உல்லாசமாய் மோட்டார் வண்டியில் ஓடவும், இன்னுமிக்கொற்ற ஆடம்பரங்களில் ஈடுபடுவதற்கே நேரமில்லாதிருக்க வீட்டு விஷயங்களை எங்ஙனம் கவனிக்க முடியும்? ஏதோ சற்று தேகஜாட்டிய மடையின் நம்குடும்ப (Family) டாக்டரை உடனே கூப்பிட்டு வாருங்கள் என்பதுதான்.

மேற் குறித்த விஷயங்களைக் கவனிக்குங்கால் முன்னோர்கள் அகம் புறம் இரண்டின் சுகாதாரங்களைக் கவனித்தார்கள் என்று ஏற்படுகிறது. அதன் பலனும் அனுபவதிருஷ்டாந்தமாக இருக்கிறது. ஆனால் சில நாட்டு வாசிகள் இன்னும் அதே பழக்கத்தில் இருக்கிறார்கள். சில நகர வாசிகளோ காலத்திற்கேற்ற கோலமாக மாறிவிட்டனர். இன்றைக்கும் அனேகமாக நாட்டுவாசிகள், நகரவாசிகளைவிட நோயால் வருத்துவது குறைவுதான்.

ஆனால் எல்லோரும் முன்னோர்கள் அனுசரித்து வந்த எல்லாவற்றையும் இப்பொழுது கையாண்டு வரத்தான் வேண்டுமென்ற கொள்கையல்ல. தற்கால நிலைமைக்குத் தக்கவாறு நம் வழக்கங்களையும் மாற்றிக் கொள்ளத் தான் வேண்டும். ஆனால் முழுமோசம் போகாமல் கூடியவரையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குணமதைக் கைவிடாமல், தள்ளவேண்டியனவற்றைத் தள்ளிக், கொள்ள வேண்டியனவற்றைக் கொண்டு, கடவுளிடத்தில் பயபக்தி விஸ்வாஸமாக நடந்து கொண்டு, மனசாக்ஷிக்கு விரோதமின்றி நடந்து வரின் சுகமே விளையும்.

இதற்கு நம் அரும் பெரும் குலகுருவாம் முருகப்பெருமான் அருள்மாரி பொழிவாராக. சுபம்.

---

## நிருபம்

ம-ா-ா-ஸ்ரீ. அன்பின் மிக்க ஐயா பத்திரிகாசிரியர் அவர்கள் சமூகங்களுக்கு அடியேன் அநேக நமஸ்காரம். எங்கள் ஊரில் சில மாதங்களாகச் சங்கம் நடைபெறுவதில்லை. இக்குறையை நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் கூடிய சீக்கிரம் நிவர்த்திப்பார்கள் என்று நம்புகிறேன். சென்ற சுக்கில வருஷ பங்குனிமீ 17-தேதியில் மோகனூர் ஸ்ரீ. காந்தமலையின்கண் பாண்டமங்கலம் R. ஆறுமுக முதலியாருக்கும் மோகனூர் ஆ. சென்னி முதலியார் மகன் தங்கம்மாளுக்கும் நடந்த விவாகத்தில் தலைச் சங்கத்திற்கு நன்கொடையாக வந்தது அணா ஒன்பது நமது மித்திரனில் வெளியிடவும். இத்துடன் எட்டணா ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன்.

து. ல. சடையப்பன், மோகனூர்.

## நன்கொடை

மதுரை பிரபல வர்த்தகரும் தனவந்தரும் செங்குந்தர் சங்க உபதலைவரும் உயர் திரு. S. RM. சுந்தர முதலியாரவர்கள் தமது குமாரன் திரு. ஆறுமுகத்திற்குச்சமீபத்தில்நடைபெற்ற திருமணத்தின் போழுது செங்குந்த இளைஞர் சங்கநிதிக்கு இருபத்தைந்துரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். இவர்களது குலாபிமானமும் வள்ளற்றன்மையும் போற்றற்பாலது. திரு. ச. பழனியப்ப முதலியார் போன்ற செங்குந்த குலச்சீமான்கள் இம்முறையைப் பின்பற்றி நடப்பார்களாயின் நமது சங்கம் அதிசீக்கிரத்தில் அபிவிருத்தி யடையுமென S. மாணிக்க முதலியார் எழுதுகிறார்.

# குடியால் விளையும் கேடுகள்

[திரு. R. S. சாமியப்பன் அவர்கள், ஈரோடு]

'கள்ளுண்பார் நஞ்சுண்பர்.'

சாமான்ய ஜனங்கள் கள் சாராயம் முதலிய பானங்களை அருந்துகிறார்கள். இன்னும் சில பெரிய மனிதர்கள் பிராந்தி (Brandy) ஒயின் (wine) பீர் முதலிய பானங்களைப் பருகுகிறார்கள். இவ்வஸ்துக்கள் எவ்வகைப்பட்டனவென்றும், இவைகளை எவ்விதம் செய்கிறார்களென்பதையும், இவைதேகத்திற்கு வேண்டிய எவ்வித பதார்த்தங்களையாவது கொடுக்கின்றனவா என்றும், இவைகளால் நமக்கு உண்டாகும் நன்மை தீமைகள் எவை என்பதையும் கவனிப்போம்.

கள், சாராயம், ஒயின் முதலிய பானங்களில் ஒரு வித வஸ்து இருக்கிறது. அதற்கு ஆங்கிலத்தில் அல்கஹால் (Alcohol) என்றும் தமிழில் மதுஸாரம் என்றும் பெயர். இந்த அல்கஹால் என்னும் மதுஸாரத்தை முன் சொன்ன பானங்களிலிருந்து பிரித்து எடுக்கலாம். அப்படித் தனியாகப் பிரித்து எடுத்து ஸ்பிரிட்தீபத்தில் (Spirit lamp) எண்ணெய்க்குப் பதிலாக எரிக்கிறார்கள். இந்த மதுஸாரம் தீப்பட்டால் தானாகவே எரியும். இதை ஒரு பாத்திரத்திலிட்டு அப்பாத்திரத்தைத் திறந்து வைத்தால் அம்மதுஸார மெல்லாம் காற்றாகமாறி வெளியே போய் விடும். இவ்வித மதுஸாரம் என்னும் ஒரு வகைத்திரவ பதார்த்தம் பிராந்தியிலும் ஆரக் (Arrack) என்னும் சாராயத்திலும் நூற்றுக்கு ஐம்பது பாகமும், ஒயினில் பதினைந்து பாகமும், கள்ளில் எட்டுப் பாகமும் கலந்திருக்கிறதாகத் தெரிகிறது. இம்மதுஸாரத்தை எவ்விதம் உண்டு பண்ணுகிறார்கள் என்பதைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

புளிக்கவைக்கும் எந்தப் பதார்த்தங்களிலும் இந்த மதுஸார மேற்படுகிறது. நம்முடைய வீடுகளில் அரிசிமாவை ஜலத்தில் கரைத்து ஒரு பாத்திரத்தில் விட்டு இரண்டு அல்லது மூன்று நாள் வரைக்கும் அப்பாத்திரத்திலேயே வைத்திருந்தால் அந்த மாவு சிறிது பொங்கி வருவதையும் அதிலிருந்து பல சிறு கொப்புளங்கள் மேல் வந்து வெடிப்பதையும் பார்க்கலாம். இக்காலத்தில் அம்மாவில் மதுஸாரம் ஏற்படுகிறது. இதே மாதிரியாகத் திராக்ஷைப் பழத்தை நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டுச் சிறிது காலம் வரையில் வைத்திருந்தால் இதிலும் இம்மதுஸாரம் உண்டாகிறது. அதே விதமாகப் பனை, தென்னை முதலிய மரங்களின் பாளைகளிலிருந்து ஸாரத்தை இறக்கி அதைப் புளிக்கச் செய்து கள்ளாகச் செய்கிறார்கள். மேனாட்டில் இருந்து வரும் மதுஸாரம் இருக்கும் பானங்களைப் எப்படிச் செய்கிறார்கள் என்பதைக் கவனிப்போம். தோட்டக்காரர்கள் தோட்டத்திலிருந்து கொண்டு வந்த திராக்ஷைப் பழங்களை ஒரு தொட்டியில் போட்டு அதைக் காலால் மிதித்து அதிலிருந்து அதன் ஸாரத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அந்த ஸாரத்தைக் காய்ச்சி வடிகட்டி அவைகளைப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு வைக்கிறார்கள். அப்பாத்திரத்திற்குள் சிறிது சுண்ணாம்பு பூசி அந்த ஸாரத்தை அப்பாத்திரத்திற்குள் ஊற்றி பூமிக்குள் குழி தோண்டி அதில் இப்பாத்திரங்களைப் புதைத்து வைக்கிறார்கள். இப்பாத்திரங்களைப் பூமிக்குள் ஏழு அல்லது எட்டு வருஷங்கள் வரைக்கும் வைத்திருக்கிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு அதிக நாள் வரைக்கும் பூமிக்குள் வைத்திருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அந்தத் திராக்ஷ ரசத்தில் புளிப்பு அதிகரிக்கும். புளிப்புக்குத் தகுந்தாற் போல் மதுஸாரமும் ஏற்படும். ஆனது பற்றிக் கள், சாராயம், ஒயின் முதலியவைகளில் அல்கஹால் என்னும் மதுஸாரம் புளிக்கவைப்பதால் உண்டாகிறதென்றும், சிலவற்றில் சிறிதாகவும் சிலவற்றில் அதிகமாகவும் கலந்திருக்கிறது என்றும் தெரிகிறது.

இந்த மதுஸாரத்தை உட்கொள்வதால் தேகத்திற்கு வேண்டிய எவ்வகைப் பதார்த்தங்கள்கிடைக்கின்றனவென்றும்சிறிதுகவனிப்போம். முதலாவதாக, நம்முடைய தேகத்திற்கு வேண்டிய ஆகாரத்தில் மூன்று விதப் பதார்த்தங்கள் இருக்க வேண்டியது அவசியமென்று தெரிகிறது. அவைக (1) எரியும்படியான பதார்த்தம். இது இங்கிலீ

ஷில் Heat giving substance என்று சொல்லப்படுகிறது. இது நகரும் சக்தியை உண்டு பண்ணுகிறது. சர்க்கரை போலொத்த பதார்த்தங்களும் எண்ணெய் போல் இருக்கும் பதார்த்தங்களும் எரியும் படியான பதார்த்தங்களாகும். எண்ணெயை நெருப்பிலிட்டால் எவ்வளவு தீவிரமாக எரிகிறது! (2) மாம்ஸம் வளர்க்கும் பதார்த்தம். இதை ஆங்கிலத்தில் Flesh Forming substance என்று சொல்லுகிறார்கள். (3) எலும்பு, நகம், பல் முதலியவைகளை வளர்க்கும் பதார்த்தம். இவைகள் சில உப்புவகைகள். இவை Mineral substance என்று சொல்லப்படுகின்றன. இந்த விதமான மூன்று பதார்த்தங்களைத் தவிரத் தண்ணீரும் தேகத்திற்கு வேண்டியது மிகவும் அவசிய மென்றும் தெரிய வருகிறது. இந்த விதமான மூன்று பதார்த்தங்களும் இருந்தால்தான் தேகம் வளரும், தேகத்தில் உஷ்ணம் ஏற்பட்டு நகரும் சக்தியை உண்டாக்கும். இந்த விதமான நான்கு பதார்த்தங்களில் ஒன்றையும் கள் சாராயம் முதலியவைகளில் இருக்கும் மதுஸாரம் சேர்ந்ததல்ல வென்று நன்கு தெரிகின்றது. ஆகையால் இந்த மதுஸாரமுள்ள கள் சாராயம் முதலியவைகளை நாம் பருகுவதினால் உண்டாகும் தீங்குகள் என்னவென்றும் கவனிப்போம்:—

1. தேகத்திலுள்ள சதை, தோல், எலும்பு முதலிய ஒவ்வொன்றும் ஒரு வித ஜீவாணுக்க (Protoplasm)ளால் அமைக்கப்பட்டிருக்கின்றது. நாம் உட்கொள்ளும் ஆகாரம் இவ்விதமான ஜீவாணுக்களை உண்டாக்குகிறது. ஆனால் இம்மதுஸாரமோ இந்த மாதிரியான ஜீவாணுக்களை வளர்ப்பதினின்றும் கொல்லுகிறது. மண்ணில் வித்துக்களை ஊன்றி மதுஸாரம் கலந்த தண்ணீரை விட்டால் விதைகள் நன்றாய் முளையா. ஆகையினால் மதுஸாரம் தேகத்தைக் குறைக்கிறது. ஆகாரமோ அப்படி இல்லை; தேகத்தை வளரச்செய்கிறது.

2. இந்த மதுஸாரத்தை அருந்துவதினால் தேகத்திற்கு உஷ்ணம் உண்டாகிற தென்றும் நினைக்கிறார்கள். அப்படி அதைப் பருகுவதினால் உஷ்ணம் உண்டாவதில்லை என்றும் தெரிகிறது. தண்ணீரைப் போல் இது தாகத்தைப் போக்காது என்றும் தெரிகிறது. ஒரு சீசாவில் கொஞ்சம் அல்கஹால் என்று சொல்லப்படும் மதுஸாரத்தை விட்டு அதில் ஒரு சிறு துண்டு வாழைப்பழத்தைப் போட்டால் அப்பழத்திலுள்ள நீர் எல்லாம் சுண்டிப்போய் விடுகிறது. ஆகையால் இம்மதுஸாரத்தை நாம் பருகுவதால் இம்மதுஸாரத்திற்கு நம் தேகத்திலுள்ள ஜலத்தை இழுத்துக் கொள்ளும் சக்தியிருப்பதால் தாகத்தை அதிகமாக உண்டாக்குமேதவிர தாகத்தைக் குறைக்காது. இக்காரணம் பற்றியே இதைப் பானம் பண்ணுகின்றவர்கள் இதை மேன்மேலும் குடிப்பதற்கு விரும்புவார்கள்.

3. சிலர் ஒயின், பிராந்தி முதலியவைகள் பசியை உண்டு பண்ணுகின்றன வென்றும் அதைக் குடிக்கிறார்கள். அதுவும் சரியல்ல வென்றும் தெரிகிறது. இந்த மதுஸார வஸ்து இரைப்பையைச் சிறிது அருவி ஜீர்ண நீரை வெளி வரும்படி செய்கிறது. அதனால் ஆகாரமும் சிறிது பாகம் ஜீர்ணமாகும். ஆனால் இப்பழக்கத்தை அவ்விரைப்பைக்கு வைத்து விடுவோமாயின் அவ்விரைப்பை கெட்டு விடும். முதலில் ஜீர்ண நீர் சிறிதளவு பெருகுவதற்குச் சிறிதளவு ஒயின் போதுமானதாயினும், பிறகு அஜ்ஜீர்ண நீர் உண்டாவதற்கு மேல் மேல் இந்த மது வஸ்துவை அதிகமாய் இரைப்பை விரும்பும். ஆனால் இம்மதுஸாரம் அதிகமானால் இரைப்பையில் புண் உண்டாகி அது முற்றிலும் கெட்டுப்போய் விடுகிறது.

4. சிலர் இந்த மதுஸார முள்ள சாராயத்தையோ பிராந்தியையோ இன்னும் மற்ற மதுஸார முள்ள வஸ்துக்களையோ உட்கொள்வதால் தேகத்திலுள்ள வலியும் களைப்பும் தீருமென்று அவைகளைப் போக்குவதற்காக உட்கொள்வதும் உண்டு. அப்படி உட்கொள்வதும் சரியல்ல வென்று தெரிகிறது. தேகத்தில் வலியும் களைப்பும் ஏற்படுகின்ற காலத்தில் இந்தப் பானம் நரம்பு ஸ்தானங்களை ஒருவிதம் தாக்கி அவ்வித களைப்பை உணரவொட்டாமல் செய்கிறது. இப்படிச் செய்வதால் தேகத்தின் வலியைப் போக்கி விடலாமென்றும் நினைக்கிறார்கள். அவ்விதம் போக்க முடியாது. தேகத்தில் உண்டாகும் வலியும் களையும் சில வியாதிகள் உண்டாவதற்கு முன்வரும் சில அடையாளங்களாகும். அவ்வித அடையாளங்களை முன்னமே தெரிந்து கொண்டால் இவ்வியாதிகளை வராமல் தடுத்துக்கொள்ள இடமுண்டு. அப்படிக் கில்லாமல் அவ்வடையாளங்களை வெளித்தெரியாமல் செய்து இப்பானங்களால் அடக்கி விட்டால் கொடிய நோய்கள் வரும்.

5. இன்னும் சிலர் தங்கள் மனக்கவலையைப் போக்கி உத்ஸாகமாய் இருப்பதற்காக இதை ஒருஉபகரண மென்று உட்கொள்வது முண்டு. இதுவும் சரியாகாது. தேகத்தில் உயர்ந்தது மூளை என்பதே. இம்மூளை ஒரு ராஜாங்கம் போல் மற்ற உறுப்புக்களைச் சரியாய் வேலை செய்யும்படி ஏவியும், அடக்கியும், ஆண்டும் வருகிறது. இராஜாங்கம் கெட்டுப்போய்விட்டால் கீழ்ப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்குத் தோன்றியவாறு நாட்டாண்மை செய்வார்கள் அல்லவா? இராஜ்யம் ஒழுங்கீனமாய்ப் போய்விடும், பிரஜைகள் கஷ்டப்படுவார்கள். மூளைக்குக் கெடுதல் நேர்ந்தால் எல்லா உறுப்புக்களும் வேலை செய்யாது.

அதேவிதம் மூளைக்குக் கெடுதல்கள் நேர்ந்தால் அதில் பல எண்ணங்களும் பல தோற்றங்களும் உண்டாகும். அவைகளுக்குத் தகுந்தபடி வாய் பிதற்றும், கண் ஒருவிதம் விழிக்கும், மற்றைய புலன்களும், உறுப்புக்களும் தாறு மாறாக வேலை செய்யும். இவ்விதக் கெடுதலை உண்டாக்குகின்றவை இந்தப் பானங்களிலுள்ள மதுஸாரம் என்பதை நாம் எல்லோரும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். கள் சாராயம் குடித்தவர்கள் மெய் மறந்து ஆடுவதும் பாடுவதும் மூளையில் மதுஸாரத்தினால் உண்டாகும் கெடுதல்களேயன்றி அவர்கள் தாங்களாகவே நினைத்து ஏற்படுத்திக்கொள்ளும் உத்ஸாகமல்ல. இவ்விதப் பானத்தை அடிக்கடிச் செய்வதால் நரம்புகள் தளர்ச்சி அடைந்து கை கால்கள் ஸ்வாதீன மில்லாமற் போய்விடும்.

6. சில டாக்டர்கள் இப்பானத்தை மருந்தாக சிறிது உபயோகிக்கச் சொல்வது முண்டு. அவ்விதம் அவர்கள் சொல்லும் முறைப்படி உபயோகித்தால் கெடுதல்கள் நேராதென்றும் தெரியவருகிறது. சிலர் இந்த மதுபானத்தை மருந்தாகக் கூட உபயோகிக்கார்கள்.

7. மதுஸாரமுள்ள மதுபானத்தைப் பருகுகிறவர்களின் தேகத்தில் தொத்து நோய்கள் சீக்கிரம் உண்டாகும்.

8. இவர்களின் தேகம் சீக்கிரம் களைக்கும். ஆனதுபற்றி அல்கஹால் என்று சொல்லப்படும் மதுஸாரம் இருக்கும் மதுபானம் தேகத்திற்கு வேண்டிய எவ்விதமான பதார்த்தங்களையும் கொடுப்பதில்லை என்றும், தண்ணீரைப்போல் தாகத்தைத் தீர்ப்பதில்லை என்றும், இதனால் தேகத்தின் வலிபோகுமென்று நினைத்தல் பிசகென்றும், இதனால் மனிதர்களின் உயர்ந்த உறுப்பாகிய மூளை கெட்டு விடுகிறதென்றும் அப்படி மூளை கெட்டுப் போய்விடுகிறதால் பலவித தோற்றங்களும் பலவித எண்ணங்களும் உண்டாகிறதென்றும், தொத்து நோய்கள் உண்டாகின்றன வென்றும் தெரியவருகிறது.

நிற்க இனி நாம் மதுபானத்தினால் வழி வரும் கேட்டை இன்னும் சிறிது விவரிப்போம். சொற்ப வரும்படியுள்ள மனிதர்கள் முக்கியமாக கள் சாராயம் முதலிய பானங்களைப் பருகுகிறார்கள். இம்மனிதர்களில் ஒருவன் தினம் ஆறு அணா சம்பாதிப்பானாகில் அவன் குடிப்பதற்கே பூராப் பணம் செலவிட்டுக் குடித்தனம் செய்வதற்குக் கையில் ஒரு காசுமிராது. இவனுக்குக் குழந்தைகள் இருந்தால் அவைகளைப் போஷித்து வருவதற்குப்பணம் இல்லாமற் போய்விடும். முன் சொல்லப்பட்ட பிரகாரம் கள் சாராயம் முதலிய மதுபானங்களைப் பருகுகிறவர்கள் அம்மதுவை மேன்மேலும் குடிப்பதற்கு ஆசைப்படுவார்களாதலால் அவன் தினந்தோறுஞ் சம்பாதிப்பது ஆறு அணா என்றால் அவன் குடிப்பதற்கே பணம் இல்லாமற் போய்விடு மென்றே சொல்லலாம். ஒரு நாள் குடித்துப் பழகிவிட்டால் இக்குடி ஆயுள் நாள்வரைக்கும் குடிக்கச் செய்யும். இஃது இவ்வாறாக இருந்தால் குடித்தனம் செய்வதற்குப் பணம் எங்கே? ஆனால் அவனுடைய மனைவி கூலிவேலை செய்து அவளுக்கு வரும் வரும்படியைக் கொண்டு தன் குழந்தைகளுக்கும் தனது நாயகனுக்கும் சாப்பாடு போடுகிறாள். அவளும் பணம் சம்பாதிக்காவிட்டால் அவளுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு வழி இன்றிப் போய்விடும் அல்லவா? அவன் இம்மதுவைக் குடித்துவிட்டுக் குடிவெறியால் ரோட்டுகளில் புறளுவதையும் அவன் ஆங்கு ஆடும் ஆட்டங்களையும் அவன் வாயிலிருந்து வரும் சொற்களையும் இன்னும் அவன் செய்யும் காரியங்களையும் எடுத்துச் சொல்வதற்கு இவ்வேடு இடம் தராதென்றுஎண்ணியே சுருக்கமாகச் சொன்னேன். இக்குடியினால் சூதாடல், கலகம், பொய் சொல்லுதல், கொலை செய்தல் முதலிய இன்னும் பல காரியங்கள் உண்டாகும். சொற்ப வரும்படியுள்ள மனிதர்களுமின்றிப்பணக்காரர்களில்அநேகர் இம்மதுபானத்தை உபயோகப் படுத்துகிறார்கள். சொற்ப வரும்படியுள்ள மனிதர்கள்

குடிப்பதைக் காட்டிலும் இவர்களே பெரிய குடிகாரர்களாகிவிடுகிறார்கள். இவர்கள் தங்களிடம் இருக்கும் பணங்களைஎல்லாம் துலைத்துக் கடன்பட்டுக்கடைசியில்கடன் கட்டவழியின்றிஇன்சால்வென்ட் கொடுத்துவிட்டு ஓடிப்போய் விடுகின்றனர்: இவர்களை ஒத்தவர்கள் தற்காலத்தில் இருக்கும் மைனர்கள் என்று சொல்லப்படும் பெருந்தன்மையான செலவுடையோர்களாகும். இக்குடி இவர்களைத் தாசி வீடு ஏகும்படி செய்கின்றது. இவர்கள் பார்வைக்குக் குடிகாரர்களென்றே தெரியாது. இவர்கள் சொற்ப வரும்படியுள்ள ஏழை மனிதர்கள் சென்று கள்ளுக்குடிக்கும் கடைகளுக்கும் சாராயக் கடைகளுக்கும் போவதில்லை. ஆனால் இவர்கள் சென்று குடிக்கு மிடங்கள் எங்கென்று கேட்குமளவில் தற்கால நாகரீகத்திற் கேற்றவாறு அமைந்துள்ள ரிப்ரெஷ்மெண்ட் ரூம்களும் இன்னும் அநேக இடங்களுமாம். இவர்கள் இவ்விடங்களுக்குச் சென்று குடித்துவிட்டு வருகிறார்கள். இவ்விடத்தி ள்களென்னும் மதுபானம் இருக்காது. ।ஆனால் இவ்விடங்களில் இருப்பவை பிராந்தி, ஒயின், பீர், ஜின் முதலிய மேனாடுகளில் இருந்து வரும் மதுபானங்களாகும். கள் மதுபானத்தைவிட இவைகள் மிகவும் விலை அதிகம். விலை அதிக முள்ளவைகள் என்பது நமக்குத் தெரிந்த விஷயமே. ஒருவன் கள் குடிப்பதற்கு நாலணா இருந்தால் போதுமானது. ஆனால் ஒருவன் முன் சொன்ன மேனாட்டுப் பானங்களைப் பருகுவதற்கு பணம் அவனுக்கு ரூபாய் கணக்கில் வேண்டுமாதலால், இவர்கள் தினந்தோறும் குடித்துவந்தால் இவர்களிடம் இருக்கும் பணம் பூராவாக இக் குடியிலேயே செலவாகின்றது. இப் பாழுங்குடியினால் அநேக குடும்பங்கள் நாசமாகின்றன. ஆகையால் இம் மதுபானத்தால் ஏற்படும் கெடுதல்கள் அநேகமிருந்தாலும் இத்துடன் என் வியாசத்தை முடித்து இனிமேலாவது நம் சகோதரர்கள் இப் பாழுங்குடியில் விழாமல் சுக மடைவரென நம்புகிறேன்.

---

இது போட்டிப் பரீக்ஷைக்கு எழுதி யனுப்பிய நல்ல வியாசங்களுள் ஒன்று பரிசுபெற்ற வியாசம் சென்றமாதம் பிரசுரமாயுள்ளது. பர்.

---

## வர்த்தமானம்.

ஈரோட்டில் கூடிய நமது மகாநாட்டில் நம் குலத்து நெசவுக்காரர்கள் க்ஷேமத்தை முன்னிட்டுக் கூட்டுறவு வியாபார சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக்க, சென்ற இரண்டொரு மாதங்களாகச் செங்குந்த வியாபாரிகள் செங்குந்த நெசவுக்காரர்களுக்குப் பாவு ஒன்றுக்கு ரூபாய் இரண்டு கூலியில் குறைத்து விட்டார்கள். இத்தகைய செய்கையானது நம் குல நெசவுக்காரர்கள் நன்மைக்கு நேர் விரோதமானதாயிருப்பதோடு, மகா நாட்டுத் தீர்மானத்தின் நொக்கத்திற்கும் முற்றும் மாறுபட்டதாயிருக்கிறதென்றும், முக்கியஸ்தர்களாகக் கருதப்படும் இவர்களே இப்படிச் செய்தால்;நமது குலம்-ஏழைகள் நிறைந்த செங்குந்த குலம்-எவ்வாறு மேன்மை யடையக் கூடும் என்றும், இவ்வாறு பணக்காரர்கள் ஏழைகளைக் கஷ்டத்திற் குள்ளாக்குவதற்காகத் தாங்கள் வருந்துவதாகவும், எல்லாம் வல்ல இறைவன் ஏழைகள் ஈடேற அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திப்பதாகவும் பொருட்பட மிகுந்த வருத்தத்தோடு கோளாநல்லிபெரியூரைச் சார்ந்த புதூர்ச் செங்குந்தர்கள் சிலர் எழுதிய நிருபம் ஒன்று எமக்குக் கிடைத்திருக்கிறது.

இது சம்பந்தமாக நம்குல வியாபாரிகள் நம்மவர் எல்லோரிடத்தும் சகோதர'பான்மை காட்டித் தங்களுக்கு நஷ்டமில்லாதபடியும், ஏழைகளான நெசவுக்காரர்களை வருத்தாதபடியும் நடந்து கொள்வார்களென எதிர்பார்க்கிறோம்.

## கல்வியில் முயற்சி

இச்சங்கத்தின் முயற்சியால் இவ்வூரில் பெண்களுக்காக ஒரு போர்டு எலிமெண்டரி ஸ்கூல் நிறுவப் பெற்றிருக்கிறது. இதில் சுமார் 30 செங்குந்தர் பெண்கள் மாத்திரமே படிக்கிறார்கள். இப்படி ஒரு பாடசாலை தொடங்கியும் நம்மவர்களுக்குப் பெண்களைப் பள்ளிக்குச் சரியாக அனுப்புவதென்றால் கஷ்டமாயிருக்கிறது. வள்ளுவநாடு தாலுக்கா பிரசிடெண்டு அவர்களுக்கு இச்சங்கம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

இச்சங்கத்தலைவர் திரு. எம். ராமன்முதலியார் அவர்கள் படிப்பில்லாச் சிறுவர்களுக்காகவும், பெரியவர்களுக்காகவும், ஒரு இராப்பாடசாலை தொடங்கி இப்போது $1\frac{1}{2}$ வருஷம் ஆகிறது. தற்சமயம் 3. உபாத்தியாயர்களும், 50 பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவ்வருஷம்கவர்ன்மெண்டார் ரூபா. 104 அணா 12 கிராண்டு கொடுக்க உத்தரவு செய்திருக்கிறார்கள். இவ் விராப்பாடசாலையை ஸ்தாபித்த நமது சங்கத்தலைவருக்கும் நன்றி பாராட்டுகிறோம்.

A. மந்திரி முதலியார்,

பாலப்புரம் செங்குந்தர் அபிவிர்த்தி சங்கக் காரியதரிசி.

# பொது விஷயங்கள்

## சீவகாருண்யம்

திரு. K. S. வேலுமுதலியார்

சீவகாருண்யம் என்னும் தலைப் பீந்து யான் எழுதப் புகுந்ததின் நோக்கம் நமது செங்குந்த சமூகத்திடையே பதிந்து கிடக்கும் அன்பின்மேலீட்டினாலேயாம். நமது செங்குந்தர்கள் பெருமையும், முற் காலத்தில் நம்தலைவர்கள் செய்து வந்த அரிய தொண்டுகளும், காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் நன்முயற்சியால் "செங்குந்தர் பிரபந்தத்திரட்டு" என்னும் உயரிய புத்தகத்தில் விரிவாகக் கூறப்பட் டிருக்கின்றன.

சீருஞ் சிறப்பும் ஒருங்கே யமையப் பெற்ற நமது சமூகத்தில் எனக்குத் தெரிந்த சிற்சிலவூர் (மதுரைப்பகுதி) களில் பெரும்பாலோர் புலாலுணவை விலாப்புடைக்கத் தின்பதை யான் நேரில் பார்த்திருக்கிறேன். புலாலுண்பதால் கொடிய பிணிகளுக் காளாகிறோமென்பதையும், அதனால் நாம் கடைத்தேற முடியா தென்பதையும் உணருவார்களானால் அதை யறவே ஒழித்து விடுவார்களென்பது திண்ணம். மேலும், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடத்தும், சீவகாருண்ய மில்லையேல் அவன் மனிதப்பிறவியிற் சேர்ந்தவனல்லன் எனப் புராண இதிகாசங்களும் மெய்யடியார்கள் சரிதைகளும் அறிவுறுத்துகின்றன. இஃது பற்றியே :—

"மருவாணைப் பெண்ணாக்கி ஒரு கணத்தில்
கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி இறந்தவரை
எழுப்புகின்ற உருவ னேனுங்
கருவாணையுற விரங்கா துயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்தனேவெங்
குருவானை எமது சிவக்கொழுந்தாணை
ஞானி யெனக்கூறொணாதே"

என இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்திருக்கின்றார். இஃதிவ்வாறிருக்க,

நமது சமூகத்தவர்களிலொரு சாரார் "நாங்கள் ஆடு வெட்டுவது எங்களுக்கல்ல" வென்றும், "எங்கள் குலதெய்வங்களாகிய காளி, கருப்பண்ணன், முனியாண்டி, இருளாண்டி முதலிய தெய்வங்களுக்" கென்றும் சொல்லி, இரண்டு பேர் கால்பிடிக்க ஒருவர் சிரம்பிடிக்க மற்றொருவர் கூரிய அரிவாள் கொண்டறுத்துச் சிரம்வேறு, உடல் வேறு, உடலுக்குள்ளிருக்கும் உறுப்புக்கள் வேறு இப்படிப் பல விதப் பாகுபடுத்திச் சமையல்செய்து தங்கள் தங்கள் விலாப்புடைக்கத்தின்று களிப்படைகின்றார்கள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! ஆறறிவு கொண்டமக்கள் ஐயறிவு கொண்ட விலங்கினங்களை அறுத்துப் புசித்து மாக்களாகின்றனரே. "தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிதூனுண்பான்" என்பது போல ஊனைப் பெருக்கவைப்பதால் என்ன பலன் என்பது நமக்கு விளங்கவில்லை, தான் விலாப்புடைக்கத்தின்னவேண்டுமென்றால் பிறர் ஏளனம் பண்ணுவார்களே என்னுங் கருத்துக்கொண்டா தெய்வங்களின் மேல் பழியைச் சுமத்துகின்றனர்? என்னே மதியீனம்! இங்ஙனம் கூறித் திரியும் பாமர ஜனங்களுக்கு நாம் என்ன சொல்லுவதென்று விளங்கவில்லை. எல்லா சீவராசிகளையும் காத்து இரட்சிக்கும் தெய்வங்கள், இவர்களுக்குச் சொப்பனத்தில் வந்து தோன்றி, "எங்களுக்கு ஆடு கோழிகளை வெட்டி அறுத்துப்படையுங்கள்" என்று சொல்லுகின்றன போலும். இத்தகைய எண்ணமுடையமக்களை எங்ஙனம் மானுடப்பிறவியெனச் சொல்லுகின்றது.

ஒரு சமயம் யான் ஒருவரிடம் புலாலுண்பது கூடாது என்று கூறியபோது அவர், "போமய்யா போம், உமக்கொன்றுந் தெரியாது. கருவாட்டின் மண்டையைக்கடுக்கென்றுகடித்தால், கயிலாயவாசல் படக்கென்று திறக்கும்" என்று பதிலிறுத்தார். உடனே நான் அம்மட்டோடு பேச்சை நிறுத்திவிட்டேன். இத்தகையோருக்கென ஓர் வழி நேராகவிருக்கின்றது போலும். இன்னும் சிலர் புலாலுண்ணலாம், உயிர்வதைமட்டும் செய்யக் கூடாதெனக் கூறுகின்றனர். அந்தோ! இவர்களறியாமைக்கென்செய்வோம்! உலகத்தில் புலாலுண்பவரில்லையாயின் உயிர்வதை செய்வோருமில்லை யென்பதை இவர்களறியவில்லை. சிலர், "காய், கனி, கிழங்கு, இவைகட்கு உயிரில்லையோ, அவைகளை அரிந்துவேகவைத்துத்தின்னலாமோ" என அறைகின்றனர். இவ்வினாவிற்கு விடைபகர்வது அவசியம். காய், கனி, கிழங்கு முதலியவைகள் எழுவகைப் பிறவிகளில் ஊறு ஒன்றினையே உணரும் தன்மையதாகிய தாழ்ந்தபருவத்தையுடைய தாவரப் பொருள்களாயிருக்கின்றன. இதுபற்றியே, ஊறு(ஸ்பரிசம்) ஒளி (ரூபம்) ஓசை (சப்தம்) நாற்றம் (கந்தம்) சுவை (ரசம்)யெனும் ஐயுணர்வுகளில் தொடுதலுணர்வாகிய ஊறு ஒன்றினையே யுணரும் ஓரறிவுயிர்கள், மற்றைய ஓசை, யொளி, நாற்றஞ், சுவையெனும் நான்கு உணர்வுகளையும் அறியும் ஆற்றலின்றி மயங்கிக்கிடக்கின்றன. ஆதலால், துன்பத்தையுணரும் தன்மை அவற்றினிடத்து இல்லாமற் போகின்றது என்பது நன்கு புலனாகின்றது. இனி எவ்வுயிரிடத்துத்துன்பம் உணரும் தன்மை காணப்படவில்லையோ அவ்வுயிர்க்குப் பிறரால் ஒரு துன்பமும் நேரிடப் போவதின்று என்பதும் உண்மையாம். உதாரணமாக:—

ஒருவன் மட்டுக்கு மிஞ்சிக் கட்குடித்துக்களித்து அதனால் அறிவிழந்து மதிமயங்கி மானமழிந்து திரிந்தால், அவனை எச்செயல் செய்து துன்புறுத்தினும் அவன் அச்செயலையும், அச்செயலால் விளைவிக்கப்படும் துன்பத்தினையும் ஒரு சிறிதும் உணர

முடியாது மயங்குவதுபோல, அறிவு வடிவமாகிய ஆன்மா, மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்புலனும் அமைக்கப்படாத தாவரவர்க்கத்தில் மரம், புல் முதலிய உடம்புகளைப் பொதிந்து வெளிப்பட்ட காலை அவைகள் தொடுதல் உணர்வொன்றினை யொழிந்து பிறிதொகு உணர்வையும் உணர இயலாத நிலைமையில் துன்புறுந்தன்மையை யறிய முடியாதிருக்கின்றன வென்பது முடிந்த கொள்கையாம்.

இனி தொடுதலினின்றும் உணரும் ஸ்பரிச உணர்வு ஒன்றினை யன்றித் துன்பத்தினை உணரும் தன்மை தாவரங்கட்கு இல்லையென நாம் அறிவது எங்ஙனம்? எனின்; அது எலும்பு, தோல், நரம்பு, இரத்தம், சதை, மயிர், நகம் என்னும் சப்த தாதுக்களின்றி, நகம் மயிர் போன்ற தாதுக்களினால் உண்டாக்கப்பட்ட உடம்பானதால், மயிர் நகம் இவைகளைக் களைகின்ற காலத்து, மக்களாகிய நாம் துன்பம் உணராத்தன்மை போன்று, ஊறையுணரும் இயல்பினவாகிய தாவரங்களும், அவைகளை அறுத்தும், வெட்டியும். கொத்தியும் துன்பச் செயல்களைச் செய்த போதிலும் அவைகட்குத் துன்பம் நிகழ்கின்றதில்லை. இங்ஙனம் துன்பம் நிகழாத நிலையில் மக்களிடத்துத் தங்கி வருத்தும் பசிப்பிணியை நீக்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவுப்பண்டங்களை மக்கள் பெற இத்தாவரப் பொருள்களை அரிந்து வேக வைத்துத் தின்னலாமென வேத சுருதிகள் மொழிகின்றன. ஆதலான், மக்கள் தாவரப்பொருள்களை உண்ணுவதால் ஒரு வித பாவமும் கிடையாதென்பது நன்கு புலனாகின்றது. இவைகளை உணராமல் மனைவியையும் மாதாவையும் ஒன்றென மதித்துக் கூறும் மூடர் கூற்றுக் கொப்ப வினா பகர்வதில் யாது புண்ணியமோ? அறிகிலேன்.

இன்னும் சிலர், கிரிஸ்து மதத்திலும், இஸ்லாம் மதத்திலும், புலாலுண்ணும்படி சொல்லியிருக்கின்றதே எனக் கூறுகின்றனர்; அம்மதங்களிலுள்ள இயேசுவும், முகம்மது நபியும் சொன்னவைகளில் ஒரு சிறு பகுதியை ஈண்டு குறிப்பிடுகிறேன்:—

கருணையே உருவாக வந்த இயேசு நாதரோ எவ்வுயிர்களிடத்தும் அருள் சுரந்து நின்ற கருணையங் கடலேயாவர். அவரது கருணையின் செயல்களே தற்காலத்து எங்ஙணும் பரந்து விரிந்து நிலவுகின்றன. இவர் புலாலுண்ணும்படியாய் உலகமக்கட்குப் போதித்ததேயில்லை. இவர் இவரது சீவிய கால பரியந்தம் உயிர்களிடத்து அருளுடையோராய், அருட் பெரும் வள்ளலாய், பொறுமை யரசராய் அமர்ந்திருந்தனர். இவரது பெருந்தகைமையை அறியாத ரோமாபுரி அரசாங்கத்தார், இவர் தேவநிந்தனை செய்தாரென்னும் குற்றத்தை இவர் பேரில் சுமத்தி இவருக்கு மரணதண்டனை விதித்தார்கள். அது காலை, இயேசு நாதர், ஓர் பூங்காவனத்தில் தமது சீடர்களுடன் தேவ வணக்கம் செய்து கொண்டிருந்தார். அவ்வுரோமாபுரி அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்ட யூதர்கள் இவர் பூங்காவனத்திலிருப்பதை யறிந்து அவ்விடம் சென்று இவரைக் கட்டி யிழுத்துக்கொண்டு வந்தனர். வரும் வழியில் இவர் பேரில் எச்சிலையுமிழ்ந்தும், திட்டியும், அடித்தும் இழுத்துச் சென்றனர். இவையனைத்தையும் அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சீடர்களிலொருவராகிய பேதரு வென்பவர் இவைகளை யெல்லாம் பொறுக்க முடியாதவராய் தன்னுடைய உறையில் கிடந்த வாளையுருவி அவ்யூதர்களிலொருவனை ஓங்கி வெட்டினார். அவ்வெட்டினால் யூதன் செவியொன்று அறுந்துபட்டது. அதைப் பார்த்த பொறுமைக்கரசர்: 'பேதரு? வாளை உறையில் போடு, வாளெடுப்பவன் வாளால் மடிவான், என அறிவுறுத்தினார். என்னே! இவரின் பெருந்தன்மை! இறைவனருளால் சகல வல்லமையும் பொருந்திய இயேசு, இவ்வாபத்தினின்றும் மீள முயன்றாரா, இத்தீச் செயலை இவர் மாட்டுப் புரிந்த அவ்வுரோம தேசத்து மக்களையும், அவ்வரிசினரையும் எச்செயலாலும் அழித்து விட நினைத்தாரா? இல்லை. இவர் அம்மரண தண்டனைக்குக் கீழ்ப்படிந்து சிலுவையில் அறையப்பட்டார். பொறுமையோடு கூடிய பெரியோர்கள், தமக்குத் தீங்கிழைப்போருக்குத் தாம் திரும்ப ஒரு கெடுதியும் செய்யார்களாயினும், அத்தீயவர்களால் ஏற்படும் கெடுதியினைத்தெய்வ அருள் கொண்டு நீக்கிக் கொள்வார். இயேசு நாதரோ! தமக்குத் தீங்கிழைத்தோருக்குத் தீங்கிழையாமலும், அத்தீங்கினால் வரும் துன்பத்தினைத் தெய்வ அருள் கொண்டு நீக்கிக்கொள்ளாமலும், அத்துன்பத்தினையேற்று உயிர் நீத்துப் பின் மூன்றாம் நாள், ஆகாயத்தில் தமது அருள்வடிவத்தினைக் காட்டி அத்தீய குணமுடையோரை யெல்லாம் திருத்த முயன்று காட்சி கொடுத்தார். இத்தகைய பொறுமை வள்ளலா புலாலுண்ணும்படி போதிப்பார். என்னே அறியாமை!

இனி, முகம்மது மார்க்கத்தவர்களின் அதிபரும், அருள் வடிவத்தினருமாகிய நபிநாயகரவர்களைப் பற்றிச் சிறிது கூறுவாம்:—

நபிநாயகம் பிறந்த ஊர் பாலை வனங்கள், நிறையப்பெற்ற 'அராபி' தேசம். அத்தேசத்தின் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய உணவு ஈச்சம்பழம், ஒட்டகப்பால், ஆட்டின் இறைச்சி இவைகளே. நாயகம் பிறப்பதற்கு முன் அத்தேசத்தினர் இந்த உணவுகளைக் கொண்டு தான் வாழ்நாட்களைக் கழித்து வந்தனர். இதை விடவேறு கதியில்லை என்னும் உண்மையை அறிந்த நபிநாயகம் அவர்கள் இவ்வுணவை மாற்றினால் வேறு உணவுப்பொருள்கள் கிட்டுவது மின்றி, அரபியர்களும் உணவின்றி மடிவார்கள் என்னும் கருத்துக்கொண்டு ஆட்டின் இறைச்சியை உண்ணும்படி வகுத்ததோடு அக்கொலைப் பாவம் நீங்குவதற்கு 'பிஸ்மி' என்னும் வேத மந்திரம் சொல்லி இறைவன் பால் விண்ணப்பித்துப் புலாலுண்ணும்படி விதித்திருக்கிறார். 'பிஸ்மி' வேத மந்திரம் சொல்லுவதோடு நில்லாமல், இறந்துபட்ட ஆட்டின் இறைச்சியைப் புசிக்கக் கூடாதென்றும், இன்னும் பலவித கோட்பாடுகளும் கூறியுள்ளார். அன்றியும், நபிநாயகம்

சீவிய கால பரியந்தம், இவருக்குத் தாவர உணவு கிட்டாத காலே ஏழுதரம் தான் புலால் புசித்ததாக இவரது சரித்திரம் கூறுகின்றது. நிற்க,

இவர், மக்கமா நகருக்கு யாத்திரைக்குச் செல்லும் யாத்திரீகர்கள் வெண்மையான தூய்ய ஆடை அணிய வேண்டுமென்றும், அவர்கள் மக்காநகரம் ஒருவார தூரம் இருக்கையிலேயே உடுத்தியிருக்கும் ஆடையை மாற்றக் கூடாதென்றும், தலை முடி இறக்கக் கூடாதென்றும், எவ்வகைச் சிறிய சீவன்களுக்கும் தீங்கிழைக்கக் கூடாதென்றும், குளிக்கக்கூடாதென்றும் தாம் அருளிச்செய்த வேதத்தில் கூறியிருக்கிறார். இங்ஙனம் இவர் கூறியது எனெனின், அராபிதேசம் மிகுந்த வெப்பமுள்ள பூமியானதால் ஆங்குச்செல்லும் மக்களுடம்பு எந்நேரமும் வெயர்வை ஊறி வழிந்து உடைகளிற் படிந்து கிருமி, கீடம், பேன், முதலிய உயிர்கள் உடம்பில் உண்டாகு மாதலால், மக்கள் உடைகளைக் களையும்போதும், தலை முடியிறக்கும் போதும், உடம்பினைச் சுத்தி செய்யும் பொருட்டு நீராடும் போதும் அவ்வுயிர்கள் அழிந்துபடும் என்னும் கருணைபற்றியே இங்ஙனம் அருளிப்போந்தார் என்பது வெள்ளிடைமலை. ஆதலால் அருள் வடிவமாகிய நபிநாயகம் அவர்களது உள்ளக்கருத்தை யுள்ளபடி நோக்குங்கால் அவர், எவ்வுயிரும் தம்முயிர்போல் கருதும் கருணைவடிவினர் என்பது நன்கு புலனாகின்றது.

எனதருமைச் செங்குந்த பெரியோர்களே! தலைவர்களே! நமது சமூகம் தழைத்தோங்க வேண்டுமென்னுங் கருத்துப்பற்றியே நம் தலைச் சங்கமாகிய சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நன் முயற்சியாலும் நமது மித்திரனின் ஆசிரியர், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் (M. A. L. T.) அவர்களின் தளரா ஊக்கத்தாலும், நம்மனோர்கள் வதியும் குக்கிராமங்களிலும் சங்கங்கள் நிறுவப்பெற்றிருக்கின்றன. நம்மனோர்கள் சங்கங்களிலுள்ள ஒவ்வொரு தலைவர்களும், அங்கத்தினர்களும், நம்மனோர்களை எந்தெந்த வழியில் திருத்த வேண்டுமோ அந்தந்த வழிகளில் திருத்தி வருகின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். ஆதலால் நமது சங்கத்தலைவர்கள் ஒவ்வொருவரும் "புலால் மறுப்பு" என்னும் விஷயம் பற்றித் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களென நம்புகிறேன். பெரும் பெரும் விஷயங்களில் தலையிட்டு வெற்றி பெற்ற நம் தலைவர்கள் இவ் அற்ப விஷயத்தில் பின்னடைய மாட்டார்கள் என்பது எனது துணிபு. செங்குந்தப் படையோன் திருவடியே சரணம். சுபம். சுபம். சுபம்.

---


# மகம்மேரு தைலம்.



கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கெல்லாம் இந்தத்தைலமானது மிகவும் கைகண்டது. சிரசைப்பற்றிய வாதநீர்சாலே நீர் மேகநீர் பித்த சுரத்தைக் கண்டித்துநேத்திரத்தில் பித்தநீராவது, மேகநீராவது, கபாலத்தைப்பற்றியிருக்குமாகில்தலைமுழுதும்நமைச்சல், ஊரல், எரிச்சல், தலைமயிர் உதிரல், தலையில் சுண்டுகள், தலையில் ரணங்கள் இப்பேர்க்கொத்த கபால ரோகங்களை கைக்கு மெய்யாய் கண்டிப்பதினால் மகம்மேரு தைலமென்று பேர் வைக்கப்பட்டது. மேலும் மேக வெட்டையினாலாவது பித்தச் சூட்டினாலாவது உதிரம் கெட்டுப்போய் திரேகமுழுதும் ஊரல், நமைச்சல், சொரி, சிரங்கு, அழுக்குத்தேமல், தேகவரட்சி, தேகவெளுப்பு கண்களில் முகத்தில் இரத்தமில்லாமல் வெளுத்துப்போதல் இப்பேர்க்கொத்த வரட்சிகளெல்லாம் தணித்து நல்ல இரத்த ஓட்டமுண்டாக்கும்.

இந்த தைலத்தை நாலுநாளைக்கொரு முறை அதிகாலையில் தலைமுழுகவேண்டியது. அன்றையதினம் பகல் நித்திரையும் தயிர் மோர் குளுமையான பதார்த்தம் இதுகள் மட்டும் ஆகாது. மற்றபடி வேறே யாதொரு பத்தியமும் கிடையாது.

ஆழாக்கு தைலம் புட்டி ரூ. 1 8 0

# விஷ ஹாரி,

தேள், பாம்பு, இதர விஷ ஜந்துக்களின்
கடியின் விஷ வேதனையை
உடனே நீக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களின் உயிர்களைப் பல கிராமாந்திரங்களிலும் வயல்களிலும் காப்பாற்றிப் பிரசித்தியடைந்து இருக்கிறது. ஒரு புட்டி உம்மிடமிருந்தால் சமயத்தில் ஒருயிரைக் காப்பாற்றலாமென்று உண்மையாய் நம்புங்கள்.

விலை புட்டி 1-க்கு ரூ. 1 0 0
புட்டி 3-க்கு ரூ. 2 8 0

---

ஆனந்தா வைத்திய சாலை,
தபாற் பெட்டி நெ. 288,
சென்னை.




## மலையாளத்துச் செங்குந்தர்கள்

திரு. சோக்கலிங்க முதலியார் கோல்லங்கோடு.

தென் மலையாளத்தில் முப்பது முப்பத்திரண்டு கிராமங்களில் செங்குந்தர்கள் இருந்து வருகிறார்கள். இவர்களுள் பெரும்பாலோர் ஏழைகள். கல்வியறிவுள்ளவர்கள் வெகு சிலரே. பூஸ்திதியுள்ள சிலரும், சிறு வியாபாரஞ் செய்யும் சிலரும் தவிர மற்றவர்கள் நெசவினாலேயே ஜீவனம் செய்து வருகிறார்கள். நெசவுத்தொழில் தற்போது இங்கு மிகவும் கேவலமான ஸ்திதியிலிருக்கிறது. மேல் நாட்டில் யந்திரங்களால் நெய்யப்படும் துணிகளைப் போல் குறைந்த விலைக்கு விற்கமுடியாத கைநெசவுத் துணிகளைக் கேட்பாரில்லை. அநேக குடும்பங்கள் கடன் அதிகரித்து நம் தொழிலை விட்டு ஆங்காங்கு ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகச் சென்று வயல்களிலும் பிறவிடங்களிலும் கூலிக்கு வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஏழ்மையே அவர்கள் கல்லாமைக்குக் காரணமென்று கூறலாம். சில சமயங்களில் கல்லாமையே ஏழ்மைக்குக்காரணமென்றும் சொல்லலாம்.

மலையாளத்தில் பொதுக் கோயில்கள் மிகச் சிலவே இருக்கின்றன. தனிக்குடும்பங்களுக்குரிய கோயில்கள் பல உள. இவ்விருதிறப்பட்ட கோயில்களுள் நம்மவர்கள் வெளிப்பிராகாரம் வரையில்தான் செல்லலாம். கொச்சி சமஸ்தானத்திலுள்ள பொதுக்குளங்களில் நம்மவர்களை அணுகவிடுவதில்லை. கடவுள் பெயராலும் ஜாதிக்கொடுமையாலும் இத்தகைய அநீதிகள் இருபதாம் நூற்றாண்டிலும் நிகழ்ந்து வருகிறதென்றால் மலையாளத்தில் நம்மவர்களுக்குள்ள நன் மதிப்பைக்குறித்து விரித்துரைக்கவும் வேண்டுமோ? மலையாளத்தில் ஒன்றிலிருந்து பத்துவரை எண்ணத்தெரியாத செங்குந்தர்கள் அநேகர் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் கல்வியைக் குறித்துச் சொல்வானேன்? இவ்வளவும் போதாது, சென்ற சில வருஷங்களாக செங்குந்தர்கள் மதுபானம் செய்யவும் கற்றுக் கொண்டார்கள். இதனால் அநேகர் மதிமயங்கித் துர்க் காரியங்களைச் செய்ய நேருகிறது. தாங்கள் கெட்டது மல்லாமல் தங்கள் பிள்ளைகளையும் இதில் பழக்கிவைக்கிறார்கள். சிறு குழந்தைகளுக்குக் கலியாணம் செய்கிற துர்ப்பழக்கம் இங்கு நிரம்பவுண்டு. அதனால் விதவைகளின் தொகை மிகுந்து கொண்டே வருகிறது. கல்யாணம் ஆகிற வரையில் தாடி வளர்க்க வேண்டுமென்ற பழைய அநாகரீகவழக்கம் மலையாளச் செங்குந்தர்களுக்குள் இன்றும் உண்டென்பதை நமது மித்திரன் வாசகர்கள் அறிவார்கள். இது சம்பந்தமாக வாலிபர்களுக்கும் வயோதிகர்களுக்கும் நடந்து வரும் சண்டையைப்பற்றிச் சில மாதங்களுக்குமுன் திரு. ராமன் முதலியார் அவர்கள், B. A., B. L., மித்திரன் மூலம் தெரிவித்துள்ளார்கள். தாடிக்கும் மீசைக்கும் மூச்சைப்பிடித்துச் சண்டையிடும் இவர்களைப் பிற இனத்தவர் எவ்வாறு நன்கு மதித்தல் கூடும்? இவர்களுக்குச் சிறிது சிறிதாக அறிவூட்ட வேண்டியதுதான் நாம் முதலாவதாகச் செய்யவேண்டிய கடமை. இங்குத் தமிழில் பிரசாரம் செய்யக்கூடியவர்கள் அநேகர் இல்லாததால் நமது தலைச்சங்கப் பிரசாரகர்களைக் கூடிய சீக்கிரம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

### உட்பிரிவுகள்

செங்குந்தர் என்ற பெயரானது தென்னிந்தியாவிலுள்ள எல்லா உண்மைக் கைக்கோளார்களுக்கும் பொதுப் பெயராக இருந்து வருகிறபடியால், ஆதிகாலத்தில் பிரிவின்றி நாமெல்லோரும் ஒன்றாகவே இருந்தோம் என்று விளங்குகிறது. ஆயினும் எக்காலத்தில், ஏன், தற்போதுள்ள இத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டோம் என்பது எனக்கு விளங்கவில்லை.

மலையாளத்தில் எனக்குத் தெரிந்த வரையில் செங்குந்தர்கள் அதாவது உண்மைச் செங்குந்தர்கள் கீழ்க்கண்ட எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவை: 1. வெள்ளோட்டம்மன். 2. இராக்காபாளையம். 3. பச்சாபாளையம். 4. பங்குனியான்பாளையம். 5. அறுபதாம்குடி. 6. மலையாளக் கைக்கோளர் 7. பாலைப்புரம். 8. பெறங்குளம் என்பனவாம். (எல்லாம் இடத்தைப் பொறுத்தவை). மற்ற ஜில்லாக்களில் எத்தனை உட்பிரிவுகள் இருக்கின்றனவோ அறியேன்.

இப்பிரிவினர்க்குள் இதுவரையில் எவ்விதத்திலும் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரோடு பெண் கொடுப்பதும் கொள்வதும் மாத்திரம் கிடையாது. பந்தி போஜனம் முதலிய மற்றெல்லாம் உண்டு

இவ்வாறு நாம் எத்தனை காலம் பிளவுபட்டு நிற்பது. இச் சிறுகாரியத்தைச் செய்ய முடியாத நாம் பெரிய காரியங்களை எவ்வாறு செய்ய முடியும்?

## அறுபதாங் குடிச் செங்குந்தர்.

இப் பிரிவினரைக் குறித்து ஒரு பழைய கதை உண்டு. அது கீழ்வருமாறு:-ஒரு வேற்றரசன் படையெடுத்து வந்த காலத்தில் அநேக செங்குந்த குடும்பங்கள் தங்கள் சொந்த நாட்டைவிட்டு வெளியேற நேரிட்டபடியால் அவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்த ஒரு செல்வந்தரான கவுண்டரால் ஆதரிக்கப்பட்டார். இவர்களுள் 60 குடும்பத்தவரை அக் கவுண்டர் தன் தாயாதியிடம் அனுப்பினராம். ஆகவே அவ்வறுபது குடும்பத்தவரும் வேறொரு கிராமத்தில் தங்க நேர்ந்தது. அதனால் அவர்கள் சந்ததியாருக்கு 'அறுபதாம் குடியார்' என்னும் பெயருண்டாயிற்று என்பதேயாம். இக்கதை உண்மையானதோ அல்லது கற்பிக்கப்பட்டதோ என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை.

## மலையாளக் கைக்கோளர்கள்.

மலையாளம் கைக்கோளர் என்போர் பெரும்பாலும் கொச்சி ராஜ்ஜியத்தைச் சார்ந்த சித்தூரிலும், (British Malabar) என்னும் ஊரிலும் இருக்கிறார்கள். அவர்கள் மற்றைய செங்குந்தர்களைக் காட்டிலும் வித்தியாசமான பழக்கவழக்கங்களையுடையவர்கள். மலையாளத்திற்கே சிறப்பாகவுள்ள ஆசாரங்களை அநுஷ்டித்து வருகிறபடியால் அவர்கள் நெடுங்காலத்திற்கு முன்னரே கேரள தேசத்தில் குடியேறி இருக்கவேண்டும். அவர்கள் பேசும் பாஷையும் தமிழும் மலையாளமும் கலந்ததாகவே இருக்கும். தாங்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற ஒரு குருட்டு நம்பிக்கை அவர்களிடத் துண்டு. நாங்களும் அவர்களைவிட உயர்ந்தவர்களென்று தான் சொல்லிக் கொள்ளுகிறோம். இப்படிப்பட்ட மூடக் கொள்கைகளுக்கு இடங்கொடுத்துக் கொண்டே வருவோமானால் என்றுதான் நாம் ஈடேறுவது.

## சீர்திருத்த முயற்சி.

ஈரோட்டில் நமது முதலாவது வாலிப மகாநாட்டைத் திறந்துவைத்த தலைவராகிய திரு. K. முத்துக்குமார முதலியார் அவர்கள் சில வருஷங்களுக்கு முன் சில நண்பர்களோடு கொல்லங்கோட்டில் செங்குந்தர் மகாநாடு ஒன்று கூட்டவேண்டுமென்ற எண்ணத்தோடு மலையாள முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு மகாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். டிசம்பர் மாதம் கொல்லங்கோட்டில் பழனி வித்வான் குழந்தைவேல் முதலியார் அவர்கள் தலைமையில் மகாநாடு கூடிற்று. மகாநாட்டு நடவடிக்கைகள் இரண்டு நாட்களில் முடிவெய்தின. அங்கு நிறைவேறிய தீர்மானங்களுள் முக்கியமானது மதுவிலக்கைக் குறித்ததே யாகும். இத் தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியது. ஆயினும், மதுவிலக்கை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் முறைகளைப்பற்றித் தான் அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. வாலிபர்கள் மாத்திரம் அச்சமயம் அத் தீயவழக்கத்தை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று உறுதி கொண்டிருந்தார்கள். கடைசியாக மதுபானம் செய்வோரைக் கண்டு பிடித்து ஊர்ப் பொதுக் கூட்டத்தில் அவர்களுக்கு அபராதம் விதிக்கும் பொருட்டுப் பல கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன.

சில காலம் அனைவரும் இவ்வேற்பாட்டிக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள். கமிட்டிகள் பல தடவைகளில்கூடிக் குற்றவாளிகளைத்தண்டித்தன. ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு மதுபானத்திலேயே தம் மதியைச்செலுத்தி வாழ்வோர் ஒன்று கூடிக் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். நியமித்த கமிட்டிகள் ஒவ்வொன்றாய்க் கலைய ஆரம்பித்தன. ஒத்தபாலத்தை அடுத்த ஒரு கிராமத்தில் அடுத்த வருஷம் கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்ட இரண்டாவது மகாநாடும் கூடவில்லை. மதுபானத்தைப் பையப்பைய ஒழிக்க முயன்றிருப்போமாயின் எங்களிஷ்டமும் நிறைவேறியிருக்கும். நாங்கள் செய்து வந்த கிளர்ச்சியும் நீடித்திருந்திருக்கும். நாங்கள் கொண்ட அதிதீவிர ஊக்கமே அதன் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது எனக் கருதுகிறேன்.

மறுபடியும் சில வருஷங்களுக்குப் பிறகு வாலிபர் முன்னேற்றக் கழகம் என்னும் ஒரு சங்கத்தை நிறுவினோம். பிறவினத்தவர்களும் அதில் அங்கத்தினரானார்கள். திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களே அச்சங்கத்திற்குத் தலைவராக இருந்தார்கள். அடிக்கடி கூட்டங்கள் கூட்டப்பட்டபோதிலும் அங்கத்தவர்களின் ஊக்கம் நாளுக்கு நாள் அதிகரிப்பதை விட்டுக் குறைந்து கொண்டே வந்தது. அச்சமயத்தில் நமது செங்குந்தமித்திரனில்லை. பொது நன்மைக்கு உழைக்க முன் வருவோரை வேலையற்றவர்கள் என்று பழிக்க ஆரம்பித்தார்கள். ஆகவே மலையாளத்துச் செங்குந்தர்களுக்கு இன்னும் நல்ல காலம் பிறக்கவில்லை என வருந்தி நாங்கள் முயற்சியைக் கைவிட்டோம்.

ஆகையால் தலைச்சங்கத்தார் தயவு செய்து மலையாளத்திற்கு வந்து இங்குள்ளோருக்கு ஊக்கத்தையும் விழிப்பையும் உண்டாக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

---

குறிப்பு:—இவ்வியாசம் திரு. சொக்கலிங்க முதலியார் சில மாதங்களுக்கு முன் ஆங்கிலத்தில் வரைந்தனுப்பிய ஒரு கட்டுரையின் சுருக்கமாகும்.

# செங்குந்த யாத்திரைவாசி

## நறுமண மாப்பிள்ளையின் சந்திப்பு

உட்கார்ந்தவர் என்னை உற்றுப்பார்த்து, உடனே எழுந்து நமஸ்கரித்து, 'சுவாமிகள் இங்கு தான் வந்ததோ! சுவாமிகளோடு நானும் புறப்பட எண்ணியிருந்தேன். சாப்பிடக்கொஞ்சம் நேரமாய் விட்டது. அவசரமாக வந்து வண்டி புறப்படும் தருவாயில் ஏறினேன். சுவாமி இருந்த வண்டி எனக்குத் தெரியாமல் போயிற்று. நான் நறுமண மாப்பிள்ளைக் கூட்டத்தில் நேற்றுச் சுவாமிக்கு ஒரு சமாசாரம் சொல்லலாமென்றிருந்தேன். ஆனால் படித்தவர்களும் பெரியவர்களும் நிறைந்த மகா சபையில் எழுந்து சொல்ல அச்சப்பட்டேன். படித்தவர்கள் கூடிய சபையில் படியாதவன் பேசாம லிருப்பதே நல்லதென்று அடியார்கள் அறுபத்து மூவரில் ஒருவராகிய திருவள்ளூர் நாயனர் கொறளில் சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பெரியவர்களிடத்தில் எனக்குப் பக்தியுண்டு. நான் தற்குறியல்ல. எனக்குக் கையெழுத்து நன்றாய்ப் போடத் தெரியும். அதற்கு மேல் படிப்பில்லை. கூட்டத்தில் சொல்ல வாயெடுத்தேன். திருவள்ளூர் நாயனர் கொறள் கவனத்திற்கு வந்தது. சும்மாயிருந்து விட்டேன். அதைத் தனியாகச் சுவாமிக்குச் சொல்லவே ரயிலில் கூட வர நினைத்தேன். என்னமோ நல்ல காலம் கூட்டி வைத்தது' எனக்கூறினர்.

### ஆதியூரில் அதிசய சம்பவம்.

யான் கையமர்த்தி என் பக்கலில் உட்காரச் சொன்னேன். ஆனல் அவர் அவ்வாறு செய்யாமல் கீழே உட்கார்ந்து கொண்டு 'மன்னிக்க வேண்டும். இங்கேயே உட்கார்ந்து கொள்ளுகிறேன்' என்ருர். யான் 'சரி இருக்கட்டும், என்ன சொல்ல இருந்தீர்?' என்று வினவினேன். நறுமணமாப்பிள்ளை 'சுவாமி நான் அந்தஊருமல்ல, இந்த ஊருமல்ல; ஆதியூர்க்காரன்' (ஊரையும் பெயரையும் உள்ளவாறு கூருது மறைத்தே கூறுவேன் என்பதை அன்பர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.) 'எங்களூர்ச் சங்கதியைத் தான் சொல்ல நினைத்தேன். அது ஒரு வேடிக்கையான சங்கதி. பாருங்கள், இந்த செங்குந்தர்கள் ஆதியில் இருந்த பெருமை என்ன சுவாமிக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. சுவாமி, எங்களூர் உலகத்திலுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் மிகப் பழைமையானது என்று தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள். அந்த ஊர் பெரிய பெரிய சக்கரவர்த்திகள் ஆண்டது. செங்குந்தர்களுக்கு முக்கியமான ஊர்களில் ஒன்று. என் செங்குந்தர்களுக்கும் இதுவே ஆதியூர் என்று சொல்லலாம். அப்பேர்பட்ட ஊரில் நடந்த அநியாயத்தைக் கேளுங்கள். சுவாமிக்கு இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். ஈரோட்டில் நடந்த மகா நாட்டிற்கு நாங்களெல்லாம் வந்திருந்தோம். என்னகூட்டம், சுவாமி! இவ்வளவு கூட்டம் ஈரோட்டிற்கு வருமென்று நாங்கள் நினைக்கவேயில்லை. சுவாமி கூட வந்ததோ என்னமோ. மிக்க சந்தோஷித்தோம். நாங்களும் எங்களூரில் கொஞ்சம் தொகை கொடுத்தோம். தீர்மானங்களையெல்லாம் கேட்டுத் திருப்தியடைந்தோம். திரும்பிப்போனதும் எங்கள் ஆதியூரில் ஒரு பெரிய கூட்டம் கூட்டி மகாநாட்டில் செய்த தீர்மானப்படிச் செய்யவேண்டுமென்று அம்மன் கோயிலுக்குப் பூசை செய்துவரும் ஒரு செங்குந்தரையும் இன்னொருவரையும் ஊர்ப் புரோகிதர்களாக ஏற்படுத்தவேண்டுமென்று முடிவுசெய்து அவர்களுக்குப் பூணூலும் போட்டுவிட்டு அன்று முதல் இவ்வூர்ச் செங்குந்தர்கள் அனைவரும் இவர்களைக் கொண்டே கலியாணம், சீமந்தம், திதிமுதலிய எல்லாச் சடங்குகளையும் நடத்தவேண்டுமென்று ஏகோபித்துக் கட்டுப்பாடு செய்தோம். இந்தக் கட்டுப்பாட்டை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். எல்லோருக்கும் திருப்தியாயிருந்தது.ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. மகா நாட்டின் கைகண்ட பலனைப் பாருங்கள்! இந்த வீரத் தன்மையான கட்டுப்பாட்டைச் சுற்றுப்பட்டு ஊர்களுக்கெல்லாம் பறையடித்தார்கள். பேபர்களுக்கும் எழுதிவிட்டார்கள்.

'சுவாமி அவ்வளவு பெருமைக்கு வந்ததா இந்த கூட்டம்! நாலு நாளைக்குள் என்ன நடந்தது? அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்! கொஞ்சமாவது பொறுமையுண்டா? யோசனையுண்டா? பெருந்தன்மையுண்டா? அயல் ஊராரும் சாதியாரும் என்ன மதிப்பார்கள் என்று நினைத்தார்களா? வெட்கக் கேடுதான் வெளியே சொன்னல்! தாங்களே செய்துகொண்ட ஒரு ஏற்பாட்டை மீறி நடப்பவர்கள் எந்த கட்டுப்பாட்டிற்கு அடங்குவார்கள்? தங்களைத் தாங்களே மதிக்காத, கௌரவிக்காத இவர்களை யார்தான் மதிப்பார்கள், கௌரவிப்பார்கள்? இவர்களைவிட ஆரம்ப சூரர்கள் வேறு யாராவது உண்டா? இந்த கூட்டத்திற்கு ஏதோ பெரியோர்கள் சாபமிருக்கிறுப்போலிருக்கிறது. அந்த ஊர்க் கூட்டத்திற்கு வந்து எல்லா ஏற்பாடுகளையும் கூட இருந்து செய்து வைத்த ஒரு பெரிய மனிதர் சமீபத்திலேயே தங்கள் வீட்டில் வந்த ஒரு விசேஷத்திற்கு ஊர் கட்டுப்பாட்டிற்கு விரோதமாகப் பழைய புரோகிதரை வரவழைத்தார். ஊரில் யாரும் அதற்குப் போக

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

வில்லை. உடனே ஊர்க்கூட்டம் கூட்டி அவருக்கு அபராதம் விதித்தோம். குற்றத்தை ஒத்துக்கொண்டு அபராதத்தைக் கட்டிவிட்டார். அடுத்தபடியே வந்து இன்னொரு விசேஷத்திற்கும் பழையபடியே கட்டுப்பாட்டிற்கு விரோதமாகச் செய்தார். அவரைப் பார்த்து இன்னொருவர் செய்தார். இன்னொருவர் செய்தார். இன்னொருவர் செய்தார். கட்டுப் பாட்டைக் காற்றடித்துப் போய்விட்டது. சுவாமி, ஒருவர்தான் தவறிப்போனார் என்றால் மற்றவர்களும் ஒருவர் பின்னால் ஒருவராக அப்படியேவா செய்யவேண்டும். இவர்களென்ன ஆட்டுமந்தையா? இவர்கள் எப்போதும் இப்படித்தானா? என்னமோ சூரனை அழித்தார்களாம். வல்லானை வென்றார்களாம். உலகத்தைச் செயித்தார்களாம். என்னென்னமோ பெருமையெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் புளியங்காயாம். யாரும் புளிப்புக் குத்தவேண்டாமாம். எனக் கென்னமோ வெட்கமாயிருக்கிறது, சுவாமி. இந்த கூட்டத்தில் சூளைக்கல்லும் சாமிதான்.

‘சுவாமி அத்தோடு நின்றால் பரவாயில்லையே! இவர்களுக்கு மதிப்பும் கௌரவமும் எப்படியுண்டாகும்? ஊர்க்கூடி நியமித்த புரோகிதர்களைப் பெரியோரும் சிறியோருமாகக் கேலிசெய்ய ஆரம்பித்தார்கள். (ஆரம்ப சூரர்களாய்) மகா நாட்டுச் சுடுகையில் செய்த ஊர்க்கட்டளையை மறுக்க அஞ்சிப் புரோகிதராக இருக்கச் சம்மதப்பட்ட அவர்களை இப்படிச் செய்தால் அவர்கள் மனம் எப்படியிருக்கும்? மனம் நொந்து ஊரார் போட்ட பூணூலை அறுத்தெறிந்து விட்டார்கள். வேறென்ன செய்வார்கள் பாவம்? பார்த்தீர்களா இவர்கள் அறிவை! இப்பேர்க் கொற்ற அதிசயத்தை எங்கேயாவது கேட்டிருக்கிறார்களா? இதனால் யாருக்கு அவமானம்? இது தான் நடந்த சங்கதி, சுவாமி’ என்று சொல்லி முடித்தார்.

இதைக் கேட்ட என்மனம் கொதித்தது. இத்தகைய தாழ்ந்த நிலைமைக்கும் வந்து விட்டார்களா! என்று நினைத்து வருந்தி ‘ஐயா, நியமித்த புரோகிதர்களுக்கு இது ஒரு போதும் அவமானமாகாது. இவ்வேற்பாட்டினைச் செய்த ஊராரே தங்கள் சொல்லுக்கும் கட்டுப்பாட்டிற்கும் யாதொரு மதிப்பும் தரவில்லை. இதனால் தாங்களே செய்து கொண்ட கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பதாகிய மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய ஒரு பெருங்குணம் தங்களிடத்தில் இல்லை யென்பதை நன்கு விளக்கிக் காட்டி விட்டார்கள். தங்களைத் தாங்களே அவமானம் செய்து கொண்டார்களே யொழிய வேறில்லை. இந்த எற்பாட்டைச் செய்யாமலேயே இருந்திருக்க வேண்டும்; அல்லது சம்மதமில்லாதவர்கள் கூட்டத்திலேயே ஆக்ஷேபித்திருக்க வேண்டும். இஷ்டமானவர்கள் போக மற்றவர்கள் பழையபடியே நடந்து வரலாம். ஒற்றுமைக்குணம் இவர்களிடத்தில் அறவேயில்லையெனத் தெரிகிறது. ஒற்றுமை இல்லையானால் மனித வாழ்க்கையை ஒருபோதும் சிறப்பொடு நடத்த இயலாது. ஒற்றுமையற்ற வாழ்க்கை மனித வாழ்க்கையாகாது. செங்குந்தர்கள் பிற்போக்கான வாழ்க்கைக்கு முக்கிய காரணம் இதுவேயாகும்; இத்தகையோர் பிறர் கட்டளைக்குப் பயந்து பணிந்து நடப்பார்கள். நாயனார் ‘அச்சமே கீழ்மகளது ஆசாரம் என்றார்’ எனப்பலவாறு கூறி நறுமணமாப்பிள்ளையின் மனக்கொதிப்பை ஒருவாறு தணித்தேன்.

## நறுமண மாப்பிள்ளையின் சம்பாஷணை.

மனதிலிருந்தவற்றை யெல்லாம் வெளியே கொட்டி ஆறுதலடைந்த நறுமணமாப்பிள்ளையை நோக்கி யான் ‘ஐயா, மாப்பிள்ளையாரே! உமது தோளிலுள்ள மூட்டையாதோ?’ வென வினவினேன்.

நறுமண மாப்பிள்ளை:-அதுவா. கட்டுச் சாதம்,

சுவாமி· யான்:-மாமாவீட்டிற்குப் போகும் மாப்பிள்ளைக்குக் கட்டுச் சாதமேன்? ஊர் அருகாமையிலிருக்கிறதே?

நறு - மா:- எங்கள் பழக்கம் சுவாமிக்குத் தெரிந்திராது. விபரமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள். நாங்கள எங்கள் சம்பந்தி வீடுகளில் பெண்கள் கொடுப்போம், வாங்குவோம். ஆனால் அவர்கள் வீட்டில் சாப்பிடமாட்டோம். எங்கள் வீட்டிற்கு வந்த பெண் பிறகு அவர்கள் வீட்டில் சாப்பிடாது. எங்கள் வீட்டில் பிறந்த பெண் கல்யாணம் ஆனபிறகு எங்கள் சமையல் அறைக்குள் வரவாவது, எங்கள் வீட்டாரோடு சாப்பிடவாவது கூடாது. நாங்கள் அவர்கள் வீட்டிற்குப் போனால் அரிசி, பருப்பு கொடுப்பார்கள். சமைத்துக் கொள்வோம் (என்று சிரித்துக்கொண்டு) ஒரு வேளையாவது அடுப்பூதி வேலை மீதியாகுமென்றுதான் கொஞ்சம் கட்டுச் சாதம் கொண்டுவந்தேன். இதைத் தயார் செய்ததில்தான் நேற்றுச் சுவாமியோடு வரமுடியாமற்போயிற்று.

யான்:- அவர்கள் உங்கள் வீட்டிற்கு வந்தாலோ.

நறு-மா:-அவர்கள் எங்கள் வீட்டில் சாப்பிடுவார்கள்.

யான்:- (ஆச்சரியமடைந்து) அப்படியானால் உங்கள் சாதிக்கும் அவர்கள் சாதிக்கும் எதாவது ஏற்றத் தாழ்வுண்டா? உண்டென்றால், பெண் கொடுக்கல் வாங்கல் எவ்வாறு செய்தல்கூடும்? இல்லையேல், சாப்பிடுவதில் இவ்வித வித்தியாசமேன்? அவர்களால் பெற்று வளர்க்கப்பட்டு அவர்களோடு உண்டுவந்த பெண் உம்மை மணந்து கொண்டபிறகு சமைப்பது எப்படி ஆகும். இந்த நியாயம் என் புத்திக்கு எட்டவில்லை.

நறு-மா:-அது அப்படியல்ல, சுவாமி. சாதியில் ஒரு வித்தியாசமில்லை. எல்லாம் ஒரே வகைதான்

அவர்களும் சைவந்தான். நாங்களும் சைவர்தான். என்றாலும், இது பெரியவர்களுடைய பழைய வழக்கம். சுவாமிக்குத் தெரியாததல்ல. முன்னிருந்த பெரியவர்களைவிட நமக்கென்ன அதிகம் தெரிந்து விட்டதா? எங்கள் சாதம் கொதிப்பதை அவர்கள் கண்ணால் பார்த்தாலும் கூட அதை நாங்கள் சாப்பிடமாட்டோம். பேரியோர்களுக்குத் தெரியாததா நமக்குத் தெரியப் போகிறது? இந்த வித்தியாசங்களை யெல்லாம் உண்டு பண்ணின கடவுள் இல்லாமலா பொழுது விடிகிறது? பொழுது போகிறது. கடவுள் பொய் என்றால் பஞ்சாங்கத்தைப் பார்; பஞ்சாங்கம்பொய் என்றால் கிராணத்தைப் பார் என்று ஔவையார் தெரியாமலா சொல்லி வைத்தாள்? என்னமோ, முன்னோர் போனவழியே பின்னோரும் போகட்டும். இப்படியே நம் காலத்தைக் கழித்து விட்டால் பின்னால் வருகிறவர்கள் எப்படியாவது போகட்டும். நாம் கண்ணை மூடிக்கொண்டால் எப்படிப் போனால் நமக்கென்ன தெரியப்போகிறது. இருக்கிற வரையில் நெறியோடு இருந்து விடுவோம். வறுத்த பட்டாணி கூட நாங்கள் கடையில் வாங்கித் தின்ன மாட்டோம் (எனப் பேச்சை வளர்த்திக் கொண்டே போனார்.)

யான்:- இருக்கட்டும்; உமக்குப் படிப்பெவ்வளவு உண்டு? உமது மதக்கொள்கை யாது? உமது மாமாவும் அவர் குடும்பத்தாரும் படித்தவர்களா? அவர்கள் மதக்கொள்கை யாது? அவர்கள் அந்தஸ்தென்ன?

நறு-மா:-சுவாமி! என் படிப்பைப் பற்றி முன்னாடியே சொல்லி விட்டேனே. தற்குறியல்ல, கையெழுத்து நன்றாய்ப் போடுவேன். அவ்வளவுதான் என் படிப்பு. எங்களப்பாவுக்கு அதுவும் தெரியாது. அவர் தற்குறிதான். அவருக்கு நான் எவ்வளவோ மேலல்லவா! இன்னும் ஏதோ கேட்டீர்களே. இரண்டு பேரும் விபூதி போடுகிறவர்கள் தான். அதெல்லாம் ஒரு வித்தியாசமும் கிடையாது, சுவாமி. மாமா பெரிய படிப்பாளி. புராணங்களுக்கும் பெரிய பெரிய புத்தகங்களுக்கும் நல்ல உரைகள் பண்ணுவார். அவரிடத்தில் படித்தவர்கள் பத்துப்பதினைந்து பேர் எப்போதும் இருந்து கொண்டே யிருப்பார்கள். பூசைக்கு உட்கார்ந்தால் எழுந்திருக்க இரண்டு மணி நேரமாகும். இங்கிலீஷ்கூட நன்றாய்த் தெரியும். இந்தப்பக்கத்தில் அவரை அறியாதவர்களில்லை. யாருக்கு எந்த சந்தேகம் வந்தாலும் மாமாவிடந்தான் வந்து தீரவேண்டும். பிள்ளைகளோ சொல்ல வேண்டியதில்லை. துப்பாக்கியில் பீரங்கி பிறந்தது போலத்தான். மேலும் பெரிய பணக்காரர். எங்களைப் போலவே அவர்களும் பரம்பரைச் சைவர்கள்.

(தொடரும்)

## நிருபங்கள்

எங்களூரில் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் மாரியம்மன் கோயிலில் பொங்கல் பலியுடன் செய்வதை நிறுத்திப்பால் பொங்கல் போட்டு வந்தோம். இவ்வாறு 3 வருஷங்கள் நடந்தது. ஊரில் ஒரு குறையும் உண்டாகவில்லை. வருஷாவருஷம் 5 ஆடும் கோழியும் பலியிட்டு வந்ததை நிறுத்த சங்கத்தார் செய்த ஜீவகாருண்ய முயற்சிக்கு உதவி புரிந்த ஊர்ப்பிரதானிகளுக்கு நன்றி பாராட்டினோம்.

இந்த ஏற்பாட்டை எப்படியாவது உடைத்துப் பாழாக்க வேண்டுமென்று இரத்தவெறிகொண்ட சிலர் கங்கணங் கட்டிக்கொண்டு பலரிடத்திலும் சொல்லி ஊரில் சச்சரவுகளை உண்டாக்க முயன்றனர். அப்போது சங்கத்தாராகிய நாங்கள், பலியிடல் தோஷமென்றும், மூன்று வருஷங்களாகச் செய்தபடியே பால் பொங்கல் செய்வதே நல்லதென்று தெரிவித்தும் பயன்படாமற் போயிற்று.

இதனால் ஊரில் சண்டை சச்சரவுகள் உண்டாகுமென்ற பயத்தால் ஷை விஷயத்தை அதனோடு விட்டுவிட்டோம். ஊர்ப்பிரதானிகளிடம் சொல்லியும் பயனில்லை. ஊர் ஒற்றுமையைக் கெடுக்கலாகாதென்று எண்ணி பிரதானிகளிடம் ஒப்பித்து விட்டு பூசை மாத்திரம் கைக்கொண்டு வந்து விட்டோம். பிறகு 4 ஆடுகளையும், 40 கோழிகளையும் சித்திரவதை'செய்து விட்டார்கள்.

கடவுள் பெயரால் செய்யும் இக்கொலைக்கு அஞ்சி ஜீவகாருண்ய எண்ணத்தை இனியாவது எல்லாருடைய மனதிலும் தோற்றுவிக்குமாறு பராசத்தியாகிய அம்மனை சங்கத்தார் பிரார்த்திக்கின்றோம்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## சென்னை ஜில்லா.

### திருமயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்

இச்சங்க வாசகசாலையில் 17-5-30உ மாலை 6-மணிக்கு திரு. K. விநாயக முதலியார் அவர்கள் B. A., B. L., தலைமையின் கீழ்க்கூடிய கூட்டத்தில் திரு. J. தங்கவேல் அவர்கள் 'வாலிபரும் அவரது கடமையும்,' என்பது பற்றி ஆங்கிலத்தில் உபந்யசித்தார். திரு. M. P. தியாகராஜ முதலியார் அவர்கள் தழுவிப்பேசினர். வந்தனோப சாரத்துடன் இரவு 8-30-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

31-5-30உ மாலை 6½-மணிக்குச் சங்க வாசகசாலையில் திரு. M. P. தியாகராஜ முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திரு. M. வெங்கடாசலம் அவர்கள் 'செல்வம்' என்பது பற்றி சொற்பெருக்காற்றினர். திருவாளர்கள் M. V. சிங்காரவேலு முதலியார், மு. சுந்தர வடிவேலு முதலியார், A. இராமசாமி முதலியார் ஆகியவர்கள் தழுவிப்பேசினர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது கலைந்தது.

ம. க. பாலசுந்தரம்
ஏ. இராமசாமி
காரியதரிசிகள்.

---

## கோவை ஜில்லா.

### புஞ்சைப் புளியம்பட்டி செங்குந்தர் சங்கத் திறப்புவிழா.

6-6-1930உ 6½ மணிக்கு, கோவை ஜில்லாப் பிரசாரகர் திரு. V. K. M. அப்பா அவர்களால் ஷை சங்கம் திறந்து வைக்கப்பெற்ற பின்னர் பெரியதனம் திரு. K. கருப்பண்ண முதலியார் அவர்கள் அவைத் தலைமையின்கீழ், புளியம்பட்டி, கந்தாயிபாளையம், இறங்காட்டுப் பாளையம், தாசரா பாளையம் முதலிய கிராமங்களினின்றும் வந்திருந்த செங்குந்தப் பிரமுகர்கள் சுமார் 300 பேர்களால் கூடப்பெற்று மிக இனிமையாக நிகழ்வுற்றது. அவ்வமயம் "மதுவிலக்கு", "நன்றிமறவேல்", "நமது முன்னேற்றம்" என்பனபற்றி முறையே திருவாளர்கள் R. கருணம்பதி முதலியார், தேவராயம் பாளையம் ஐயாவு முதலியார் V. K. M. அப்பா ஆகியவர்கள் மிக்க விளக்கமாக விரிவுரை நிகழ்த்திய பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறை வேற்றப் பெற்றன.

1. இறங்காட்டுப் பாளையம் செங்குந்தர்களையும் இச்சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. இச்சங்கத்திற்குப் "புஞ்சைப் புளியம் பட்டிச் செங்குந்தர் சங்கம்" எனப் பெயரிடல் வேண்டும்.

3. இச்சங்கத்தைச் சென்னைத் தென்னிந்திய செங்குந்தர் மகா ஜன சங்கத்தின் கிளைச் சங்கமாகச் சேர்ப்பதோடு கட்டணம் செலுத்தி வரவேண்டும்.

4. நமது சமூகத்திற்குப் பெரிதும் உழைத்து வரும் செங்குந்த மித்திரனை எல்லோரும் ஆதரிக்க வேண்டும்.

5. இச்சங்கத்தைச் சீருடன் நடத்திவர இன்றே அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

பிறகு எல்லோரும் ஏகமனதுடன் கீழ்க்கண்ட பெரியவர்களை ஷை சங்கத்தின் அதிகாரிகளாக தேர்ந்தெடுத்தார்கள்.

தலைவர் :—பெரியதனம் திரு. K. கருப்பண்ண முதலியார் அவர்கள.
உபதலைவர் :-நாட்டாண்மை, திரு. வை. நஞ்சப்ப முதலியார் அவர்கள்.
காரியதரிசி :—திரு. K. அண்ணாமலை முதலியார் அவர்கள்.
உபகாரியதரிசி :—திரு. P. நாச்சியப்ப முதலியார் அவர்கள்.
பொருட்காப்பாளர் :—திரு. K. மாரப்ப முதலியார் அவர்கள்.
அங்கத்தினர்கள் :—13 கனவான்கள்.

கடைசியாக வந்தனை கூறப்பெற்றுச் சபை இனிதே கலைந்தது.

P. அண்ணாமலை முதலியார்,
R. நாச்சியப்ப முதலியார்
காரியதரிசிகள்

### பொள்ளாச்சி வடசித்தூர் செங்குந்த சங்கம்

15-6-30-ல் திரு. கப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் மாலை 3-மணிக்குச் சங்கத் தலைவர் உபதலைவர் ஆசரில்லாததால். T மயிலானந்தம் பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. அச்சமயம் கோதவாடிக்கிராமத்திலிருந்து அனேக செங்குந்தர்கள் வந்திருந்தனர். கடவுள் வணக்கம். சந்தா வசூல் முடிந்து திருவாளர்கள் கோதவாடி காளியண்ணன் V. முத்தைய முதலியார், வடசித்தூர் ப. குமாரசாமி முதலியார் இவர்கள் 'சுகாதாரம்' 'ஒழுக்கம்' 'கல்வி' என்பது பற்றி உபந்யாசஞ் செய்

தனர். தலைவர் முடிவுரைக்குப் பின் கடவுள் வணக்கத்துடன்மாலை 5½-மணிக்குச் சபை இனிது கலைந்தது.

உபாத்தியாயர் நே. சி. சா. பழனியப்ப முதலியார்
காரியதரிசி.

---

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம் மதுரை.

23-6-1930உ இரவு 7-மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகராலயத்தில் திரு. கே. எஸ். முதலியாரவர்கள் தலைமையில் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

செங்குந்த தேவார கோஷ்டியாரால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றதும் 'திருமணநன்கொடை' என்னும் விஷயங்குறித்து திரு. V. வீரபத்திரன் அவர்களால் ஓர் உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது. பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

1. "நமது சங்கத்திற்கு உயர் திருவாளர்கள் எஸ். ஆர். எம். சுந்தர முதலியார் அவர்களும் ப. மு. வையாபுரி முதலியார் அவர்களும் சமீபத்தில் நடைபெற்ற தங்கள் குமாரர்களின் திருமணங்களை யொட்டி நன்கொடையாக முறையே ரூ. 25 கொடுத்ததை இக்கூட்டம் மனமார்ந்த நன்றி யறிதலுடன் ஏற்றுக்கொள்வதோடு ஷை மணமக்கள் யாவரும் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றது."

2. "திரு. ப. மு. வையாபுரி முதலியாரவர்கள் தனது குமாரரின் திருமணத்தை யொட்டி தலைச் சங்கத்தின் கல்வி நிதிக்கும் நன்கொடையாக ரூ. 25 அனுப்பியுதை இக்கூட்டம் பாராட்டுகிறது.'

பின் சங்கத்தின் 22-6-30உ முடியவுள்ள வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

"நமது சங்கத்திற்கு லாட்ரி சீட்டின் மூலம் நிதி சேர்த்தல்" என்பது பற்றி திரு. பி. வி. முத்துக் கருப்ப முதலியார் அவர்கள் பேசி முடிந்ததும் லாட்ரி சீட்டிற்கு சீட்டு ஒன்றுக்கு ரூ. இவ்வளவென்பதையும் மொத்தச் சீட்டுகளெவ்வளவென்பதையும் நிர்ணயிக்க 9 கனவான்கள் அடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

அப்பால் "வாசகசாலையின் சீர்திருத்தம்" என்பது குறித்து திரு. எஸ். மாணிக்கம் அவர்கள் பேசியதும் வாசக சாலைக்கு மற்றொரு விசாலமான இடத்தைத் தேர்ந்தெடுக்க 3 கனவான்கள் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது.

பிறகு "சங்கத்தின் அடுத்த வருடக் கொண்டாட்டம்" என்பது குறித்து திரு எம். அங்குசாமி ஆங்கிலத்தில் பேசியதை திரு. எஸ். மாணிக்கம் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினர்கள்.

வந்தனோப சாரத்துடன் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது கலையுற்றது.

V. வீரபத்திரன் காரியதரிசி.

### ஸ்ரீ காந்தலீலன் சகோதரச் செங்குந்தர் சங்கம் திருப்பரங்குன்றம்.

இச்சங்கத்தின் ஆரம்ப விழாவிற் கென சென்ற 25-5-30உ மதுரையிலிருந்து வண்டியூர் செங்குந்தர் சங்கத்தலைவர் திரு. மா. குப்புசாமி முதலியார் அவர்கள் மதுரை செங்குந்தர் சங்க உபதலைவர் திருவாளர் ரா. ம. து. ஆறுமுகமுதலியார் அவர்கள், ஷை சங்கக் காரியதரிசிகள் ஷை இளைஞர் சங்கக் காரியதரிசிகள் போக்கிஷதார் சென்னை மெடிகல் ஸ்டோர்ஸ் ஏஜண்டு திரு. வெ. சம்பந்த முதலியார், சேலம் கே. மாரிமுத்து முதலியார் இன்னும் பலரும் பகல் 1 மணிக்கு இவ்வூர் கலந்து சேர்ந்தனர். அனைவரையும் இவ்வூர் செங்குந்தப் பிரமுகர்கள் மேளதாளத்துடன் வரவேற்று புஷ்ப ஆரம் சூட்டி முக்கிய தெருக்களின் வழியாக செங்குந்தர் மடத்திற் கழைத்துச் சென்றனர். வந்திருந்தாரனைவருக்கும் நல் விருந்தளிக்கப்பட்டது. மாலை 3-30 மணிக்கு ஷை மடத்தில் சங்கத்திறப்பு விழாக் கூட்டம் ஆரம்பமானது. திரு. P. V. முத்துக் கருப்ப முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகித்தனர். திரு. ராம. து. ஆறுமுக முதலியார் அவர்கள் சங்கத்தைத் திறந்து வைத்தனர். அப்பால் செங்குந்தகுலதிலகர் கவிச்சக்கரவர்தி, ஒட்டக்கூத்தப் பெருமானின் திருவுருவப் படத்தை மதுரை திரு. எம். அங்குசாமி முதலியாரவர்கள் திறந்து வைத்தனர்.

மாணவர்கள் சுப்பிரமணியனும் மாணிக்கமும் 'பொது விஷயம்' என்பது பற்றி ஓர் அரிய சம்பாஷணை நிகழ்த்தினர். அப்பால் 'சமூக முன்னேற்றம்,' 'கல்வி', 'கைத்தொழில்', 'சங்கத்தின் நோக்கம்', 'மதுவிலக்கு' 'கதர்', 'பத்திரிகையின் பயன், 'ஆசாரம் என்பன பற்றி திருவாளர்கள் மா. குப்புஸாமி முதலியார், மாணுக்கன்வீரப்பன் சர்மா அய்யர், எஸ். மாணிக்க முதலியார் இளைஞர் பிச்சை, எம். அங்குஸாமி முதலியார், மகாலிங்க முதலியார் முறையே சொற் பொழிவு நிகழ்த்தனர் !

கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாளர் சு. ஆறுமுக முதலியார்—தலைவர்
" பெ. வெ. குப்பு முதலியார்-உபதலைவர்
" ந. பழனிசாமி முதலியார் காரியதரிசி
" ரா. கு. ராமு முதலியார் உபகாரியதரிசி
" சி. வெ. குப்புஸாமி முதலியார் பொக்கிஷதார்

இதர 7. கனவான்கள் நிர்வாக சபைஅங்கத்தினர்.

பின் தலைவர் அவர்கள் முடிவுரை கூறியதும் சென்னைத் தலைச் சங்கத்தின் கிளையாக இச்சங்கத்தை அங்கீகரித்துக் கொள்ள வருட மொன்றுக்கு

ரூபாய் ஐந்து அனுப்புவதாகத் தீர்மானிக்கப் பட்டது.

கூட்டத்தில் மதுரை எம். அங்குஸாமி முதலியார் அவர்கள் தம் செலவில் இச்சங்கத்திற்கு 'ஆனந்த விகடன்', 'அமிர்தகுணபோதினி' என்றும் இரு மாதப் பத்திரிகைகளை இனாமாக அனுப்புவதாய் வாக்களித்தனர்.

பிறகு சபையினருக்கு காரியதரிசி வந்தனோபசாரம் கூறினார். யாவருக்கும் சந்தன தாம்பூலம், கற்கண்டு வழங்கப்பட்டு இரவு 7. 45 மணிக்குக்கூட்டம் இனிது நிறை வேறியது. சமார் 300 பேர்கட்கதிகமாக வந்திருந்தனர். பெண்மக்கள் திரளாக வந்திருந்தது இவண் குறிப்பிடத் தக்கது.

குறிப்பு: ஷை சங்கத்திற்கு ஒட்டக் கூத்தர் திருவுருவப் படமும் ஈட்டி எப்பெழுது என்ற சிறு புஸ்தகங்கள் ஒன்பதும் 9 மாணவர்களுக்கு திரு. மா. குப்புஸாமி முதலியாரவர்கள் இனாமாக வழங்கியது போற்றத் தக்கது.

P. V. முத்துக் கருப்ப முதலியார்
சங்க ஸ்தாபனக் கூட்டத் தலைவர்

## "வடாற்காடு ஜில்லா" சித்தாத்தூர்.

18-6-30 இரவு 7-மணிக்கு செங்குந்தமித்திரன் பிரசாரகர் சைவத்திரு. தி. அ. சண்முகமுதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்த மஹா ஜனக்கூட்டம் ஒன்று நடந்தேறியது. அவ்வமயம் திரு V. K. பொன்னுசாமி முதலியார் அவர்களால் தமிழ் மறை ஓதப்பெற்ற பின், தலைவர் 'கல்வி, முன்னேற்றம், ஒற்றுமை, நம் நாடு' இவற்றைப் பற்றியும், 19-6-30 இரவு 'ஆண் பெண் இருபாலர்களுக்கும் கல்வி அவசியம்' 'கிளைச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியம்' என்பவைபற்றியும் நீண்ட உபன்யாசங்கள் தினமும் 12-மணி வரை தெளிவாகச்செய்து அறிவுறுத்தினார்கள்.

இவ்வூர் போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலைத் தலைமை ஆசிரியரும் இக்கிராமத்திற்குப் பேருபகாரியுமாகிய வித்வான் சைவத்திரு. கோவிலூர் V. குப்புசாமி முதலியார் அவர்கள் மேற் கண்ட விஷயங்களைத் தொடர்ந்து பேசி மஹா ஜனங்கள் தலைவர் கூறியபடி நடந்து நம்குலத்தை முன்னேற்றுவிப்பது தான் நாம் தலைவர்களுக்குச் செய்யும் பிரதி உபகாரம் என்று பேசினார்கள். மேலும் நமது சங்கத்தின் சார்பில் சென்னை உயர்தர கலாசாலையில் பயிலும் F. A. மாணவர் A. தம்பிரான் அவர்களும் அவற்றை ஒட்டிப்பேசினர். வந்தனோபசார வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தலைவர்களின் உபதேசப்படி கூடிய சீக்கிரம் இவ்வூரில் செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கம் ஸ்தாபிக்க முயற்சி செய்யப்பெற்று வருகிறது. இது முற்றுப்பெறுமாறு எல்லாம் வல்ல இறைவனாகிய ஸ்ரீ ஷண்முகப் பெருமானை மனமார வாழ்த்துகிறோம்.

N. தாண்டவராய முதலியார்
S. சீனிவாஸ முதலியார்
உபாத்திமார்கள்

## இராமநாதபுரம் ஜில்லா
### மண்டல மாணிங்கம்
### செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின்
### முதலாம் ஆண்டு மகோற்சவக்கொண்டாட்டம்

14-6-30ல இச்சங்கத்தின் முதலாவதாண்டு விழா இவ்வூர்ச் செங்குந்த பாவடித் தோப்பு முன்பாக அமைக்கப்பெற்றிருந்த "செங்குந்த விலா" வெனும் சிங்காரக் கொட்டகையில் சிறப்புடன் நடைபெற்றது.

காலை 9 மணிக்கு கொண்டாட்டத்திற்காக செங்குந்தர்கள் வேலை நிறுத்தம் செய்தபடியினால் சுமார் 500 பேர்கள் ஆண்களும் பெண்களும் கூடியிருந்ததோடு இவ்வூர் போர்டுபள்ளிமாணவமாணவிகளும் கொடிகள் தாங்கினவராய் வரிசை வரிசையாக நின்று தொண்டர் படைகளும் அணிவகுத்தல்போல் நின்று பட்டுக்குடைகள் செண்டாக்கள் முதலிய அலங்காரத்துடனே மேள வாத்தியங்கள் முழங்க உயர்திரு. சிவகெங்கை ராஜா ஹைஸ்கூல் தலைமையாசிரியர். எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார், பி ஏ.எல்.டி., அருப்புக்கோட்டை நகராண்மை கழகத்தலைவர் திரு. சிவசுப்பிரமணிய முதலியார் கூடகுலம் திரு. சுப்பய்யா பிள்ளை ஆகிய பெரியோர்களை வரவேற்று மலர் மாலை சூட்டி ஜேகோஷ்டம் ஒலிக்க அலங்கிர்த மோட்டாரில் ஊர்வலமாக கொட்டகைக்கு அழைத்து வரப் பட்டது.

ஊர் வலத்தின்போது தெருக்களில் தலைவர்களை வரவேற்கும் பல வளைவுத்தோரணங்களும் தென் வாழ்த்து மொழி நீதி மொழி வளைவுகளும் கண்களைக் கவரக் கூடியதும் யாவருக்கும் புதுணர்ச்சியை தரத்தக்கதாகவும் இருந்தது. மதுரை பரமக்குடி அபிராமம் கமுதி அருப்புக்கோட்டைமுதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்ததும் போற்றப்பாலதே. இன்னும் கூட்டத்திற்கு வரமுடியாத நிலைமையில் திருவாளர்கள் திருவாரூர் தி. நா. சபாபதி முதலியாரவர்கள் தந்தியும் திருவனந்தபுரம் ஆர்ட்ஸ்காலேஜ் ஆசிரியர் A.S. முத்தையா முதலியார், தல்லாகுளம் M. அங்குசாமி கல்லூரணி முத்துசாமி முதலியார் முத்துராமலிங்கபுரம் திரு. வேங்கடசாமி ரெட்டியாரவர்கள். மாசாருபட்டி உண்ணாமலைத் தேவர் இராமநாட் தாலூகா ஜில்லா போர்டு மெம்பர் அவர்கள் முதலியோர் கொண்டாட்டத்திற்கு வாழ்த்துக் கூறி லெட்டர் அனுப்பி யிருந்தார்கள்.

அப்பால் கொட்டகையை யடைந்ததும் கொடியேற்று விழாவை திரு. நா. ப. க. இராமசாமி முதலியாரவர்கள் தொண்டர் படைத்தலைவர் திருவண் சொ. குருசாமி முதலியாரவர்கள். "செங்குந்தர் திருக்கொடி ஏற்றம்" என்னும் ஆனந்தக் களிப்பை. இனிமையாகப்பாடி முடித்ததும் செய்த கொடியேற்றும் உபந்யாசம் யாவர் மனதும் கவர்ச்சி கொள்ளும்படியாய்த் நிகழ்ந்து பின் கரகோஷத்துடன் ஈரோடு திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அப்போது இவ்வூர் கைலாசநாதர் கோவிலிலிருந்து மேளவாத்தியங்களுடன் மரியாதை வந்தது.

அதன்பின் வைபத் திறப்பாளர் ஆண்டு விழாத் தலைவர் புத்தகசாலை திறப்பாளர் ஆகியவர்களுக்கு முறையே திரு. வெ. மு. கிருஷ்ண முதலியார். திரு. ஞா. சு. மு. பாதம் பிரியா முதலியார் திரு. அ. இ. மு. சித்திரவேல் முதலியாரவர்களால். வரவேற்பு பத்திரங்கள் வாசித்தளிக்கப் பெற்றன.

அருப்புக்கோட்டை யூனியன் போர்டு சேர்மன் திரு. சிவசுப்பிரமணிய முதலியாரவர்கள் வைபவத்தைத் திறந்து வைத்து கல்வியின் அவசியம், சமூகத்தின் நிலைமை, சங்கத்தின் பயன் 'கைத்தொழில்' ஒற்றுமை முதலியவைகளைப்பற்றி பேசினார்கள். *

தலைவர்கள் எழுந்து தமக்கு இன்று செய்து வரவேற்பானது ராஜாக்களுக்கும் நமது குலதிலகராய் விளங்கும் திருவளர் ம. சண்முகசுந்தர முதலியாருக்கும் திரு. சபாபதி வள்ளலாருக்குமே பொருந்துமென்றும், இவ்வித ஆடம்பரம் நாளது வரை அடைந்தவனல்லன் என்றும், தமது முன்னுரையை முடித்ததும் சங்கக் காரியதரிசி யவர்களால் † அறிக்கை வாசிக்கப்பட்டது. கவிச்சக்கிரவர்த்தி ஒட்டக்கூத்தர் உருவப் படத்தை திரு. பண்டித முத்து முதலியாரவர்கள் உபந்யாஸத்துடன் திறந்து வைத்தார்கள். கூடகுளம் திரு. பி. சுப்பய்யா பிள்ளையவர்கள் செங்குந்தர் புத்தகசாலையைத் திறந்து வைத்துச்செங்குந்தர் நிலைமை கல்வியின் பயன் கிராமப்பஞ்சாயத்து அவசியம் புத்தகசாலையின் நன்மை முதலியவைகளைப்பற்றி தெளிவாகப் பேசி முடித்தார்கள் இதோடு கூட்டம் கலைந்தது.

மறுபடி மாலை 5 மணிக்குத் தலைவர்கள் பிரதிநிதிகளோடு புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டதும் கூட்டம் ஆரம்பமாயிற்று. அப்போது சமூக சீர்திருத்தம் என்பது பற்றி அருப்புக்கோட்டை நாடார் குலமித்திரன் உப அதிபர் திரு. சொக்கலிங்க பாண்டியர் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை முதலியவைகளைப் பற்றியும், கருதி, திரு வீராசாமி நாயுடு அவர்கள் மதுபானம் என்பது பற்றியும் அரிய பிரசங்கங்கள் செய்தனர்.

---

* இது மற்றோரிடத்துப் பிரசுரிக்கப் பெற்றுள்ளது.

† இது அடுத்தமாத மித்திரனில் பிரசுரிக்கப் பெறும்.



தலைவர் முடிவுரையாகத்தமது சமூகத்தின் கல்வியின்மையைக்குறித்தும் அதனால் ஏற்படும் தீயப்பழக்கங்களைக் குறித்துப்பெண் கல்வியின் பிரயோசனத்தைக் குறித்தும் வெகு ஆர்வத்தோடு மக்கள் மனதில் புத்துணர்ச்சியை ஊட்டுமாறு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

கடைசியாகக் காரியதரிசி யவர்கள் தலைவர்களுக்கும் ஏனைய கனவான்களுக்கும் வந்தனம் கூறிப் பூமாலை சூட்ட இரவு 9-மணிக்கு விழா வைபவம் முடிவடைந்தது.

இ. முனியப்ப முதலியார். காரியதரிசி.

## மண்டல மாணிக்கம்,

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாக அங்கத்தினர் போதுக்கூட்டம்.

நாளது 16-6-30உ இரவு 9-மணிக்கு இச்சங்கத்தின் புதுநிர்வாக உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கும் விஷயமாய் வருஷக் கொண்டாட்டக் கொட்டகையில் அருப்புக்கோட்டை பிரபல வியாபாரி ஸ்ரீமான் அ. கு. சி. குழந்தைவேல் முதலியாரவர்கள் தலைமையின் கீழ்க்கூட்டம் ஆரம்பித்து திரு பண்டிதர் மு. கை. முத்து முதலியாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. தலைவரவர்கள் முன்னுரைக்குப்பின் வருஷக் கொண்டாட்ட ரிபோர்ட்டைக்காரியதரிசி யவர்கள் வாசித்துக் காட்டினார்கள். அப்பால் புது வருஷத்துக்கு நிர்வாக சபை உத்தியோகஸ்தர்களை நியமித்து: தீர்மானங்களும் நிறைவேறப்பட்டுக் காரியதரிசியவர்கள் வந்தன உபசாரம் கூற இரவு 11-மணிக்கு கூட்டம் இன்னிசையோடு கலைவுற்றது.

புதிய நிர்வாக உத்தியோகஸ்தர்கள்

1. தலைவர் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்கள்
2. உபதலைவர் ,, நா. சு. கு. நாதசுந்தர ,,
   ,, ,, இ. மா. இளையபெருமாள் ,,
3. காரியதரிசி ,, இ. முனியப்ப ,,
4. உபகாரியதரிசிகள் ஸ்ரீமான் நா. ப. க. ராமசாமி முதலியாரவர்கள்
   ,, ,, கு. பெ. முத்துசாமி முதலியாரவர்கள்
   ,, ,, பு. க. அ. ராமசாமி முதலியாரவர்கள்
5. பொருட் காப்பாளர் ,, நா. ப. க. நாகலிங்க முதலியாரவர்கள்
6. கணக்குப்பரிசோதகர் ,, சு. பா. பொன்னுசாமி முதலியாரவர்கள்
7. வாலண்டர் ,, சு. வெ. குருசாமி முதலியாரவர்கள்

நிர்வாக மெம்பர்கள்

1. ஸ்ரீமான் பண்டிதர் முத்து முதலியாரவர்கள்
2. ,, ஞா. சு. மு. பாதம்பிரியா ,,

3. ஸ்ரீமான் ச. கார்மேக முத்து ,,
4. ,, அம்பலம் இ. மு. சித்திரவேலு ,,
5. ,, வெ. மு. கிருஷ்ண ,,
6. ,, ப. சி. மு. மூக்க ,,
7. ,, கொ. குருசாமி ,,
8. ,, ந. க. நாகலிங்க ,,
9. ,, மு. நா பொன்னுசாமி ,,
10. ,, சி. மு. மு. முருகலிங்க ,,
11. ,, நா. வெ. ராமசாமி ,,
12. ,, அ. வெ. நா. முருகலிங்க ,,
13. ,, க. இராமநாதன் ,,
14. ,, ஜோஜப்டீச்சர் ,,
15. ,, வாழவந்த பண்டாரம் ,,

தீர்மானங்கள்

1. திரு. நா. சு. கு. நாகசுந்தர முதலியார்; நா. ப. க. நாகலிங்க ராமசாமி முதலியாரவர்கள்; மு. கை. முத்துப் பண்டித முதலியார்; மா. சண்முகவேல் முதலியார்; க. ராமநாத முதலியார்; ஆகியவர்கள் சங்கத்தில் புதிய சந்தாதாரராக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

2. நாளதுவரை மெம்பர்கள் செலுத்திவந்த சந்தா 4 அணாவை, 2 அணாவாக ஆக்கத் தீர்மானிக்கிறது.

3. கிளைச்சங்கங்கள் தலைச்சங்கத்துக்கு கட்டும் வருஷாந்தரக் கட்டண விஷயமாய் இரங்கூனிலிருந்து இச்சங்கத்துக்காக, 2-வது ஞுக்கட்டணம் ரூ 10. அநுப்பியது. சென்ற வரவு செலவு கணக்கில் வராததால் அதை சேர்த்துக் கொள்ளவேண்டுமென ரங்கூன் வியாபாரி தி. நா. சு. கு. நா. அவர்கள் கொண்டுவந்ததை ஒப்புக் கொள்ளப்பட்டது.

4. இனிதலைச் சங்கத்துக்கு கிளைச்சங்கமான இச்சங்கத்தின் வருஷாந்தரக் கட்டணம் ரூ. 5 வீதம் செலுத்தி வரவேணுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் தலைவாளர்களால் அடுத்த கூட்டத்தில் அதைப்பற்றி பேசிக் கொள்ளலாமென்று நிறுத்தி வைக்கப்பட்டது.

5. சங்கத்தின் புதுஞு. சட்டதிட்டங்களையும், புதிய அங்கத்தினர்கள் சேர்க்கும் விஷயமாயும் காரியதரிசிகளுக்கு எழுதிசேர்க்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டது. சுபம்

இங்ஙனம்

---

இ. முனியப்ப முதலியார். காரியதரிசி

## வட ஆற்காடு ஜில்லா

## திருவத்திபுரம்.

### ஸ்ரீபானுகவி மாணவர் கழக 2-ஆம் ஆண்டு விழா!

5-6-30 மாலை 6-மணிக்குப் பரிதிபுரம் ஸ்ரீ பானுகவி மாணவர் கழகத்தின் இரண்டாம் ஆண்டின் நிறைவு விழா நடைபெற்றது. அன்பர்கள் திரளாகக் குழுமியிருந்த அவ்வமயம் தமிழ்மறை யோதிய பின், சேயாறு போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் சைவத் திரு. சோ. வீரபத்திரப் பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள்.

தலைவர் அவர்கள் முன்னுரைக்குப் பின் திரு. கோ. பாலசுந்தர நாயகர், தமிழாசிரியர் அவர்கள் "ஆளுடைய பிள்ளையார் அற்புதச் செயல்கள்" என்பது கொண்டு அழகுறப் பிரசங்கித்தார்கள். தலைவரவர்கள் முடிவுரை கூறினது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போன்றிருந்தது. பிறகு காரியதரிசி வந்தனோபசாரஞ் சொல்லி சந்தன தாம்பூலம் வழங்கப் பெற்று சிற்றுண்டி செய்வித்துக் கூட்டம் சுமார் 10-30-மணிக்கு இனிது நிறைவேறியது.

8-6-30 இரவு 8-30 மணிக்கு ஷை கழகத்தினரால் 17-வது கூட்டம் கூடப்பெற்றது. அவ்வமயம் தமிழ் மறை யோதிய பின் திரு தி. அ. ஷண்முக முதலியார், தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கப்பிரசாரகர் அவர்கள் அன்பு கூர்ந்து "மீனம்பிகையின் திருமண"த்தைப் பற்றி உபந்நியசித்தார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் நிறைவேறியது.

ஷை கழகத்திற்குப் பொருளுதவி தந்து 2-ஆம் ஆண்டு விழாவை நடத்திய கருணையாளர்களுக்கு என்றும் நன்றி யுள்ளவர்களாயிருக்கிறோம். காரியதரிசி A. தம்பிரான் முதலியாரும் V. வாசுதேவ உடையாரும் இச்சங்கத்தை ஸ்தாபிப்பதிலும் சோமவாரக் கூட்டங்கள் நடைபெறச் செய்வதிலும் ஆண்டு விழாச் சிறப்புறச் செய்தமையிலும் சிரமம் பாராது செய்த தொண்டை இச்சங்கத்தார் போற்றத்தக்க தொன்றாகும்.

A. தம்பிரான் முதலியார்
T. R. முனியப்ப முதலியார்
காரியதரிசிகள்:

---

## வட ஆற்காடு ஜில்லா

### கலவை ஸ்ரீ சுந்திர விநாயகர் செங்குந்தர்

21-6-30௳ மாலை சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர் திரு. தி. அ. ஷண்முக முதலியார் திரு. வி. ஆரிமுத்து முதலியார் இவரிருவரும் இரவு 7-மணிக்கு இவ்வூர் செங்குந்தர் பொது மடத்தில் திரு D. பாலசுந்திர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிய பொது கூட்டத்தில் 'செங்குந்தர் முன்னேற்றம்' 'சங்கத்தால் விளையும் பயன்' என்றும் பொருள் பற்றி நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் இவ்வூரின் கண் செங்குந்தர் சங்கம் இருத்தல் அவசியமென சங்கம் ஸ்தாபிக்க பெற்றது.

மேற்கண்ட சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் கீழ் வருவாறு தலைவர்
திருவாளர். அ. சு. சின்னசாமி முதலியார் அவர்கள்
உபதலைவர். திருவாளர். தி. க. நடேச முதலியார்
காரியதரிசிகள். திரு. சு. அருணகிரி முதலியார்
,, திரு. எ. முனிசாமி முதலியார்
பொருட்காப்பாளர் திரு. பொ. பொன்னைய முதலியார்

இதர நிர்வாக மெம்பர்கள் 14 கனவான்கள். மேற்கூரிய அங்கத்தினராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

## தீர்மானங்கள்.

1. இச்சங்கத்திற்கு ஸ்ரீ சுந்திர விநாயகர் சங்கமென்ற பெயர் நிருவப் பெற்றது.

2. இக்கூட்டம் பிரதி மாதம் அமாவாசை தோறும் பகல் 2-மணிக்கு மேல் நடத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

3. மெம்பர்கள் பிரதி மாதம் இச்சங்கத்திற்கு 2 அணா சந்தா செலுத்த ஏகமனதாய் தீர்மானிக்கிறது.

4. சென்னை தென்னிந்திய செங்குந்த மகா ஜன சக்கத்திற்கு இச்சங்கத்தை கிளைச் சங்கமாக அமைத்துப்பிரதி ஆண்டு தோறும் ரூபா 5-0-0ஐந்து ரூபா கட்டணமாக செலுத்த தீர்மானிக்கிறது.

5. இச்சங்கத்திற்குச் செங்குந்தர்களே அன்றி மற்ற ஜாதியாரை மெம்பர்களாக ஏற்றுக் கொள்வதில்லை என தீர்மானிக்கிறது.

6. தற்போது நடந்துவரும் இரவு பாடசாலையை இச்சங்கத்தின் சார்பாக நடத்தி வரத் தீர்மானிக்கிறது.

7. சென்னை தலைச் சங்கத்திற்கு அடிக்கடி கடித போக்குவரத்துகளும், இச்சங்கத்தின் குறைபாடுகளையும் பிரதிமாத கூட்டத்தின் அறிக்கைகளையும் எழுதி அனுப்ப பிரசிடெண்டு அவர்களுக்கும் காரியதரிசிகளுக்கும் சகல உரிமைகளையும் இச்சங்கம் கொடுக்கின்றது.

8. பிரதி மாதம் கூடும் நிர்வாக கூட்டத்திற்கு 7. மெம்பர்களுக்குக் குறையாதிருந்தால் கூட்டம் நடத்திவிட தீர்மானிக்கிறது.

எ. முனிசாமி, C. அருணகிரி காரியதரிசிகள்.

---

## கலவை ஸ்ரீ சுந்தர விநாயகர் செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத்தின் 1-வது கூட்டம் 26-6-30-ல் செங்குந்தர் பொது மடத்தில் மாலை 6-மணிக்கு மேல் திரு அ. சு. சின்னசாமி முதலியார் தலைமையின்கீழ் கூடிற்று. அவ்வமயம் தேவாரம் ஒதப்பெற்று தலைவர் முன்னுரையில் சங்க விஷயமாக பேசினர். திரு. வா. ம. கி. பொன்னுனந்த முதலியார் சங்கத்தால் விளையும் பயனென்பதையும் திரு. தா. பரசுராம முதலியார். சூதாட்டலை பற்றியும். திரு தி. க. நடேச முதலியார் மதுபானத்தினால் உண்டாகு மாச்சர்யத்தைப் பற்றியும் மிகவும் விரிவாக உரைத்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கரகோஷத்துடன் இனிது 9-மணிக்குக் கூட்டம் நிறைவேறியது.

அ. சு. சின்னசாமி முதலியார், பிரசிடெண்டு.
எ. முனிசாமி, சு. அருணகிரி காரியதரிசிகள்.

---

## கோவை ஜில்லா விளாங்குரிச்சி
## செங்குந்த வாலிபர் கூட்டுறவு சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டம் ஒன்று ஆனி. மீ 12உ இரவு. 7. 30. மணிக்கு ஸ்ரீ காமாக்ஷி அம்மன் சந்நதியில் K. கிருஷ்ணமுதலியார் அவைத் தலைமையின் கீழ்க் கூடிற்று. அவ்வமயம் சுமார். 50, 60. பிரமுகர்கள் விஜயம் செய்து. இருந்தார்கள். ஷை K. கிருஷ்ண முதலியார் குல முன்னேற்றத்தைப் பற்றி பேசி வாலிபர்களுக்கு ஆசீர்வாதம் கூறினர்: தலைவர் V. A. பழனிச்சாமி முதலியார் குடியால் விளையும் கேடுகளைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினர். தெ. கு. பழனியப்ப முதலியார் சுகாதாரத்தைப்பற்றி பேசினர் தெ. கு. அங்கப்ப முதலியார். கி. த. ராமசாமி முதலியார் தழுவிப் பேசினர்கள். அ. ரங்கசாமி முதலியார் கடவுள் வாழ்த்துக் கூறி சந்தனம், கற்கண்டு, தாம்பூலம் வழங்கி, இரவு 10. மணிக்கு சபை. இனிது. கலைந்தது.

தலைவர். V. A. பழனிச்சாமி முதலியார்
காரியதரிசி. V. S. முத்துச்சாமி முதலியார்

---

## திருநெல்வேலி ஜில்லா
## செங்குந்தரபி விருத்தி சங்கம்.

திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிநாத சுவாமிகளது குருபூஜாதினம் 10-6-30உ செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்குப்பெரிய தெரு பஜனை மடாலயத்தில், முனிசிபல் கவுன்சிலர் உயர் திரு. அ. பெ. திருக்கோட்டீஸ்வர முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் திரு. க. பா. சங்காலிங்க முதலியாரவர்களும் மற்றைய அன்பர்களும் அருணகிரிநாத சுவாமிகளது சரித்திரத்தைப்பற்றிச்சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அன்பர்கள் பலர் வந்திருந்தனர் திருப்புகழ் இடையிடையே ஓதப்பெற்றது.

ப. ச. முருகேச முதலியார்,
ச. கணபதி முதலியார் காரியதரிசிகள்.

---

## சைதாப்பேட்டை
## ஸ்ரீ சண்முக சுப்பிரமணிய திருப்புகழ் சபை.

ஆசிரியர் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் குருபூஜை 10-6-30உ ஷை சபையின் பன்னிரண்டாவது ஆண்டு விழாவும் சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்தில் அடியிற் குறித்தவாறு நடைபெற்றன.

காலை 8-மணிக்குச் சகல மூர்த்திகட்கும் அபிஷேக அலங்கார ஆராதனை.

பிற்பகல் 3-மணிக்கு அருணகிரிநாதருக்கு மகா பிஷேகம் இரவு 8-மணிக்கு அருணகிரிநாதர் திருவுலாக் காக்ஷியும் நடைபெற்றது.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

## பிரமோதூதஸு ஆடிமீ (1930ஸு ஜூலைமீ—ஆகஸ்ட்மீ)

தக்ஷிணாயனம், கிரீஷ்மரிது.

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய கிரகோர்த்தி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | புத | பஞ் 17-40 | பூர 33-0 | அ 33-0 சி | 2 | 0 | சூன் | பூமி | |
| 17 | 2 | வியா | சவ்ஷ் 22-43 | உ 39-20 | சி 60 | 2 | ½ | சூன் | கிழக்கு | |
| 18 | 3 | வெ | சப் 26-20 | ரே 44-8 | அமி 60 | 1 | ½ | அவ்ஷ் | வடக்கு | |
| 19 | 4 | சனி | அவ்ஷ் 28-30 | அ 47-18 | சி 60 | 1 | ½ | நவ | தெகிழ | |
| 20 | 5 | ஞா | நவ 28-33 | ப 48-28 | சி 60 | 1 | ½ | தச | தெமே | |
| 21 | 6 | திங் | தச 26-28 | கி※47-35 | ம 47-35 அ | 1 | ½ | ஏகா | தெற்கு | கிருத்திகை |
| 22 | 7 | செ | ஏகா 22-18 | ரோ 44-38 | அ 44-38 சி | 1 | ½ | துவா | மேற்கு | |
| 23 | 8 | புத | துவா 16-13 | மி 39-33 | சி 60 | 0 | ½ | திர | வடமே | |
| 24 | 9 | வியா | திர 8-45 | தி 33-50 | ம 33-50 அ | 0 | ½ | சது | வடகிழ | |
| ஜூலைமீ 25 | 10 | வெ | சது 0-3 | பு 26-45 | சி 26-45 ம | 0 | 0 | அமா | பூமி | சர்வ அமாவாசை |
| | | | அ● 55-40 | | | | | | | |
| 26 | 11 | சனி | பிர 50-58 | பூ 19-10 | சி 19-10 ம | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 27 | 12 | ஞா | துதி 31-25 | ஆ 11-38 | சி 11-38 ம | 0 | 0 | துதி | வடக்கு | சந்திர தெரிசனம் |
| 28 | 13 | திங் | திரி 22-38 | ம 4-33 | | 0 | ½ | திரி | தென்கி | |
| | | | | பூ 58-23 | ம 4-33 சி | | | | | |
| 29 | பிரமோதூதஸு—ஆடிமீ 14 | செ | சது 14-58 | உத் 53-38 | அ 53-38 சி | 1 | ½ | சது | தெமே | |
| 30 | 15 | புத | பஞ் 8-40 | அ 50-30 | ம 50-30 | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 31 | 16 | வியா | சவ்ஷ் 3-55 | சித் 49-0 | சி 49-0 அ | 1 | ½ | சவ்ஷ் | மேற்கு | |
| | | | | | | | | சப் | | |
| 1 | 17 | வெ | சப் 1-0 | சு 49-18 | சி 60 | 1 | ½ | அவ்ஷ் | வடமே | |
| | | | அவ்ஷ் 59-48 | | | | | | | |
| 2 | 18 | சனி | நவ 60... | விசா 51-20 | சி 60 | 2 | ½ | நவ | ஆகாசம் | |
| 3 | 19 | ஞா | நவ 0-23 | அநு 54-50 | ம 60 | 2 | ½ | தச | ஆகாசம் | |
| 4 | 20 | திங் | தச 2-23 | கே 59-40 | சி 60 | 2 | 0 | ஏகா | பூமி | |
| 5 | 21 | செ | ஏகா 5-38 | மூ 60... | அமி 60 | 2 | 1 | துவா | கிழக்கு | |
| ஆகஸ்ட்மீ 6 | 22 | புத | துவா 9-53 | மூ 5-20 | ம 5-20 அ | 2 | 1 | திர | வடக்கு | |
| 7 | 23 | வியா | திர 14-53 | பூர 11-48 | சி 60 | 2 | 1 | சது | தெகிழ | |
| 8 | 24 | வெ | சது 20-23 | உத் 18-45 | சி 18-45 ம | 2 | 1 | ... | தெமே | வரலக்ஷ்மி விரதம் |
| 9 | 25 | சனி | ○ 26-13 | தி 18-45 | சி 60 | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 10 | 26 | ஞா | பிர 32-13 | அ 25-58 | ம 33-25 சி | 2 | 1 | பிர | மேற்கு | [ஆவணி அவிட்டம் |
| 11 | 27 | திங் | துதி 38-13 | ச 40-50 | சி 40-50 ம | 2 | 1 | துதி | வடமே | |
| 12 | 28 | செ | திரி 43-58 | பூர 47-58 | ம 47-58 அ | 2 | 1 | திரி | வடகிழ | |
| 13 | 29 | புத | சது 49-0 | உத் 54-30 | சி 54-30 ம | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 14 | 30 | வியா | பஞ் 53-10 | ரேவ 60... | சி 60 | 2 | 0 | பஞ் | பூமி | |
| 15 | 31 | வெ | சவ்ஷ் 56-5 | ரேவ 0-8 | அமி 60 | 2 | 0 | சவ்ஷ் | கிழக்கு | |
| 16 | 32 | சனி | சப் 57-20 | அஸ் 4-28 | சி 60 | 2 | ½ | சப் | வடக்கு | |

## உள்ளடக்கம்.


| | பு |
|---|---|
| கடவுள் வணக்கம் | 274 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 275 |
| ஒழுக்கப் பகுதி | 276 |
| குலமுன்னேற்றப் பகுதி—நமது சமூக முன்னேற்றம் | 277 |
| சிதம்பரத்தில் செங்குந்தர்கள் கொடி யேற்றுவதேன் | 280 |
| இரக்கம் இன்றி யமையாதது | 282 |
| சுகாதாரப் பகுதி—குடியால் விளையும் கேடுகள் | 284 |
| மாதர் பகுதி—செங்குந்த மித்திரன் கும்மி | 289 |
| இளைஞர் பக்கம்—ஒளவைப் பிராட்டியும், ஆறுமுகனும் | 290 |
| செங்குந்த யாத்திரை வாசி | 292 |
| கிருபங்கள் | 295 |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உபகாரச் சம்பளத்தினை 1930—31 வூத்தில் பெற வேண்டியவர்களின் ஜாபிதா | 289 |
| அனுதாபம் | 300 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 301 |
| ஆனங்கூர் திருமணவிழா நன்கொடை விபரம் | 303 |
| பஞ்சாங்கம் | 304 |


---

## தலைச்சங்கத்துக்குத் திருமண நன்கொடை வரவு

### திருவாரூர்

1. திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் குமாரர் திருமணத்தின் போது ரூ. 10
2. திருவாளர் S. K. M. காயாரோகண முதலியார் குமாரர் திருமணத்தின் போது ரூ. 10

### கீழையூர்

3. திரு. சொக்கலிங்க முதலியார் மூலம் ரூ. 2

### திருவார்வுடையார் கோவில்

4. திரு. P. M. வையாபுரி முதலியார் மூலம் ரூ. 5

### பொன்மலை

எனது சகோதரரும், வாழுமங்கலம் செங்குந்த சமரச சங்கத்தின் பிரசாரகருமான S. I. R. இளார்க்கு பிட்டராகிய திரு. வீரபத்திர முதலியாருக்கும், வலங்கைமான் வா. நா. உத்திராபதி முதலியார் குமாரத்தி திருநிறைச் செல்வி அஞ்சலம்மைக்கும் பிரமோதூதவூ ஆனிமீ 23வ இவ்வூர் லோகோ டிபார்ட்மெண்டு செங்குந்தத் தலைவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்து முகூர்த்தம் நடைபெற்றது.

அச்சமயம் கிளைச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் ஒற்றுமையின் பயனைப்பற்றியும் ஒர்க்ஸ்மானேஜர் ஆபீஸ் திரு. J. சிவகுருநாத முதலியார் அவர்கள் விளக்கிப் பேசியதின் பயனாய்ச் சங்கம் ஸ்தாபித்து உத்தியோகஸ்தர்களைக் கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப் பெற்றது. தலைச்சங்கத்திற்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப் பெற்றது.

பொன்மலை கா. ம. தரும முதலியார்.

### குறிஞ்சிபாடி குப்பம்

3-7-30-ல் விழுப்புரம் தாலுக்கா, தெ. புதுப்பாளையம் திரு. அருணசல முதலியார் அவர்கள் குமாரர் திருநிறைச் செல்வர் அ. குப்பசாமி முதலியாருக்கும் கூடலூர் தாலுக்கா குறிஞ்சிபாடி குப்பம் திரு. பா. ப. நாராயணசாமி முதலியார் அவர்கள் குமாரத்தி திருநிறைச் செல்வி கிருஷ்ணவேணி அம்மாளுக்கும் குறிஞ்சிபாடி குப்பத்தில் நடந்தேறிய திருமண விழாவில், கண்டாச்சிபுரம் சைவ சித்தாந்தத் தலைவர் திரு. வை. ச. இராமலிங்கமுதலியார் அவர்களால் தம்பதிகளுக்கு வாழ்த்துப்பா கூறி முடிந்ததும், மணமகன் அவர்களால் நமது சங்கத்திற்கு ரூபாய் 1—0—0 நன்கொடை அளிக்கப் பெற்றது. இவர்கள் குலாபிமானம் மிகவும் பாராட்டத் தக்கது. தம்பதிகள்நீடூழி வாழ்ந்திருப்பாராக. சுபம்.

### கலவை

பிரமோதூத. வூ ஆனி மீ 23-தேதிக்குச் சரியான (7-7-30) அன்று, நா. துரைசாமி முதலியார் மகன் திரு. ராஜமுதலியாருக்கு நடந்த திருமணத்தின் நன்கொடை ரூபா 0-8-0

ஷை தேதியில் நா. முருகப்ப முதலியார் திருமகன் அர்ஜுனமுதலியாருக்கு நடைபெற்ற திருமணத்தின் நன்கொடை ரூபா 0-8-0

ஷை தேதியில் கிருஷ்ணசாமி முதலியார் குமாரர் துரைசாமி முதலியாரின் திருமண நன்கொடை ரூபா. 0-8-0

ஆனி மீ 29-ந்தேதி குப்பாத்த முதலியாரின் திருமகன் சின்னகண்ணு முதலியாருக்கு நடந்த திருமணத்தின் வரவு ரூபா 0-8-0

ஆனி மீ 30-ந்தேதி வெங்கிடாசல முதலியாரின் திருமகன் வீரபத்திர முதலியாருக்கும், செ. அப்பாசாமி முதலியார் திருமகள் தனபாக்கியம் அம்மாளுக்கும் நடைபெற்ற திருமண நன்கொடை ரூபா. 1-0-0

A. முனிசாமி, S. அருணகிரி.

குறிப்பு:—கலவை திருமணங்களின் தொகை தலைச்சங்கத்துக்கு இன்னும் செலுத்தப்படவில்லை

## கடவுள் வணக்கம்.

என்னுளநீ கலந்து கொண்டா யுன்னுள நான் கலந்தேன்
என் செயலுன் செயலுன்ற னிருஞ் செயலென் செயலே
பின்னுள நான் பிதற்றலெலாம் வேறு குறித் தெனைநீ
பிழையேற்ற நினைத்திடிலோ பெருவழக் கிட்டிடுவேன்
அன்னையினுந் தயவுடையா யப்பனெனக் கானாய்
அன்றியுமென் னுருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ் செய்மன்னவனே கருணை
மாநிதியே யெனக் கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே (இராமலிங்க சுவாமிகள்.)

# செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. கருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 7, 238-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றியூர்த் தியாகரொரு பெண்பாற் சுந்தரரை
உற்றுநீ சத்தியம் பண்ணென் றுரைளித்தா ரம்மானை
உற்றுநீ சத்தியம் பண்ணென் றுரைளித்தாராமாயின்
குற்றமுண்டோ வன்பர்மேற் கோபமோ வம்மானை
கோபமேதோ மகிழ்வாய்க் கொண்டிருந்தா ரம்
[மானை.

அக்கரவம் பூண்டிருந்த வங்கயற்கண் ணம்மைபங்கர்
கைக்கொண்டு செத்தகன்றைக் காவிவந்தா ரம்
[மானை
கைக்கொண்டு செத்தகன்றைக் காவிவந்தா
[ராமாயின்
சொக்கர் மதுரைக்குத் தோட்டியோ வம்மானை
தோட்டியென்றே காமனையுஞ் சுட்டெரித்தா
[ரம்மானை.

ஆரவயல் சூழருணை யண்ணாமலை நாதர்
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ரம்மானை
பேருலகில் வண்ணாரப் பெண்கொண்டா ராமாயின்
காரும் புடவை யெல்லாந் தப்பினரோ வம்மானை
தப்பினர் தாருவனத்தார் புடவை யம்மானை.

திருப்பா திரிப்புலியூர் செல்வர் சிவக்கொழுந்தர்
கருப்பாஞ் சிறுயானைக் காய்ந்தனர்கா ணம்மானை
கருப்பாஞ் சிறுயானைக் காய்ந்தனரே யாமாயின்
ஒருத்திக் கிருவருடன் கலப்பே னம்மானை
கலவரோ கன்னிவனங்காவல் கொண்ட ம்மானை.

மன்றாடி யாமென்கண்மா மாசிலாமணியார்
நன்றான முல்லைக்கு நாயகர்கா ணம்மானை
நன்றான முல்லைக்கு நாயகரே யாமாயின்
குன்றாமற் பெண்ணங்கே கொண்டனர்கா ணம்
[மானை
கொண்டபெண்ணோ நல்லகொடி யிடைச்சி
[யம்மானை.

சுந்தரஞ் சேர்தென் குடந்தைச் சோமநாதப்
[பெருமான்
சுந்தரிட மாமிதனைக் கைப்பிடித்தா ரம்மானை
சுந்தரிட மாமிதனைக் கைப்பிடித்தா ராமாயின்
இந்த வுலகதனுக் கேற்குமோ வம்மானை
எற்கு மென்றே கையின் மழுவேந்தினர்கா ணம்
[மானை

அட்டதிக்கெண் கன்னிவனத் தாரப்பரைக் கடலி
இட்ட கற்றூணோடு கரையேறவிட்டா ரம்மானை[ல்
இட்ட கற்றூணோடு கரையேறவிட்டா ராமாயின்
விட்ட கற்றூணீரின் மிதக்குமோ வம்மானை
மிதவாதோமுன் வளைந்து வில்லானு லம்மானை.

தந்தைபிடித் தறியத் தாயானவள் சமைக்க
வெந்த விடக்குய்ந்து மீண்டதுகா ணம்மானை
வெந்த விடக்குய்ந்து மீண்டதுவே யாமாயின்
மைந்த னுறுப்பு மணத்ததோ வம்மானை
மாதையரன் வல்லபத்தான் மணத்ததுகா ணம்
[மானை.

* நாணென்றானஞ் சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணங்கா ணம்மானை
பாணந்தான் மண்டின்ற பாணமே யாமாயின்
சேணார் புரமெரித்த சேவகமே தம்மானை.
சேவகத்தைச் சொல்லச் சிரிப்பல்லோ வம்மானை.

பொன்றிரளுஞ் சித்திரஞ்சூழ் பூம்புகலூர் தன்
[னில் வளர்
தந்திமுகன் பெருவயிரன் சப்பாணி யம்மானை
தந்திமுகன் பெருவயிரன் சப்பாணி யாமாயின்
இந்த வயிற்றுக் கிரையெங்கே யம்மானை
என்றல்லோ வீசனிரக்கலுற்றா னம்மானை

(தொடரும்)

---

*நாணென்றானஞ் சிருக்கு நற்சாபங்கற் சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே—தானுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார்புர மெரித்த நேர்.

இரட்டையர்களாகிய இவர்கள் திருவாரூருக்குச் சென்று சிவதரிசனஞ் செய்து மண்டபத்துக்கு வந்து தங்கி யிருக்குங் காலத்தில் இவருள் ஒருவர் "நாணென்றால்" என்று தொடங்கி "பாணந்தான்" என்னுமளவும் பாடிவிட, மற்றொருவருக்கு அவ்விட்டவிடந் தொடங்கி மற்றதைப் பூர்த்தி செய்யத் தோன்றாமையால் இதனை அம்மண்டபச் சுவரில் எழுதி வைத்து மற்றுஞ் சில திருப்பதிகள் சென்று வணங்கி மீண்டு வந்தபோது காளமேகப் புலவரால் "மண்டின்ற" என்று தொடங்கி 'நேர்' என்று மற்றதும் பூர்த்தி செய்து அடியில் காளமேகன் என்று கையெழுத் திட்டிருப்பதைக் கண்டு வியந்தார்கள் என்றும் இருக்கிறது.